Volume-13
Issue-1

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

ஜனவரி-2020 (ஜமாஅத்துல்அவ்வல்-1441)

விலை ரூ. 20/-




## NPR, NRC, CAA

## பாசிசத்தை மாய்ப்போம்...
## பாரதத்தை காப்போம்...



## இன இழிவிலிருந்து விடுதலை பெற ஓரே தீர்வு இஸ்லாம்

– தந்தை பெரியார்



## காந்தி கொலை

சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயல் 1

بسم الله الرحمن الرحيم

"

மார்க்கத்திலிருந்து
நூஹுக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும், இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)

"


பாசிசத்தை மாய்ப்போம்... பாரதத்தை காப்போம்... - 6

NRC என்ற தேசிய குடிமக்கள் பதிவு இதுவரை இந்தியாவில் என்ன செய்துள்ளது? - 10

Detention Centre என்றால் என்ன? அதன் தொடர்பாக பரவி வரும் செய்திகள் உண்மையா? - 12

போலீசாரின் தாக்குதலால் கையை இழந்த நிற்கும் அலிகர் முஸ்லிம் கல்லூரி மாணவர் - 15

உங்களுக்கு இரண்டு இடம் தான் இருக்கிறது. ஒன்று பாகிஸ்தான் இல்லையென்றால் கபர்ஸ்தான் (சுடுகாடு) - உ.பி காவல்துறை - 16

சிறுவர்களின் ஆடைகளை அவிழ்த்து, அடித்து சித்ரவதைப்படுத்திய - உத்திரபிரதேச காவல்துறையினர் - 18

சிறையிலிருந்து சடலமாக அனுப்பப்பட்ட 65 வயது காஷ்மீரக முதியவர் - 19

பாபரி பள்ளிவாசல் தொடர்பாக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் - 20

காந்தி கொலை சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயல் - 21

வேகமாக பரவிவரும் தடுப்புக்காவல் முகாம்கள் - 24

இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம் - 26

பன்றிக்காய்ச்சலா பதற வேண்டாம் - 32

தன் இறுதி மூச்சு வரை ஜாதீய அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடியவர் தந்தை பெரியார் - 34

முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டிய மிகப்பெரிய எதிரி..? - 44

நான் முஸ்லிமே அல்லாமல் வேறல்ல! - 52

ஷஹீத் -முஹம்மத் அலீ ஜின்னாவின் மகள் மரணம் ... - 55

பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லீம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்... - 56

மகளிர் மன்றம் - 58

இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள் ? - 61



ஜனவரி-2020

# வைகறை
## வெளிச்சம்

(ஜமாஅத்துல்அவ்வல்-1441)

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 8148129887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# பாசிசத்தை மாய்ப்போம்... பாரதத்தை மீட்போம்...

அப்போது இஸ்லாத்தின், ஆட்சி லெபனான் பகுதியில் கிளர்ச்சி, ஆட்சியாளருக்கு எதிராக லெபனானின் ஆட்சித் தலைவர் அலீ அப்துல்லாஹ்பின் அப்பாஸ் - கவர்னர். அந்தக் கலவரத்தை அடக்கிவிட்டார். கிளர்ச்சியைச் செய்தவர்கள் முஸ்லிம்கள் அல்ல. ஓர் அதிரடி முடிவை எடுத்தார் கவர்னர். அது, கிளர்ச்சியில் ஈடுபட்டிவர்களையும், கிளர்ச்சியில் ஈடுபடாத, ஆனால், கிளர்ச்சியில் ஈடுபட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அத்தனை பேரையும் நாட்டைவிட்டு வெளியேற்றி விடுவது என்பதே! அத்தோடு அவர்களின் உடைமைகள் அனைத்தையும் அவர்கள் விட்டுச் சென்றிட வேண்டும்.

ஆட்சித் தலைவரின் இந்த அறிவிப்பு மார்க்க அறிஞர்கள், (இஸ்லாமிய அறிஞர்கள்) சிலரையும் வந்து சேர்ந்தது.

இஸ்லாமிய அறிஞர் ஒருவர், எந்த அடிப்படையில் இந்த முடிவை இஸ்லாமிய ஆட்சித்தலைவர் எடுத்தார் என்பதை ஆராய்ந்தார்.

கிளர்ச்சியாளர்கள், முஸ்லிம்கள் இல்லை என்றாலும் அவர்கள் அநியாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்தார் அந்த மார்க்க அறிஞர், அதனை தடுத்திட வேண்டும் அது நம் கடமை என முடிவு செய்தார்.

ஆகவே, அந்த ஆட்சியாளருக்கு, இப்படி ஒரு கடிதத்தை எழுதினார்

லெபனான் மலைக்குன்றைச் சார்ந்த முஸ்லிமல்லாத சிலரை நீங்கள் நாட்டை விட்டு வெளியேற்றிட முடிவு செய்திருப்பதாக அறிந்தேன். அவ்வாறு நீங்கள் வெளியேற்றிட முடிவு செய்திருப்பதில் பலர் தீங்கொன்றும் செய்யாதவர்கள். அவர்கள் கிளர்ச்சியில் கலந்துகொள்ளவுமில்லை. கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு உதவி செய்யவுமில்லை. இவ்வாறிருக்கு ஷரீஅத்-இன் எந்த வழிகாட்டுதலின்கீழ் அவர்களை வெளியேற்றுகின்றீர்கள் என்பதை எனக்குத் தெரிவியுங்கள்.

ஒரு குறிப்பிட்ட தனிநபர் அல்லது ஒரு குறிப்பிட்டக் கூட்டத்தினர் செய்த தவறுக்காக அதில் ஈடுபடாதவர்களையும், சேர்த்து வெளியேற்றிட ஷரீஅத்தில் இடமில்லை. நீங்கள் அவர்களை அவ்வாறு வெளியேற்றும் போது அவர்கள் வீடுகளை விட்டும், நிலபுலன்களை விட்டும் வெளியேற்றுகின்றீர்கள் என்பதை நினைவில் வையுங்கள். கடிதத்தில் முடித்த அந்த மார்க்க அறிஞர், பின்வரும் வசனத்தின் மூலம் அந்த ஆட்சியாளரை எச்சரித்தார்.

எவன் நேரான வழியில் செல்கின்றானோ. அவன் தன்னுடைய நன்மைக்காகவே நேரான வழியில் செல்கின்றான். எவன் தவறான வழியில் செல்கின்றானோ அவன்

*தனக்கே தீங்கிழைத்துக்கொள்கின்றான். ஒருவருடைய பாவச்சுமையை மற்றொருவன் சுமக்க மாட்டார். (அல்குர்ஆன் - 17:15)*

வேறு வழியில்லை ஆட்சியாளருக்கு அவர் தன் முடிவை கைவிட்டார்.

இப்படி எத்தனையோ முன்மாதிரி மாண்புகளை இஸ்லாத்தின் வரலாற்றில் கண்டிட முடியும். உண்மையைச் சொன்னால், இஸ்லாத்தின் வரலாற்றல் மட்டுந்தான் கண்டிட முடியும்.

வரலாற்றில் வரை இட்டுக் காட்டிட வேண்டிய இந்த நிகழ்வை இன்றைக்கு நம் இந்திய நாட்டில் நடக்கும் அநீதிகளோடு எளிதில் ஒப்பிட்டுப் பார்த்திடலாம்.

சொந்தக் குடிமக்களையே சிறை முகாம்களில் அடைத்து முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்க நடக்கும் திட்டங்களோடு ஒப்பிட்டு பாருங்கள்... மேலே சொன்ன நிகழ்வை.

தங்கள் திட்டங்களை எதிர்ப்பவர்களை எப்படி சித்திரவதைகளுக்கும், சிறைவதைகளுக்கும் உள்ளாக்குகின்றார்கள் என்பதையும் பாருங்கள். அத்தனையும் அநீதி.

மேலே நாம் சொன்ன இறையச்சம் மிக்கவர்கள் ஆட்சியில் அமர்ந்திட வேண்டும். அந்த நல்லவர்களுள் நல்லாட்சியும் மட்டுமே இன்றைய இந்தியா எதிர்நோக்கும் பிரச்சனைகளை தீர்க்கும்.

இறைவனை நம்பிக்கை கொண்டவர்களே! நீதியை நிலை நாட்டுவதில் நீங்கள் அல்லாஹ்வுக்கு உறுதியான சாட்சியாக இருங்கள். எந்தவொரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு. நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறை பக்திக்கு மிகவும் நெருக்கமானதாகும்.

*“நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம். நன்கு, அறிந்தவனாக இருக்கின்றான்.” (அல்குர்ஆன் - 5:8)*

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டவரகளே!

*“நீங்கள் நீதியின் மீது நிலைத்திருங்கள். அது உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாக இருங்கள். அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் உண்மையையே சாட்சியாக கூறுங்கள்!”*

*(அல்குர்ஆன் - 4:135)*

என்னே மகோன்த வழிகாட்டுதல்கள்?

**இந்த நீதியை நிலைநாட்டிடுவோம்,**
**பாசிசத்தை மாய்ப்போம்!**
**பாரதத்தை மீட்போம்.**

**வைகறை வெளிச்சம்**
**இதழில்**
**விளம்பரம் செய்து**
**பயனடையுங்கள்**




# NPR, NRC, CAA
# பாசிசத்தை மாய்ப்போம்... பாரதத்தை காப்போம்...

குடியுரிமை திருத்த சட்டம் 2019-க்கு எதிராக நாடெங்கும் மக்கள் போராடி வருகின்றார்கள். அவர்களின் போராட்டத்தில் ஓர் எழுச்சியும், விழிப்பும் புரிகின்றது. ஆனால் பிரதமர் மோடி இந்தச் சட்டத்திற்கு எதிராகப் புயலை கிளப்புபவர்கள், அவர்களின் ஆடைகளைக் கொண்டு அறிந்திடலாம் என எகத்தாளமாகக் கூறி வருகின்றார்.

இந்தப் போராட்டம், இந்தப் புயல் - மதம், ஜாதி இவைகளைக் கடந்து மக்கள் போராட்டமாக நடந்து வருகின்றது.

மக்கள் போராட்டமாக மட்டுமல்ல, இளைஞர்களின் போராட்டமாக, மாணவர்களின் போராட்டமாக நடந்து வருகின்றது. இளம் பெண்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் இப்படி அனைத்துத் தரப்பாரும் பெருமளவில் போராடி வருகின்றார்கள்.

கலைஞர்களும், கலை உலகத்தாரும், எழுத்தாளர்களும் இதில் கலந்துகொண்டு வருகின்றார்கள். இப்படி சமுதாயத்தின் அனைத்து அங்கத் தவர்களும் கலந்துகொள்ளும் போராட்டமாக அது மாறி ஊர்களையும் உலகத்தையும் உலுக்கி வருகின்றது.

அதேபோல மோடி இன்னொன்றையும் கூறி வருகின்றார். அது, இந்தியர்கள் யாரும் இதைக்கண்டு அச்சப்பட வேண்டியதில்லை எனக் குறிப்பிடுகின்றார். ஊரையும் உலகையும் ஏமாற்றுவதில் வெற்றிகண்டு இந்தச் சங்கப் பரிவாரத்தினரால், இந்த முறை இவர்கள் இந்தியக் குடிமக்களையே ஏமாற்றிட இயலவில்லை. இந்தியக் குடிமக்கள் இவர்கள் இந்தியர்கள் எனச் சொல்வது, சங்கப் பரிவாரத்தின் பரிபாஷையில்தான் மிகவும் எளிதாகக் கண்டு கொண்டார்கள். சங்கப்பரிவாரத்தின் பரிபாஷையில் இந்தியர்கள் என்பது முஸ்லிம்கள் அல்லாதவர்களைத்தான் என்பது எல்லோருக்கும் - எல்லாக் குடிமக்களுக்கும் புரிகின்றது. அதனால்தான் எல்லோரும் போராடுகின்றார்கள்.

இனப்படுகொலைகள் புகழ் மோடியும், ஆயிரம் தலை வெட்டி அமித்ஷாவும் அவர்களின் பரிவாரமும் எதை நோக்கிச் செல்கின்றார்கள் என்பதை மக்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றார்கள். அசாமில் இவர்கள் தேசிய குடிமக்கள் பதிவில் செய்த தகிடுத் தத்தங்களை மக்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றார்கள். வேறு சொற்களால் சொன்னால் அவை மக்களையே நன்றாகவே சென்று சேர்ந்திருக்கின்றது. இவர்கள் ஆரியவர்க் இந்து ராஷ்டிராவைத்தான் கொண்டு வருகின்றார்கள் என்ற செய்தி!

இந்தியர்கள், குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 - ஐப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்பதை நாம் சற்று நிதானமாகவே சீர் தூக்கிப்

பார்க்க வேண்டும். இவர்கள் சொல்வதைப் பார்த்தால் இவர்கள் சில மக்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் உதவிதானே செய்கின்றார்கள் யாரிடமிருந்து எதையும் பறிக்காதே எனவும் தோன்றும்.

மூன்று நாடுகளிலிருந்து வரும் துன்புறுத்தப் பட்ட சிறுபான்மையினரை இது பாதுகாக் கின்றது அவ்வளவு தானே. இது முஸ்லிம்களைக் குறி வைக்கின்றது என எப்படிச் சொல்லிட முடியும்.

நிச்சயமாக இந்தச் சட்டம் பாகிஸ்தான், வங்காளதேஷ், ஆப்கானிஸ்தான் இங்கிருந்து ஷியாக்களை, அஹ்மதியாக்களையே நிச்சயமாக ஏற்றுக்கொள்ளது. துன்புறுத்தப்படுபவர்கள் இந்துக்களாகவோ, சீக்கியர்களாகவோ, ஜெய்னர்களாகவோ, பாரசீகர்களாகவோ இருந்தால் மட்டுந்தான் இந்தச் சட்டம் அன்பு செலுத்தும், அரவணைக்கும், ஆறுதல் தரும். இது இந்தச் சட்டம், கொடுமைக்குள்ளாக்கும். முஸ்லிம்களுக்கு எதிரானது. பாரபட்சம் பார்க்கும்.

(வங்காள தேசத்தில் தூய்மையான இஸ்லாத்தைப் பேசும், ஜமாஅத்தே இஸ்லாம் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள். செய்யாதக் குற்றங்களுக்காக வங்காள தேசத்தில் கொடுமைப் படுத்தப்படுகின்றார், தூக்கிலிடப்படுகின்றார். அவர்கள் இந்தியாவுக்கு வந்தால் The benevolonce of the Act does not for them

இந்தச் சட்டத்தின் கருணை அவர்களுக்கு இல்லை. சட்டத்தின் கருணை என நாம் ஏன் சொல்லுகின்றோம் என்றால் ஆரியவர்த் இந்துத்துவ வாதிகள் அப்படித்தான் இந்தச் சட்டத்தை அழைக்கின்றார்கள்.

பாசிசத்தைப் பாதையாக்கிக் கொண்டவர் கள் கூட்டுக் கொலைகளையும், இன சுத்திகரிப்பு களையும் செய்யும் போதும் அவை கருணையின் வடிவம் என்றே கரைந்துருகுவார்கள்.

இந்த வகையிலேதான் ஆயிரம் தலை வெட்டி நமது நாட்டின் உள்துறை அமைச்சர் அமித்ஷா, நாங்கள் CAA என்ற குடியுரிமைச் சட்டத்தில், முஸ்லிம்கள் என்ற சொல்லையே சேர்க்கவில்லையே எனக் கூறி வருகின்றார். ஆனால் மக்கள் இந்தச் சட்டத்தின் பின்னனியையும், அது ஆரிவர்த் சனாதனத்தில் சென்று முடியும் என்பதையும் நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றார்கள்.

## NPR

இதை எவ்வளவு ஆழமாக மக்கள் புரிந்து வைத்திருக்கின்றார்கள் என்றால், இப்போது *2021* மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான பூர்வாங்க பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதில் பல தேவை இல்லாத கேள்விகள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்தக் கேள்விகள் தேசிய குடிமக்கள் பதிவேட்டிற்கான (NRC) அடிப்படையாக அமைகின்றன. இதனால் இந்த 'NPR' என்ற தேசிய மக்கள் தொகைப்பதிவேட்டையே நிறுத்தி வைத்திருக்கின்றார்கள்.நமது மேற்கு வங்க மாநிலத்திலும், கேரள மாநிலத்திலும்

ஆக CAA, NRC என்பனவற்றைப் பற்றி இன்றைக்கு நாட்டைப் பற்றிப் பிடித்திருக்கும் பாசிஸ்ட்டுகள் சொல்பவை அனைத்தும் பொய். ஆனால் இந்த பாசிஸ்ட்டுகளை மக்கள் நம்பவில்லை அதனால்தான் இந்தப் போராட்டம்.

## CAA & NRC எது முதலில் ?

மோடி வகையறாக்கள், தேசிய குடிமக்கள் பதிவேட்டை முதலில் அசாமில் கொண்டு வந்தார்கள். அதில் பல லட்சம் இந்துக்களும் விடுபட்டுப் போனார்கள். இந்துத்துவ வாதிகள் கொண்டுவந்த சதி திட்டத்தில் இந்துக்களே குடியுரிமை பெற இயலாத நிலைக்குப் போய்விட்டார்கள்.

இந்துத்துவ பாசிஸ்ட்டுகளின் சதியில் இந்துக்களே சிக்கிக் கொண்டார்கள். ஆதலால் அந்த இந்துக்களுக்கு முதலில் குடியுரிமைக் கொடுத்தாக வேண்டும். அதனால் முதலில் CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்தை முதலில் செயல்படுத்துவார்கள். அதில் இந்துக்கள், சீக்கியர்கள், பௌவுத்தீர்கள், பார்சீகள், கிருத்துவர்கள் இவர்களுக்கெல்லாம் முதலில் குடியுரிமையை வழங்கி விடுவார்கள். முஸ்லிம்கள் மட்டுமே அதில் அந்நியர்களா வார்கள்.

அசாம் மாநில அரசால், Illegal Migrants சட்டத்திற்குப் புறம்பாக, குடியேறியவர்கள் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இந்துக்களுக்கும் குடியுரிமைக் கொடுத்து விடுவார்கள். இதனை



அசாம் மக்கள் ஏற்கவில்லை அதனால் அந்த மக்கள் பெரிய அளவில் போராடி வருகின்றார் கள். தொலைத் தொடர்பு சேவைகள் அனைத் தும் துண்டிக்கப்பட்டு இருந்தன பல நாட்களாக.

மொத்தத்தில் இந்துக்கள் என்ற பெயரில் முஸ்லிம்களைத் தவிர எல்லோருக்கும் குடியுரிமை வழங்கி விடுவார்கள் CAA வழியாக. முஸ்லிம்கள் தேசமற்றவர்களாக விடப்படு வார்கள்.

இப்படி CAA என்ற குடியுரிமை திருத்த மசோதா வழியாகத்தான் முஸ்லிம்கள் மட்டும் தனிமைப்படுத்தப்பட்டு அலைக்கழிக்கப்படு வார்கள். ஆகவே CAA இருந்தால்தான் சங்கப் பரிவாரத் திட்டங்கள் செயல்படும். அதன்பின் தான் NRC என்ற தேசியப் பதிவேடு செயலில் வரும். அது நாட்டில் வாழும் குடிமக்களை இரண்டாகப் பிரிக்கும், ஒன்று குடிமக்கள் இன்னொன்று சட்டத்திற்குப் புறம்பாக வந்து குடியேறிவர்கள். (இவர்கள் முஸ்லிம்களாக மட்டும் இருப்பார்கள்) அதன்பின்னர் அவர் களின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும்.

ஆக CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டம், NRC, (or) NRIC என்ற தேசிய இந்திய குடிமக்களின் பதிவு. இவை இரண்டும் இணைத்தால் இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் சட்ட விரோதமாக வந்தவர்கள் என்றாகிவிடும். CAA & NRC க்குப் பின் எழும் கேள்விகள்?

இந்துக்கள் என அழைக்கப்படுபவர்கள் சீக்கியவர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், பாரசீகர்கள், கிருஸ்தவர்கள் இவர்களுக்குக் குடியுரிமை வழங்கிய பின் முஸ்லிம்கள் மட்டுமே எஞ்சி இருப்பார்கள். இவர்கள் குடிமக்கள் அல்ல என்றாக்குவார்கள்? இவர்களை என்ன செய்வார்கள். இவர்களை பாதுகாப்பு முகாம் களுக்கு அனுப்புவார்களா? அல்லது அவர்களுக்கு இரண்டாந்தர குடியுரிமை ஒன்றை வழங்கு வார்களா? an infeuor Status in the Hierarchy of Citizenship, Where non muslims occupy of Higher Position? (The Hindu Dec-19, 2019)

## ஒருவேளை அரசாங்கம் இப்படி அறிவித்தால்?

இப்படி அறிவித்து அந்தச் சட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டால் கூட இந்தச் சட்டம், சட்டப் புத்தகத்தில் இருந்தால் கூட அது ஆபத்தானது. (இவை புரிந்துகொண்டால்தான், இந்தச் சட்டம் மற்றாகப் பின் வாங்கப்பட வேண்டும் என மக்கள் போராடுகின்றனர்.)

சட்டப் புத்தகத்தில் இந்தச் சட்டம் இருப்பது, எப்படி ஆபத்தானது என்றால், தொடர்ந்து பிரச்சாரத்தை செய்வதற்கு ஏதுவாக அமையும். (It is an Tremendous enabler of hate speech. The Hindu 19-12-2019)

இந்த உலகில் இனப்படுகொலைகள், இன சுத்திகரிப்புகள் தடுக்கும் வழிகளை இவற்றை ஆய்வு செய்த, வல்லுநர்கள், "The Worlds's Foremost Experts on Genocide Prevention Consider Hate Speecit, The Prime Harbinger of Genocide" இந்த வெறுப்புப் பிரச்சாரங்கள்தாம், இனப்படு கொலைகளைக் கொண்டு வருவதுஎன்கிறார்கள். (G.Sampath The Hindu, Dec-19,2019)

## உலக அரங்கில் நடந்த இதர இனப்படுகொலைகள்

ஜெர்மனியில், யூதர்கள் அதிகமாக இனப் படுகொலைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

இதனை Holocaust. பேரினழிவு என அழைப் பார்கள். யூதர்கள் அங்கே Gas Chambers - என்ற விஷ வாயு அறைகளில் வைத்துக் கொள்ளப் பட்டார்கள் எனவும் கருதப்படுகின்றது. இந்த பேரின அழிவு திடுதிப்பும் என தொடங்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக அவை நெடுநாள் வெறுப்பும் பிரச்சாரத்திற்குப் பின்பும், சதி திட்டங்களுக்குப் பின்பும் நடத்தப்பட்டவைதான்.

இந்த உண்மையைப் பல ஆய்வுகள் வழியாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகர் ஆடாமாடெய்ங் (Adama Dieng) என்பவர், கண்டுபிடித்துள்ளார். இவர் ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளருக்கு வெறுப்புப் பிரச்சாரத்தைத் தடுப்பது சம்மந்தப்பட்ட விவகாரங்களில் ஆலோசகராக இருப்பவர். இவர் இந்த ஆலோசனையை இப்போது வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டில் நடந்துகொண்டிருக்கும் அரசியல், அதனுடன் CAA : குடியுரிமை திருத்தச் சட்டம், NRC (or) NRIC என்ற தேசிய இந்திய குடிமக்களின் பதிவேடு. இவை இரண்டும், இந்த வெறுப்புப் பிரச்சாரத்தின் அரசியல் ஆயுதங்கள். அதாவது ஓர் இனப்படு கொலைக்கு இட்டுச் செல்லும் வெறுப்புப் பிரச்சாரத்தின் ஆயுதங்கள், (ஆதாரம் : G.Sampath in the Hindu. Dt. Dec-19,2019. Are the Fears Over The CAA, Misplaced?)

## நிர்வாக ரீதியாக

நிர்வாக ரீதியாகப் பார்த்தால் CAA & NRC இவை, அரசியல் நிர்ணயச் சட்டங்கள், இனப் படுகொலைகள் நிகழாமல் தடுக்கத் தந்திருக்கும் பாதுகாப்புகள் ஆகியவற்றை இல்லாமல் ஆக்கிவிடுகின்றன. இன்று நம் நாட்டில் நடந்து கொண்டிருக்கும், பெரும்பான்மை பயங்கரவாரத்தின் கைகளில் இவை இருப்பது ஆபத்தானது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டில் இவை அடாத சட்டங்கள்.

## சிலரை விட்டுவிட்டு, சிலரை குடிமக்க ளாக்கும் சட்டங்களின் முன் மாதிரி.

சிலரை விட்டுவிடும் வகையில் இயற்றப் படும் குடியுரிமை சட்டங்கள் என்ன செய்யும்? என்பதற்கு சில வரலாற்றுச் சான்றுகள் இருக் கின்றன. 1935-இல் ஜெர்மன் நாட்டில் (Reich CItizenship Law) ரெய்ச் குடியுரிமைச் சட்டம் என ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இவை யூதர்களைக் குடியுரிமை அற்றவர்களாக ஆக்கியது. அதன்பின்னர் யூதர்களுக்கு என்ன நடந்தது என்பதை உலகம் அறியும்.

இன்றைக்கு இந்தியாவை ஆண்டு கொண்டி ருக்கும் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள், நீண்ட நாட்களாகவே இஸ்ரேலின் பயற்சியின் கீழும் அவர்கள் ஆலோசனையின் படியும் இயங்கி வருபவர்கள் என்பதை இங்கே நினைவுவில் கொள்ள வேண்டும்.

நமது அண்டை நாடாம் மியான்மரில் 1982-இல் கொண்டுவரப்பட்ட குடியுரிமை சட்டம் ரோஹினியா முஸ்லிம்களை தேச மற்றவர்களாக ஆக்கியது. இந்தச் சட்டம் மியான்மரில் உள்ள அராக்கன் பகுதிக்கு மட்டுமே செல்லும் எனப் பேசப்பட்டது. ஆனால் அது ரோஹினியா முஸ்லிம்களைக் குறி வைத்தது. இனப் படுகொலைகளுக்கு உள்ளாக் கியது என்று சர்வதேசிய நீதி மன்றத்தில் இனப்படுகொலைகளுக்காக, மியான்மர் நாட்டு விசாரணையை எதிர்கொண்டு நிற்கின்றது.

### முடிவாக

எந்த இந்தியரும் குடியுரிமையை இழக்க மாட்டார்கள் என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் CAA & NRC இவற்றிற்கெதிராகப் போராடுபவர்கள், நன்றாக அறிவார்கள். இறுதி யில் பெருவாரியான முஸ்லிம்கள் “இந்தியர்கள்” இல்லை என்றாக்கப்படுவார்கள் என்பதே.

முஸ்லிம்கள் குடியுரிமையை இழந்த பின்பும், இந்திய பாசிஸ்ட்டுகள், அரசு எந்த இந்தியர் களும் குடியுரிமையை இழக்கவில்லை என்று சொல்லிக்கொண்டே இருக்க முடியும். ஏனெனில் அரசுதான் யார் குடிமகன் என்பதையும், யார் குடிமகன் அல்ல என்பதையும் முடிவு செய்யும்.

ஆகவே CAA என்ற குடியுரிமை சட்டத்தைப் பின்வாங்குவதே ஒரே வழி!

இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி எல்லாப் பத்திரிகைகளும் பிரதமர் இப்படிப் பொய்ச் சொல்லக்கூடாது எனச் சொல்லி தலையங் களைத் தீட்டின. அதன் காரணமாக இரண்டு நாளைக்கு காணமற் போய்விட்டார். மேலே நாம் மேற்கோள் காட்டிய கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டது.

- MGM




# NRC என்ற தேசிய குடிமக்கள் பதிவு இதுவரை இந்தியாவில் என்ன செய்துள்ளது?

NRC என்ற தேசியப் பதிவேட்டிற்கு எதிராக ஏன் இவ்வளவு பெரிய போராட்டங்கள் இந்தியாவில் மட்டுமல்ல உலக அளவிலும் இந்தப் போராட்டங்கள் பரவி உள்ளன?. இந்தப் போராட்டங்கள் உணர்வுப் பூர்வமானவை. தன்னெழுச்சியாக, மதம், மொழி, நிலம், நிறம் இவற்றையெல்லாம் தாண்டியவை.

போராட்டங்களை நடத்துபவர்கள் பற்றிய எதிர்கருத்துக்கள் கீழான எண்ணங்களைக் கொண்டவை. இந்த தேசியப் பதிவேடு அசாம் மாநிலத்தில் என்ன செய்தது.

2017ஆம் ஆண்டில் அசாம் மாநில அரசு கவுகாட்டி என்னுமிடத்தில் உள்ள உயர் நீதி மன்றத்தில் ஓர் மனுவை தாக்கல் செய்தது. இதில் வெளிநாட்டவர்கள் (Foreigners Tribunal) ஆதிரப்பாயம் என்ற ஆணையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த வழக்கறிஞர்களைப் பற்றியது. இவர்கள் மீது சில வழக்கறிஞர்களை வெளி நாட்டவர் தீர்ப்பாயத் நாட்டிலிருந்து அகற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது. காரணம் இந்த வழக்கறிஞர்கள் அதிகமான எண்ணிக் கையில் குடிமக்களை வெளிநாட்டவர் என அறிவிக்க வில்லை என்பதே.

இப்படி அசாமை ஆண்டு கொண்டிருக்கும் BJP அதன், எவ்வளவு அதிகமான மக்களை இந்தியக் குடிமக்கள் இல்லை என அறிவிக்க முடியுமோ அந்த அளவுக்கு மக்களை அறிவித்துக் கொண்டிருக்கிறது.

இப்படி பல வழக்கறிஞர்களை மட்டுமல்ல, பல சட்ட கம்பெனிகளையும் நியமித்திருந்தது. அசாமை ஆண்டு வரும் பாசிச பா.ஜ.க. அரசு. இவர்களின் வேலை 'நாங்கள் இந்தியர்கள் என சொல்லி ஆதாரங்களைக் கொண்டு வருபவர்களை இந்தியக் குடிமக்களில்லை எனச் சொல்லிட வேண்டும் என்பதே. ஆனால், அரசு எதிர்பார்த்த அளவிற்கு இவர்கள் குடியுரிமையை நிராகரிக்கவில்லை. அதனால் இந்த வழக்கறிஞர்கள் வழக்காடும் நிறுவனங்கள் இவையெல்லாவற்றோடும் போட்ட ஒப்பந்தங்களை ரத்துச் செய்து விட்டார்கள்.

இப்படி எண்ணற்றச் சட்ட நிறுவனங்கள் ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டன. அவை அனைத்தின் பெயரையும் "விரிவஞ்சி" விட்டு விடுகின்றோம்.

இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில் முஸ்லிம்களைக் குறி வைத்துக் குடிமக்கள் இல்லை என்று அறிவிக்கவும், அவர்களை தடுப்புக்(காவலில்) முகாம்களில் வைக்கவும் தனியார் ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு சம்பளமும் பல நிறுவனங்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. விருதுகளைப் பெற்ற இந்த நிறுவனங்கள் அதிகமான இந்தியர்களை

இந்தியர்கள் அல்ல வெளி நாட்டவர்கள் என அறிவித்தவர்கள். இவர்களில் நியாயமாக நடந்து கொண்டவர்கள், அரசு விரும்பியதைச் செய்தாதவர்கள் ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

வெளிநாட்டவர்கள் என அறிவிக்கப்பட்டவர்கள் உடனேயே சிறையிலடைக்கப்பட்டார்கள். தேசிய மனித உரிமை ஆணையம் இவர்களை அந்தச் சிறைகளில் அல்லது தடுப்பு முகாம்களில் சென்று பார்த்தபோது அந்த முகாம்களில் குடும்பத்தவர்கள் நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டு உதிரிகளாக ஆக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார்கள். பெண்களும் குழந்தைகளும் ஒரு சிறையிலும், ஆண்கள் இன்னொரு சிறையிலும் அடைக்கப்பட்டிருந்தார்கள். (இதுபற்றிய விரிவான தகவல்களை வைகறை வாசகர்களுக்கு கடந்த பல மாதங்களில் தந்திருக்கின்றோம்)

பலருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அவர்களை தண்டிக்கப்பட்டவர்கள் என அதே சிறையில் வைத்திருக்கின்றார்கள். (Source : The Track Record of NRC Does not Bode Well. Deccon Chronicle 22-12-2019)

தன் குடிமக்களுக்கு எதிராக இந்தியா இதைச் செய்து கொண்டிருக்கின்றது. இந்த அநியாயத்தில் நாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள்தான் என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இந்தியக் குடிமக்களுக்குத்தான்.

சாதாரணமாக ஒருவர் குற்றவாளி என்றால், அல்லது வேறு வகையாகக் குற்றம் சாட்டினால் அரசுதான் நிரூபிக்க வேண்டியபொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இங்கே குடிமக்களே நிரூபிக்க வேண்டும். என்னே கொடுமை? என்பதை நீங்கள் சிறையில் அடைக்கக்கூடாது என நிரூபிக்க வேண்டியது குடிமக்களின் கடமை.

நாகரீகமடைந்த உலகில் இதுபோல் தன் மக்களுக்கு அநியாயம் செய்யும் நாடுகள் உலகில் இல்லை.

குடியுரிமை திருத்த சட்டத்தைப் பொறுத்த வரை அது என்ன செய்யும்? அது, பாரதீய ஜனதா கட்சியிடம் நான் இந்தியக் குடிமகன் என நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்க இயலவில்லையென்றால் சிறையில் தள்ளும் இந்த குடியுரிமைதிருத்தச்சட்டம். இந்த கொடுமைக்கு வேறு எந்த மதத்தினரும் ஆளாக மாட்டார்கள். (அந்த அளவுக்கு நலம்) அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக டிசம்பர்-2014 க்கு முன் இந்தியாவில் புகுந்திருந்தால் உடனேயே அதிரடி நடவடிக்கையாக அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்.

இந்த அநியாயத்தை எங்கே சுட்டிக்காட்டி விடுவார்களோ என அஞ்சிதான் அமெரிக்கா சென்றிருந்த நமது வெளி விவகாரத்துறை அமைச்சர் வெட்கப்படக் கூடிய அளவில் ஓடி வந்து விட்டார்கள்.

## 100 நிமிடங்கள், ஒரு மணிநேரம் 40 நிமிடங்கள் மூச்சு விடாமல் பொய்சொன்ன முதல் பிரதமர்

குடியுரிமை திருத்த சட்டத்திற்குப் பொங்கி வரும் எதிர்ப்பு நாட்டையே அல்லோல கல்லோலப்படுத்தி வருகின்றது. அதையெல்லாம் தன் வாய் சவ்டால் வழி வீழ்த்தி விடுவேன் என்ற இறுமாப்பில் 22-12-2019 இல் டெல்லி ராம்லீலா மைதானத்தில் ஒரு பெரும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அதில் ஒரு மணிநேரம் 40 நிமிடங்கள் நேரம் உரையாற்றினார்

நாட்டில் இதுவரைக்கும் நாங்கள் NRC என்றொன்றை நாடு முழுவதும் கொண்டு வருவோம் எனப் பேசிடவில்லை. ஆனால் இவரோடுநின்று உள்துறை அமைச்சராக இருப்பவர் அமித்ஷா. இவர் பல மணிநேரம் இதைப்பற்றி பேசினார். 2019 டிசம்பர் 9 அன்று நாடாளு மன்றத்தில் பல வகையாகவும் நீட்டி முழக்கினார்.

இதையெல்லாம் அதாவது 23-12-2019 அதேபோல், நாட்டில் எங்கேயும், DETENTION CAMPS என்ற தடுப்புக் காவல் முகாம்கள் ஒன்று கூட அமைக்கப்படவில்லை என்றார். ஆனால் அசாமில் 6 தடுப்புக்காவல் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. பெங்களூருவில் ஒன்று கட்டமைப்பட்டுக் கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி எல்லாப் பத்திரிகைகளும் பிரதமர் இப்படிப் பொய்ச் சொல்லக்கூடாது எனச் சொல்லி தலையங்களைத் தீட்டின. அதன் காரணமாக இரண்டு நாளைக்கு காணமற் போய்விட்டார்.

**- எம்.ஜி.எம்.**

# Detention Centre என்றால் என்ன? அதன் தொடர்பாக பரவி வரும் செய்திகள் உண்மையா?

Detention centre என்ற வார்த்தை தற்போது இந்தியா முழுக்க உபயோகப்படுத்தப்படப் போகிறது. ஆனால், உலக நாடுகள் முழுக்க இதை இரண்டு வருடங்களாக பேசி வருகிறார்கள். அதற்கு காரணம் சீனா நடத்தி வரும் detention centre என்ற தடுப்பு காவல் சிறை.

இப்போதும் கூட நிறைய விவாதங்களில் பங்கு பெறுவோர்கள் ஆவணங்களை ஒப்படைக்க தவறினால் detention centre என்ற அகதிகள் முகாமில் சேர்க்கப்படுவார்கள் என்று பேசுகிறார்கள். உண்மையில் அகதிகள் முகாம் வேறு. இவர்கள் சொல்லும் detention centre எனும் தடுப்பு சிறைகள் வேறு.

Detention centre கோரத்தை இந்த கட்டுரையின் இறுதியில் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

### முதலில் Detention Centre இந்தியா எதற்காக உருவாக்குகிறது?...

இந்த தடுப்பு காவல் சிறையை சீனா தான் தன் உய்கூர் மாகாணத்தில் பரவலாக்கி நடைமுறைப்படுத்துவதில் வெற்றி பெற்றது. சீனா உருவாக்கிய தடுப்பு முகாமும் முஸ்லிம்களுக்காகவே உருவாக்கப்பட்டது. கிட்டத்தட்ட 40 லட்சத்திற்கும் அதிகமான உய்கூர் முஸ்லிம்கள் இந்த தடுப்பு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சீனாவின் முஸ்லிம்களுக்கெதிரான இந்த முயற்சியை இந்தியாவில் பாஜக அரசு செயல்படுத்த முனைகிறது. அதற்காக, சீனாவின் detention centre முகாமை இந்தியாவினுள் கொண்டு வர முனைகிறது. அதனால் சீனாவில் எப்படி இம்முகாம் நடத்தபடுகிறது என தெரிந்து கொள்வது அவசியம்.

### சீனாவின் தடுப்பு சிறை ஏன் மிக மோசமானது எப்படி இருக்கும்?..

இந்த தடுப்பு சிறைகள் மூன்று பிரிவு



களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு பிரிவிலும் மக்கள் பிரிக்கப்பட்டு வைக்கப்படு வார்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி தண்டனை. அந்த தண்டனைக்கான குற்றம் என்ன தெரியுமா?...

தினசரி தொழுகும் இஸ்லாமியர்களுக்கு உச்சபட்ச தண்டனை பிரிவும், அதற்கு கீழாக இஸ்லாமிய அடையாளங்களுடன் இருப்பவர் களுக்கு அதற்கு கீழான தடுப்பு காவல் சிறையும் சிறிய சிறிய தவறுகளாக இன்ஷா அல்லாஹ், அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுகிறவர்களுக்கு அதற்கு கீழான தடுப்பு சிறையும் உள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியை புகழ்ந்து பாட வேண்டும்.

சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக் கும் வகுப்புகள் நடத்தப்படும். அதில் தங்கள் மதத்தின் படி வாழ்ந்ததால் வாழ்கையை இழந்து விட்டோம். கம்யூனிஸ்ட் கட்சி தான் எங்கள் வாழ்க்கை சீர்படுத்தியது என்று கூறினால் தடுப்பு சிறைகளிலேயே தண்டனை குறைவான சிறைக்கு மாற்றப்படுவார்கள்.

பெண்கள் மொட்டையடிக்கப்படுவார்கள், பெண்கள் கழிவறைக்கு செல்ல வேண்டுமென் றாலும் ஆண் பாதுகாவலர்களுக்கு முன்னால்




ஆண்களுக்கு தனி சிறை, பெண்களுக்கு தனி சிறை, குழந்தைகளுக்கு தனி சிறை ஆனால் அதற்கு பெயர் மறுவாழ்வு மையம். இவை எல்லாம் detention centre கட்டடத்திற்குள்ளேயே இருக்கும்.

சீனாவில் வெறும் மத அடையாளங்களுடன் மட்டும் நிற்கவில்லை. உய்கூர் மொழிக்கு எதிராகவும் அந்த அரசு நடவடிக்கை மேற்கொள்கிறது. Detention centreக்குள்ளேயே அங்கு இருக்கும் சிறுவர்களுக்கு பள்ளிகள் இருக்கிறது. அங்கே உய்கூர் மொழிக்கு பதிலாக அனைத்தும் சீன மொழியில் மட்டும் தான் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

காலையில் எழுந்ததும் கம்யூனிஸ்ட் தலைவருக்கும், கட்சிக்கும் வாழ்க சொல்லி விட்டு தான் தன் நாளை தொடங்க வேண்டும். ஒவ்வொரு முறை சாப்பாடு போடும் போதும் செல்ல வேண்டியிருக்கும். கட்டாயப்படுத்தி மது குடிக்க வைக்கப்படுவார்கள், கட்டாயப்படுத்தி பன்றிக்கறி சாப்பிட வைக்கப்படும். சமீபத்தில் கூட இந்த முகாமில் இருந்து தப்பித்து ஓடி வந்த பெண் கொடுமை தாங்க முடியாமல் அவர்களிடமே என்னை கொன்று விடுங்கள் என்று கெஞ்சியதாக ஊடகங்களிடம் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் சீனாவில் நடக்கும் கொடுமைகளை தெரிந்து கொள்ள விரும்பினால் வைகறை வெளிச்சம் மே மாத இதழில் விரிவாக பார்க்கலாம்.

## சரி இந்தியாவில் அமையும் Detenten Centre எனும் தடுப்பு சிறை எப்படி அமையும்?

இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பை



உருவாக்கியவர்கள் அதன் வழி நடந்தவர்களின் ஆட்சி தான் இங்கே நடக்கிறது. ஆர்.எஸ்.எஸ் தோற்றுவிப்பதற்கு முன்னராக அதை உருவாக்கியவர்கள் ஹிட்லரின், முசோலியின் கொடுமையான சித்ரவதை முகாம்களை நேரடியாக பார்வையிட்டு இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராகவும் இப்படியொரு திட்டமிடல் வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் அமைப்பை உருவாக்கினார்கள்.

அதனால் இந்துத்துவ தலைவர்களுக்கு சீனாவில் தற்போது நடந்து வரும் கொடுஞ் சதிகார முறையை இந்தியாவிற்கு கொண்டு வர நினைப்பதில் எந்த ஆச்சர்யமும் கொள்ள தேவையில்லை.

இந்தியாவிற்கு கொண்டு வருமானால் இந்தியாவின் சூழலுக்கு ஏற்ப அவர்கள் நடத்தப்படுவார்கள். சீனாவில் கம்யூனிசம் என்றால் இங்கே இந்துத்துவம். சீனாவில் சீன மொழி என்றால் இங்கே இந்தியும், சமஸ்கிருதமும், சீனாவில் தற்போதைய கம்யூனிச தலைவரின் புகழ் பாட வேண்டும் என்றால் இங்கே மோடி, சவார்க்கர், கோட்சே என எல்லாம் சரியாக அமையும்.

## யூகத்தினால் மட்டும் வரும் முடிவா இது?...

கண்டிப்பாக இல்லை. சமீபத்தில் இந்தியா டுடே செய்தி நிறுவனம் அஸ்ஸாமில் கட்டப்படும் தடுப்பு சிறை முகாமுக்கு சென்று நேரடி ஆய்வு ஒன்றை நடத்தியது அதில் சீனாவின் தடுப்பு சிறைகளை போலவே, ஆண்களுக்கு, பெண்களுக்கு, குழந்தைகளுக்கு என தனித்தனி சிறை. சிறுவர்களுக்கு பள்ளிக்கூடம் என எல்லாம் தடுப்பு சிறைக்குள்ளே உருவாக்கப்பட்டிருக்கிறது.

அத்தோடு பாஜகவின் கடந்த கால வரலாறுகள் இத்தகைய கொடுமைகளை கொண்டு வருவதற்கு தயங்காது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

## அகதிகள் முகாமிற்கும், தடுப்பு சிறைகளுக்கும் உள்ள வித்தியாசம்

தடுப்பு சிறைகளென்றால் எவ்வளவு கொடுமைகள் நிகழ்த்தப்படும் என்பதை நாம் பார்த்தோம். ஆனால் அகதிகள் முகாமில் இத்தகைய கொடுமைகள் இருக்காது. உதாரணத்திற்கு, தமிழகத்தில் இலங்கை அகதிகள் வாழும் மண்டபத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் சென்றோம்.

அங்கே தனித்தனி வீடுகள் இருக்கிறது. அங்கே குடும்பமாக வாழ்ந்து கொள்ளலாம். அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக வெளியே வேலைகளுக்கு சென்று வரலாம்.

வாக்குரிமை அதிகாரம் கிடையாது. அரசு வேலை வாங்க முடியாது. சொந்தமாக நிலம் வாங்க முடியாது. ஆனால் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்து வரும் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள்.

இது detention centre எனப்படும் தடுப்பு சிறைகளில் கிடையாது. இங்கே மனிதர்கள் மூன்றாம் தர குடிமக்களுக்கும் கீழாக நடத்தப்படுவார்கள். குடும்பமாக இருக்க முடியாது. வெளி உலகை பார்க்க முடியாது. சிறைக்குள் நடப்பதே வாழ்க்கை. அங்கே எவ்வளவு கொடுமைகள் இழைக்கப்பட்டாலும் வெளியில் தெரியாது.

அதனால் இனி ஆவணங்களை இழந்தோர்கள் அகதிகள் முகாமிற்கு அனுப்பப்படுவார்கள் என்று சொல்வதை தவிர்த்து விட்டு அவர்களை இத்தகைய கொடுமையான சிறை வாழ்க்கைக்குள் தள்ள போகிறார்கள் என்ற உண்மையை சொல்ல வேண்டும்.

**- அபூ சித்திக்**



# போலீசாரின் தாக்குதலால் கையை இழந்த நிற்கும் அலிகர் முஸ்லிம் கல்லூரி மாணவர்

பாஜக அரசு கொண்டு வந்திருக்கும் குடியுரிமை திருத்த மசோதா அரசிய லமைப்புக்கும், இந்தியாவிற்கும் எதிரானது என்று கூறி இந்தியா முழுக்க பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த டிசம்பர் 15ம் தேதி அலிகர் முஸ்லிம் கல்லூரியிலும், ஜாமியா கல்லூரியிலும் போலீசார் நடத்திய வன்முறை பல்வேறு கண்டனங்களை எழுப்பியது.

அந்த வன்முறையில் பாதிக்கப்பட்டோரிடம் அல்ஜசீரா செய்தி நிறுவனம் மேற்கொண்ட உரையாடல்கள்,

இந்த வன்முறையில் இரண்டு கைகளிலும் பெரிய காயங்கள் கொண்ட தசீம் கான் இரண்டு கைகளிலும் கட்டுகள் போடப்பட்டிருந்தாலும் கூட தற்போதும் மிக உறுதியாக இந்த சட்டங்களுக்கு எதிராக இருப்போம் என்கிறார். கைகளின் மீது போடப்பட்டிருக்கும் கட்டுகளில் கூட AMU REJECT CAA, WE WILL FIGHT என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னும் சிலருக்கு மோசமான காயங்கள் ஏற்பட்டி ருக்கிறது.

முஹம்மது தாரிக் (26) வேதியியல் முனைவர் மாணவர், போலீசார் நிகழ்த்திய தாக்குதலில் இவரது வலது கையை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அவரால் இனி வலது கையின் மூலமாக எதையும் எழுதவோ, வேலை செய்யவோ முடியாது என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள்.

தாரிக்கின் இந்த நிலை காரணமாக தற்காலிகமாக அலிகரில் துணை பேராசியருக் கான வேலை வழங்கப்படும் என அலிகர் நிர்வாகம் அறிவித்திருக்கிறது.

இதுபோல் இன்னும் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தசிம் கான் சொல்லும் போது, போராட் டத்தில் போலீசார் வன்முறையை தொடங்கிய பிறகு நாங்கள் பலர் கல்லூரி வளாகத்திற்குள் சென்று கதவை அடைத்து கொண்டு கழிவறையில் ஒளிந்து கொண்டோம்.

ஆனால், போலீசார் கதவுகளை உடைத்து கொண்டு எங்களை குற்றவாளிகளை அடிப்பது போல் அடித்தார்கள். நீங்கள் பாகிஸ்தானுக்கு போக வேண்டியது தானே!.. என்று சொல்லி இழுத்து சென்றார்கள். நாங்கள் அலிகரில் படிப்பதால் எங்களை அடிக்கிறார்களா?.. அல்லது முஸ்லிம் என்பதற்காக அடிக்கிறார்களா என்று விரக்தியுடன் கேட்கிறார் தசிம்கான்.

**- அபூ சித்திக்**

ஹாஜி ஹமீத் ஹசன், 72 வயது முதியவர் உத்திரபிரதேசத்தின் முசாபர் நகரில் குடியிருந்து வருகிறார். கடந்த வெள்ளிக்கிழமை நடந்த குடியுரிமை திருத்த மசோதாவுக்கு எதிரான போராட்டத்தில் பங்கு கொண்டதன் காரணமாகவே இவரது சொத்துகள் சூரையாடப்பட்டு நிர்கதியாய் நிற்கிறார். இதை செய்ததெல்லாம் ரவுடி கும்பல் அல்ல. நம் நாட்டின் காவல்துறை அதிகாரிகள்.

இரவு 11 மணிக்கு வீட்டின் கதவுகள் வேகமாக தட்டவும் திறக்காமல் பயத்துடன் வீட்டினுள் இருந்திருக்கிறார்கள். அதற்குள்ளாகவே வீட்டின் கதவை உடைத்து உள் நுழைந்திருக்கிறார்கள் காவல் அதிகாரிகள்.


உள்ளே நுழைந்த பிறகு வீட்டில் இருந்த அனைத்தையும் கண்டபடி உடைத்து எறிந்திருக்கிறார்கள். நாற்காலி, பாத்திரங்கள், ஃபிரிட்ஜ், வாசிங் மெசின், பாத்ரூமில் இருக்கும் குழாய் உட்பட அனைத்தையும் உடைத்து 72 வயதான ஹசனையும் கீழே தள்ளி விட்டதில் அவர் காலில் காயம் ஏற்பட்டது.

அவரை அடித்து கீழே தள்ளிய காவல் துறை அதிகாரிகள் முஸ்லிம்களுக்கு இரண்டு இடம் தான் இருக்கிறது ஒன்று பாகிஸ்தான், இல்லையென்றால் கபர்ஸ்தான் என்று மிரட்டியிருக்கிறார்கள்.

ஹசனின் மனைவி பாத்திமாவும் அவரது பேத்திகளான ருகையா பர்வீன் மற்றும் முபஷ்ஷிரா பர்வீன் இருவரும் வீட்டினுள் சென்று ஒளிந்திருந்தும் அவர்களையும் மிக கேவலமான வார்த்தைகளில் பேசியிருக்கிறார்கள்.

அத்தோடு தனது பேத்திகளின் திருமணத்திற்காக ஹசன் சேர்த்து வைத்திருந்த நகைகளையும் ஐந்து லட்ச ரூபாய் பணத்தையும் கொள்ளையடித்து சென்றிருக்கிறார்கள் காவல்துறை அதிகாரிகள்.

ஹசனின் மகன் முஹம்மது ஷாஹிதையும் அதிகாரிகள் இழுத்து சென்றிருக்கிறார்கள். ஷாஹிதை காவல் நிலையத்தில் பார்த்த



போது தன்னை இழுத்து சென்று கையில் துப்பாக்கியை கொடுத்து அதை பிடித்திருப்பது போல போட்டோ எடுத்துக்கொண்டதாக தந்தையிடம் கூறியிருக்கிறார்.

தன் இரு பேத்திகளுக்கும் வருகின்ற பிப்ரவரி 4ம் தேதி திருமணம் நடைபெற இருக்கிறது. இப்போது எங்கள் சொத்துகளும், நகைகளையும் கொள்ளையடித்து சென்று விட்டார்கள் என்று அழுது கொண்டே சொல்கிறார் 72 வயதான் ஹசன்.







மோடியோ “ பேட்டி பெச்சாஆ” என்று மேடைகளில் பேசுகிறார். ஆனால் அவரது காவல்துறை அதிகாரிகள் எங்கள் வீட்டு பெண்களின் வாழ்வாதாரத்தையே அழிக்கிறார்கள்.

சுதந்திரம் பெற்ற போது ஜின்னாவின் பூமி வேண்டாம் என்று என் தந்தை காந்தியின் இந்தியாவை தேர்ந்தேடுத்தார். ஆனால் இன்று நாங்கள் ஒதுக்கப்படுகிறோம் என்று வேதனையுடன் கூறுகிறார் ஹசன்.

அப்பகுதியை சேர்ந்த காங்கிரசின் முன்னாள் எம்.பி சைதுஸமான் சயீத் வெள்ளிக்கிழமைக்கு பிறகு நடைபெற்ற வன்முறையில் காவல்துறையினருடன் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்களுடன் இணைந்து செயல்பட்டனர். இதில் தனது பண்ணை வீட்டில் இருந்த நான்கு கார்கள் தீயிட்டு எரிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார். இதனை பாதுகாப்புக்கு அங்கிருந்த ராம் என்பவரும் உறுதி செய்திருக்கிறார்.

**உத்திரபிரதேசத்தில் அதிகாரிகள் எந்தளவுக்கு வன்முறையை நிகழ்த்துகிறார்கள் என்பதற்கு இச்சம்பவம் ஒரு சான்று.**

**– அபூ சித்திக்**

உத்திரபிரதேசத்தில் நடந்த குடியுரிமை திருத்த மசோதாவிற்கு எதிராக நடை பெற்ற போராட்டத்தின் போது 21 சிறுவர்களை கைது செய்தனர் காவல்துறையினர். கைது செய்யப்பட்ட சிறுவர்களில் ஐந்து பேர் தாங்கள் அனுபவித்த சித்ரவதைகளை ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த ஐந்து சிறுவர்களும் 13 வயதிலிருந்து 17 வயதிற்குள் இருப்பவர்கள். இவர்கள் டிசம்பர் 20ம் தேதி கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு இரண்டு நாட்கள் 48 மணி நேரம் சிறையில் வைக்கப்பட்டு சித்ரவதை செய்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்ட ஐவரும் போராட்டங் களில் ஈடுபடவில்லை. 13 வயது சிறுவன் தன் தம்பியை தேடி வெளியே சென்ற போது கைது செய்யப்பட்டிருக்கிறார். 15 வயது சிறுவன் டியூசன் முடித்து வீடு திரும்பி கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டிருக்கிறார். இப்படி ஒவ்வொருவரும் வெளியில் வெவ்வேறு காரணங்களுக்காக சென்றிருக்கும் போது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் பிஜ்னோர் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு மணி நேரத்திற்கொருமுறை தங்களை காவல்துறையினர் அடித்து சித்ரவதை செய்ததாக கூறினர்.

### அந்த சிறுவர்கள் கூறுவது,

எங்களை எத்தனை முறை அடித்தார்கள் என்றெல்லாம் கணக்கிட முடியவில்லை. எங்கள் உடல் முழுவதும் அடித்தார்கள். சாப்பிடுவ தற்கும், நடப்பதற்கும் கூட என்னால் முடிய வில்லை. அவர்கள் கையில் இருந்த குச்சி உடை யும் வரை அடித்தார்கள் என்கிறார் 13 வயது சிறுவன். எங்களை தூங்கவிடாமல் அடித்தார் கள். நாங்கள் கண்ணை மூடினால் எங்களுக்கு அடி விழும் அதனால் நான் எனது விரல்களை கொண்டு கண்ணை திறந்தே வைத்திருந்தேன். தெரியாமல் மூடி விட்டால் கூட அடிப்பார்கள்.

எங்களுக்கு தண்ணீர் தந்தார்கள். பிறகு பாத்ரூமிற்கு செல்ல வேண்டும் என்று சொன் னால் ஒவ்வொரு முறையும் அடிப்பார்கள். அதனாலேயே நாங்கள் தண்ணீர் அருந்த வில்லை. அருந்தி பாத்ரூம் செல்ல வேண்டும் என்றால் அடி விழும் அதற்காகவே நாங்கள் குடிக்கவில்லை. சிறுவர்கள் முன் பெரியவர் களின் உடைகளை களையச் சொல்லி காயங் களை காட்டியிருக்கிறார்கள்.

ஒரு சிறுவன் சொல்லும் போது, எங்களின் முன்னாலேயே பெரியவர்கள் அனைவரையும் சுவற்றிற்கு பின்னால் நிற்க வைத்து அவர்கள் பின்பகுதியில் உடையை கழற்றி அடித்தார்கள் என்று கூறினான். எங்களை விடுவிக்கும் போது, இனி போராட்டங்களில் கலந்து கொள்வீர் களா?.. இனி கலந்து கொண்டால் நாங்கள் என்ன செய்வோம் என உங்களுக்கு தெரிந்திருக்கும் என எச்சரித்து அனுப்பினார்கள் என்கிறார்கள்.

13 வயது சிறுவனை அடித்து சித்ரவதை செய்யும் மனிதர்களாக காவல்துறையினர்கள் மாறியிருக்கிறார்கள். உத்திரபிரதேசம் முழுவதும் இது தான் நடக்கிறது.

சிறுவர்களை காவல்நிலைய சிறையில் வைக்கவே கூடாது என சட்டம் சொல்கிறது. ஆனால், சித்ரவதை செய்து அனுப்புகிறார்கள். இந்தியாவின் இந்து ராஷ்டிரா கனவு உத்திர பிரதேசத்தில் நடந்து வருகிறது. அங்கு மனித உயிர்களை வேட்டையாடும் ஒரு தலைவர் இருக் கிறார். அவர் நினைத்த படி வேட்டையாடுகிறார். ஆனால், பிரதமரோ நாட்டு மக்களுக்கு புத்தி சொல்கிறார்.

# சிறுவர்களின் ஆடைகளை அவிழ்த்து, அடித்து சித்ரவதைப்படுத்திய உத்திரபிரதேச காவல்துறையினர்

- அபூ சித்திக்.

# சிறையிலிருந்து சடலமாக அனுப்பப்பட்ட 65 வயது காஷ்மீரக முதியவர்

## மரணத்திற்கான காரணத்தை குடும்பத்தினரிடமும் சொல்லவில்லை

குலாம் முஹம்மது பாட் ஜூலை 17 அன்று இராணுவ அதிகாரிகளால் கைது செய்யப் பட்டார். அதன் பிறகு ஆகஸ்ட் 5ல் பிரிவு 370 நீக்கப்பட்ட பிறகு இவரை காஷ்மீருக்கு வெளியில் உத்திரபிரதேச சிறைக்கு மாற்றினார்கள்.

பாட், ஜூலையில் சிறைக்கு செல்வதற்கு முன்பே மாலை நேர தொழுகையில் எல்லோ ரையும் அழைத்து எனக்கு சம்மன் அனுப்பப் பட்டிருக்கிறது. எபோதும் போல நான் கைது செய்யப்படலாம். அதனால் நான் உங்களுக்கு ஏதேனும் தீங்கு விளைவித்திருந்தால் அதனை மன்னித்து விடுங்கள் என்று திரும்பி வரமுடியாது என்பது போல பேசியிருக்கிறார்.

அவர் நினைத்தது போலவே இராணுவம் அவரை சடலமாக மீண்டும் வீட்டுக்கு அனுப்பி யிருக்கிறது. ஜமாத்தே இஸ்லாமியின் உறுப் பினராக இருந்த பாட் இராணுவத்தினால் எண்ணற்ற முறையில் அழைத்து செல்லப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டிருக்கிறார். ஒருமுறை இவரை அழைத்து சென்று காலில் கிரிக்கெட் பேட்டை கொண்டு இராணுவத்தினர் அடித்த தினால் சரியாக நடக்க முடியாமல் போனது.

பாட்டின் மகன் ஹனீப்பிற்கு டிசம்பர் 20ம் தேதி உங்கள் தந்தைக்கு உடல் நிலை சரியில்லை அதனால் உத்திரபிரதேஷ் சென்று அழைத்து கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். உடனே உத்திரபிரதேசம் சென்று அழைத்து வரும் அளவுக்கு குடும்பத்தில் எந்த வசதியும் இல்லை நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் என்று கூறியிருக்கிறார் ஹனீஃப்.

அடுத்த நாள் காலையில் காவல்துறையினர் போன் செய்து (21.12.19) அன்றைக்கு காலை 9.00 மணிக்கு விமானத்தில் டிக்கெட் உங்க ளுக்கு போடப்பட்டிருக்கிறது. அதில் சென்று அழைத்து வாருங்கள் என்று கூறியிருக்கிறார்கள்.

அதன்படி, உத்திரபிரதேசம் சென்றவரை நேராக பிணவறைக்கு அழைத்து சென்று இது உங்கள் தந்தையா என அடையாளம் காட்டச் சொல்லியிருக்கிறார்கள். தன் தந்தை எப்படி இறந்தார் என்று கேட்பதற்கு கூட எனக்கு பயமாக இருந்ததால் எதுவும் பேசாமல் திரும்பி விட்டேன் என கூறுகிறார் ஹனீஃப். தன் தந்தை (20.12.19) அன்று இறந்துவிட்டதாக அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள்.

காஷ்மீரின் சொந்த கிராமத்திற்கு அவரை அழைத்து வந்த பிறகு அவரது இறுதிச்சடங்கு கட்டுப்பாடுகளுடன் நிறைவேற்றப்பட்டது. வெளியூர் வாசிகள் யாரும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

அவரது உடலை கழுவியவர்கள், அவரது உடலில் இரண்டு இடங்களில் பலத்த காயம் இருந்தது என்று கூறுகிறார்கள். உடல் புதைக் கப்பட்ட பிறகு ஜாட்டின் குடும்பத்தினர் தன் தந்தை இறப்பிற்கான காரணத்தை அறிய காவல் நிலையத்தை அணுகிய போது எந்த தகவலும் கொடுக்கப்படவில்லை. மாறாக இயல்பான மரணம் தான் என்று மிரட்டப் பட்டிருக்கிறார்கள்.

“அவரது காலில் உள்ள காயத்தை தவிர அவருக்கு உடலில் எந்த பிரச்சனையுமில்லை” என்று கூறுகிறார் ஜாட்டின் மனைவி.

சிறையில் அடைக்கப்பட்டு, எந்த அறிவிப்பும் இல்லாமல், சடலம் கிடக்கிறது வந்து எடுத்து செல்லுங்கள் என்று சொல்லும் அளவுக்கு காஷ்மீரக மக்களுக்கு உரிமை கொடுக்கப் படுகிறது.

ஆங்கிலேயரின் காலனியாதிக்கத்தில் கூட இப்படி 140 நாட்களுக்கு மேலும் 70 லட்சம் மக்கள் வாழும் தேசம் முடக்கப்பட்டிருக்காது. இத்தகைய கொடுமைகள் நடைபெற்றிருக்காது. அது அத்தனையும் தற்போது மோடி ஆளும் தேசத்தில் நடக்கிறது.



# பாபரி பள்ளிவாசல் தொடர்பாக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள்

1993ம் ஆண்டு டிசம்பரில் "பாபரி பள்ளிவாசல் நினைவிதழ்" ஒன்றை சகோதர நிறுவனமான இலக்கியச்சோலை சார்பாக வெளியிட்டோம்.

அதன்பிறகு குலாம் முஹம்மது அவர்கள் ஆசிரியராக இருந்து வெளியான டிசம்பர் மாத விடியல் வெள்ளி, வைகறை வெளிச்சம் மாதம் வெளிவந்த மாத இதழ்களில் பாபரி பள்ளிவாசல் சம்பந்தமான தகவல்களே அட்டைப்படக் கட்டுரையாக இருந்துள்ளன. அந்த கட்டுரைகள் பின்னாளில் பாபரி பள்ளிவாசல் அடிப்படைத் தகவல்கள் என்ற புத்தகமாகவும் மாறி உலகம் முழுக்க தமிழர்களிடம் சென்றது.

## பாபரி பள்ளிவாசல் தொடர்பான ஒளிப்பேழை வெளியீடு

பாபரி பள்ளிவாசல் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி மக்களை விரைவாக சென்றடையும் வகையில் ஒரு ஒளிப்பேழை உருவாக்கப்பட்டது. இதில் பாபரி பள்ளிவாசல் தொடர்பான அனைத்து ஆவணங்களை பற்றிய தகவலும் அடங்கியிருந்தது. இந்த ஒளிப்பேழை மக்கள் மத்தியில் அதிகமான வரவேற்பையும் பெற்றது.

## ஜாஃபர்யாப் ஜீலானி அவர்களை அழைத்து விழிப்புணர்வு கருத்தரங்கம்

2001ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் தேதி பாபரி பள்ளிவாசல் வழக்கை நடத்திக் கொண்டிருக்கும் ஜாஃபர்யாப் ஜீலானி அவர்களை தமிழகத்திற்கு அழைத்து சென்னையில் உள்ள பெரியார்திடலில் பாபரி பள்ளிவாசல் பற்றியான விழிப்புணர்வை அதிகப்படுத்தினோம்.

அப்போதே பாபரி பள்ளிவாசல் வழக்குக்காக ரூ.25000 ரூபாயை அன்பளிப்பாக வழங்கினோம். பாபரி பள்ளிவாசல் இடிப்பை பற்றி அனைவரும் பேச பயந்த நிலையில் வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்ட ஜாஃபர்யாப் ஜீலானி அவர்களே வந்து பேசிவிட்டு போனதில் தமிழகத்தில் பாபரி பள்ளிவாசல் பற்றி கிளப்பட்டிருந்த பூச்சாண்டி பயம் விலகி போனது.


நமது விடியல் வாசகரின் வேண்டுகோளுக்கிணங்க "மனித நீதி பாசறை (MNP)" என்ற அமைப்பை துவங்கி பாபரி பள்ளிவாசல் பற்றியான விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்கிறோம் என்று ஜீலானி அவர்களுக்கு தெரிவித்த போது இந்தியாவின் தென் பகுதியிலிருந்தும் பாபரி பள்ளிவாசலுக்கான ஆதரவு குரல் ஒங்கியிருப்பது தங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும், உத்வேகத்தை தருவதாகவும் கூறினார்.

அப்போது இதெல்லாம் இங்கே அவசியம் இல்லை என நம்மை இகழ்ந்தும், மக்களிடையே எதிர்ப்பு பிரச்சாரமும் செய்த சில தமிழக முஸ்லிம் தலைவர்கள் பின்னாளில் பாபரிக்காக தொடர் போராட்டங்களை நடத்தும் அளவுக்கு தமிழகத்தில் விழிப்புணர்வு உண்டாக்கப் பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய ஜீலானி அவர்கள் "பாபரி மஸ்ஜிதை விட்டுக்கொடுத்தால் இனி ஒவ்வொரு சர்ச்சுக்கும், ஒவ்வொரு பள்ளி வாசலுக்கும் ஆபத்து தான் ஆதலால் பாபரி மஸ்ஜிதை மீட்க நாமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பாடு படுவோம்" என்றார்.

## பாபரி பள்ளிவாசல் பற்றி ஆண்டு முழுவதும் தொடர்ந்து பேசுவது

பாபரி பள்ளிவாசல் பற்றி ஆண்டின் டிசம்பர் மாதம் மட்டுமே எழுதுவதும், பேசுவதும் என்ற நிலையில் இருந்து நகர்ந்து ஒவ்வொரு மாதமும் பாபரி பள்ளிவாசல் பற்றிய தகவல்கள் இருப்பின் அதனை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் வைகறை வெளிச்சம் மாத இதழ் வாயிலாகவும் தெரிவித்து வந்தோம்.



# காந்தி கொலை

## சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயல்

வருடந்தோறும், அக்டோபர் 2-ஆம் நாள் அதாவது, காந்திஜி பிறந்த நாளை நினைவில் கொள்வதுபோல், ஜனவரி 30-ஆம் நாள் காந்திஜி கொலை செய்யப்பட்ட நாளை நினைவு கூறுவதில்லை.

- இது நம் கண் முன்னே நடக்கும் வரலாற்று இருட்டடிப்பு :-

காந்திஜி இறந்த நாளை நினைவு கூறாம லிருப்பதற்கான காரணம், காந்திஜி இறந்தது, சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் மிகப்பெரிய தீவிரவாத செயல். அதனை செய்தவன் இந்துத் துவ தீவிரவாதி. அவன் பெயர்தான் கோட்சே. இன்றைக்கும் இந்தியாவை உலக அரங்கில் தலைகுனிய வைத்தவன். காங்கிரஸ் அரசும் இதைக் கண்டுகொள்ளவில்லை.

சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத தாக்குதல் காந்திஜியின் மீது வீழ்ந்தது. அன்று தொடங்கி இன்று முழு அளவில் வளர்ந்து வியாபித்து நிற்கின்றது.

சாவர்கர், கோட்சே வழித்தோன்றல்கள் இந்த நாட்டில் தொடர்ந்து நடத்திய குண்டு வெடிப்புகளால் கொன்று குவித்த இந்தியக் குடிமக்கள் ஏராளம். தாராளம்.

பழியை பாங்காக முஸ்லிம்களின் மேல் போட்டு, நாட்டை, இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிளந்து ஆட்சியைப் பிடித்துக் கொண்டார்கள். இல்லாத, பொல் லாத ஆட்டங்களைப் போடுகின்றார்கள்.

இவர்கள் ஆட்சியில் அமர்ந்ததும் முதல் தீவிரவாதி கோட்சேயின் புகழ்பாடவும், துதிபாடவும் தொடங்கிவிட்டார்கள்.

அதிகார மமதை தந்த பெரும்பலத்தால், காந்திஜி கொலை செய்யப்பட்ட நாளை சாந்தியின் நாள் என பிடிக்கத் தொடங்கி விட்டார்கள். 2016-ஆம் ஆண்டு முதல் காந்திஜி பிறந்த நாள் இவர்களுக்குத் "திக்கர் திவாஸ்" - சாபத்தின்நாள் அதைப் பற்றிக் கூறிடும்போது, அன்று இந்து மகா சபையின் தேசியத் துணைத் தலைவர் பண்டிட் அசோக் ஷர்மா இப்படிக் கூறினார்.

"நாங்கள் காந்திஜி பிறந்த நாளை "திக்கர் திவாஸ்" - Dikker Diwas "சாபத்தின் நாள்" எனக் கொண்டாடுகிறோம். இனி இந்த நாட்டு மக்கள், காந்திஜியின் வழியைப் பின்பற்று வதை விட்டுவிட வேண்டும். கோட்சேயை

வழிபடுவதற்கு இதுவே சரியான தருணம்."
(Source : Oct-3,2016 Indian Times)

காந்திஜி கொலை செய்யப்பட்ட நாள் இவர்களுக்கு, அகாநியா நாள் - அதாவது நல்ல நாள். அன்று எல்லோருக்கும் இனிப்பு வழங்குகின்றார்கள்.

*(1949-இல் காந்திஜி கொலை செய்யப் பட்ட நாளிலும், இனிப்பு வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.)*

*2016-இல் இப்படிக் கூறிவிட்டு கோட் சேயின் சிலையை இந்து மகா சபையின் அலுவலகத்தில் திறந்து வைத்தார்.*

இங்கேயும், இவர்கள் சூழ்ச்சியை நன்றாகப் புரிந்திட வேண்டும். இவர்கள் சுதந்திர இந்தியாவின் முதல் தீவிர வாதியை வழிபடுவதற்கும் சிலை வைப்பதற்கும் தேர்ந்தெடுத்துக் கொண்ட நாள் அக்டோபர்-2, காந்திஜி பிறந்தநாள் அல்லாமல் முதல் தீவிரவாதம் நிகழ்ந் தேறிய ஜனவரி 30-ஆம் நாள் அல்ல.

இந்த சூழ்ச்சியைப் புரிந்துகொண்டு, காந்திஜியை கொலை செய்த நாளையும், கொலை செய்தவர்களையும் மக்கள் மன்றத்தில் வைத்து வருகின்றோம் நமது நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் சார்பில்

கோட்சே ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பில் 1932-ஆம் ஆண்டு உறுப்பின ராகச் சேர்ந்தார். சாங்கிலி என்னுமிடத்தில், வைத்து, இந்த சாங்கிலி மராட்டிய மாநிலத்தில் உள்ளது. சேரும்போதே (பௌவ்திக் காரிவாஷ்) களப் பணியாளர் என்றுதான் சேர்ந்தார். அதே நேரத்தில் அவர் இந்து மகா சபையிலும் உறுப்பினராக இருந்தார்.

*1942-இல் ஹிந்து ராஷ்டிரா தள் என்ற அமைப்பைத் தொடங்கினார். அதே நேரத்தில் அவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிலும், இந்து மகா சபையிலும் உறுப்பினராக இருந்தார். - (விக்கிப் பீடியா)*

காந்தியைக் கொலை செய்த கோட்சேக்கும், ஆர்.எஸ்.எஸ்.-க்கும் இடையே நெருங்கிய தொடர்பிருந்தது. காந்தியைக் கொலை செய்வதற்கு முன் ஆர்.எஸ்.எஸ்.ஐ. சார்ந்தவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருந்தன. அவர்கள் தங்கள் வீட்டு வானொலியை அந்த வெள்ளிக்கிழமை மாலை கேட்க வேண்டும். அங்கே சபை இந்து மகா சபை யைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் இனிப்பான செய்தி வரும். வந்தவுடன் இனிப்பு வழங்கிட வேண்டும் என்ற செய்தி வரும் என்ற தகவலும் இரகசியமாகச் சொல்லப்பட்டிருந்தது.
Front Line Feb.8, 2013

**கோட்சே தேசபக்தர் நாடாளுமன்றத்தில் முழக்கம்**



இதைச் செய்தவர் சந்நியாசி, பிரக்யா சிங் தாக்கூர் நாடாளுமன்ற உறுப்பினர்

**யார் இந்த பிரக்யா சிங் தாக்கூர்?**

*2008,* செப்டம்பர் மாதம், மராட்டிய மாநிலம் மாலேகானில் குண்டுகளை வெடிக்கச் செய்து, 100-க்கும் மேற்பட்ட முஸ்லிம் களைக் கொலைச் செய்தவர். பல நூறு பேர் காயமடைந்து அன்று சிறைப்பிடிக்கப்பட்டார். இன்றளவும் ஊனப்பட்டவர்களாக முடங்கிக் கிடக்கின்றார்கள். இவர்கள் முஸ்லிம்கள்.



பின்னர் பாசிச ஆட்சியாளர்கள் அமர்ந்தது, இந்தக் கொலைகளுக்குச் சன்மானமாக அவரை சிறையிலிருந்து அனைத்து விதிகளையும் மீறி, வெளியே கொண்டு வந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கினார்கள். இவர் தன் தேர்தல் பிரச்சாரத்தின்போது கோட்சேயை தேசபக்தி மிக்கவர் எனப் பாராட்டினார். அதன்பின் இந்த வருடம், 2019 நவம்பர் திங்களில் நடந்த நாடாளு மன்ற கூட்டத் தொடரில், நடந்த விவாதத்தின் போது அவரை தேசபக்தர், தேச பக்தியாளர் என அறிவித்தார்.

ஆனால், அதனை நாடாளுமன்ற பதிவுகளிலிருந்து நீக்கிவிட்டதாக சபாநாயகர் ஓ.பிர்லா கூறினர். இதன்மூலம் நாடாளு மன்ற பதிவுகளில் கோட்சேவை நல்லவர் ஆக்கி விட்டார்கள். இந்தப்பதிவு அப்படியே இருந்திருந்தால் வரலாற்றுச் சான்றாக ஆகி இருக்கும்.

## கோட்சேக்கு சிலைகள்

2014 ஆம் ஆண்டு முதல் கோட்சேக்குச் சிலை வைத்து பெருமைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2014-இல் மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் காவல்துறை தலையிட்டு சிலையைத் திறக்க வைத்திட இருந்தவர்களை கைது செய்தார்கள்.

ஆனால் 2016-இல் பாசிசத்தை பாதையாகக் கொண்டவர்கள் ஆட்சியில் அமர்ந்துவிட்டார்கள். அதனால் முதல் சிலையை "மீரட்" உத்திர பிரதேச மாநிலத்தில் வைத்தார்கள். அதுவும் இந்து மகாசபை அலுவலகத்தில்

2017 ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள் குவாலியரில் சிலையை வைத்தார்கள். இப்படி சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயலைச் செய்தவன் பெருமைக்குரியவராக ஆகி வருகிறான். அவனது உருவப்படத்தை நாடாளு மன்றத்தில் வைத்திட வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டு வருகின்றது.

ஏனெனில் காந்திக் கொலையிலிருந்து எல்லா விவகாரத்திலும் கோட்சேயை வழி நடத்திய சாவர்கரின் உருவப்படம் நாடாளு மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது இதைச் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

பாசிசத்தை மாய்த்து பாரதத்தை காப்பாற்றிடவில்லை என்றால் நாடு பாழ்ப்பட்டுப் போகும்.





# வேகமாக பரவிவரும் தடுப்புக்காவல் முகாம்கள்

- டாக்டர் ராஃபியா சர்காரியா

இந்திய தேசிய குடிமக்களின் தேசியப் பதிவேட்டுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகின்றார்கள். காரணம், இந்தப் பதிவேட்டை தயாரிக்கும் வேகத்தின் முடிவில் முஸ்லிம்கள் தடுப்புக்காவல் முகாம் களுக்கு அனுப்பப்படுவார்கள். இந்தத் தடுப்புக் காவல் முகாம் (Detention Centre) - தடுப்புக் காவல் முகாம் என அழைப்பதை விட, சிறைச் சாலைகள் (Prison Camps) சிறை முகாம்கள் என அழைப்பதே சரியானது.

நம் நாட்டில் இந்தச் "சிறை முகாம்கள்" இந்த வருடம் செப்டம்பர் மாதம் முதலே கட்டத் தொடங்கப்பட்டுவிட்டன. இவை அசாமிலுள்ள (Goalpara) கோல்பாரா என்னுமிடத்தில்தான் முதலில் கட்டப்பட்டன. இவை ஏழு கால் பந்து மைத்தானத்தின் அளவுக்குப் பெரியவை. உள்ளே நன்றாகத் திட்டமிட்டுபல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இங்கே அடைக்கப்படும் குடிமக்களுக்குத் தடுப்புச் சுவர்களால் நிலை நிறுத்தப்பட்ட தனிப்பகுதிகள், சிறை அதிகாரி களுக்குத் தனிப்பகுதிகள், கண்காணிப்பாளர் களுக்குத் தனிப்பகுதிகள், வானுயர்வுக்கு கண்காணிப்புக் கோபுரங்கள் என பல பகுதிகளா கப் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டு வருகின்றன.

'இந்தச் சிறை முகாம் ஜனவரி 2020 முதல் கிழமையிலிருந்து செயல்படத் துவங்கும். இந்த முகாம்களில் தடுப்புக்காவலில் வைக்கப்படு பவர்கள் அசாமைச் சார்ந்த இந்திய முஸ்லிம்கள். ஆனால் இப்போது குடிமக்கள் இல்லை என புதியதாகத் தயாரிக்கப்பட்ட பட்டியலில் விடப்பட்டவர்கள். இவர்களை விட்டுவிட்டு தயாரித்ததுதான்.' நமது NRC தேசிய இந்தியக் குடிமக்கள் பதிவேடு. இதில் 20 லட்சம் (Two Million) முஸ்லிம்கள் அடைக்கப்படுவார்கள், (Deccan Chronicle - Dec-27,2019)

கோல்காபூரில் கட்டப்பட்ட இந்த சிறை முகாம் எதிர்வரவிருக்கும் பல முகாம்களில் ஒன்றுதான். இதேபோல் இன்னும்பல திட்ட மிடப்பட்டுள்ளன. வரவிருக்கும் ஏனைய முகாம் களைப் போல் இதுவும் மொத்தக் குடும்பங் களையும் கூட்டாகச் சிறையிலடைக்கும். இதில் குழந்தைகளும் அடைக்கப்படுவார்கள். இந்தக் குழந்தைகள் இந்தியாவில் பிறந்தவர்கள். ஆனால் அரசால் இந்திய குடிமக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டவர்கள்.

அசாம் மாநிலத்தில் மட்டுந்தான் இந்த சிறை முகாம் வரவிருக்கின்றன என்பதில்லை. முன்னாள் மராட்டிய மாநில முதல்வர் தேவேந்திர பண்டவிஸ்-இன் கூற்றின்படி மராட்டிய மாநிலத்திலும், மத்திய அரசு இதுபோன்ற சிறை முகாம்களை உருவாக்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது. அதன்படி பூர்வாங்க வேலைகள்தொடங்கப்பெற்றன. இவற்றின் இப்போதைய நிலை தெரியவில்லை. (இப்போதைய முதல்வர், உதவுதாக்கரே நாங்கள் தடுப்பு முகாம்களை கட்ட மாட்டோம் என அறிவித்துள்ளார்.)

இப்படி தடுப்புக்காவல் முகாம்களை - சிறை முகாம்களைக் கட்டமைப்பதன் வழி, மோடி அரசாங்கம் ஒரு பெரும் பகுதி முஸ்லிம்களை இந்திய குடிமக்களின் தேசிய பதிவேட்டிலிருந்து

அகற்றிவிட முயற்சிக்கின்றது என்பது உண்மை என நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

இப்படிக் குடியுரிமையை இழந்தவர்களை என்ன செய்ய வேண்டும். இவர்களின் எதிர்காலம் இருண்டது என்றாகிவிட வேண்டுமென்பது இவர்களின் இலட்சியம். அங்கே அவர்கள் எல்லாவிதமான கொடுமைகளுக்கும் ஆளாக்கப் படுவார்கள். மொத்தத்தில் இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன் ஜெர்மனியில் நடந்த இனப்படுகொலை நாடாக இந்தியா ஆகிவிடும்.

## அண்டை நாடுகளில் சிறை முகாம்கள்

இந்தியாவின் பக்கத்து நாடாகிய சைனாவில் முஸ்லிம்கள் தாங்கொண்ணா கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். கடந்த பல ஆண்டுகளாகவே, உய்குர் முஸ்லிம்கள் சிறை முகாம்களில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். இந்தச் செய்தி பல ஆண்டுகளாக வெளிவந்து கொண்டே இருக்கின்றது. இதுகுறித்து நீண்ட ஆய்வு ஒன்றை *2019* மே, வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டிருந்தோம்.

சீனாவில் இப்படிப்பட்ட, சிறை முகாம்கள் இருக்கின்றன என்பது வெளியே தெரியாமலிருக்க விடுமுறைகளில், தங்கள் வீட்டுக்கு வந்த மாணவர்களை அப்படியே கடத்திச் சென்றார்கள். அந்த மாணவர்கள் தங்கள் பெற்றோர்களும், பெற்றோர்களின், நண்பர்களும், சுற்றத்தார்களும் இந்த முகாம்களில் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் மீண்டும் தங்கள் கல்வி நிலையங்களுக்கு திரும்பிட இயலவில்லை. அவர்களுடைய ஆயுட்காலம் அஸ்தமித்துவிட்டது.

## கசக் பதி முஸ்லிம்களும்

உய்குர் முஸ்லிம்கள் மட்டுந்தான் இப்படி சிறை முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள் என்றில்லை. “கசக்“ முஸ்லிம்களும் இதர முஸ்லிம்களும் இதேபோல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். பட்டு வருகின்றார்கள்.

## கற்பழிப்பு முகாம்கள்

இந்த முகாம்களில் கற்பழிப்பது, சித்திரவதைச் செய்வது என்பது தாராளமாக நடந்து வருகின்றன. இவையெல்லாம் அதாவது கற்பழிப்பு முதலானவை இரகசியமான இடங்களில் வைத்து நடக்கின்றன.பல இரகசிய இடங்கள் இவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

## மனித உரிமைகள்1

இந்த உலகில் இவையெல்லாம் மிகப்பெரிய மனித உரிமை போராட்டங்களை உருவாக்கி இருக்க வேண்டும். அரசு (சீன அரசு) எப்படியெல்லாம் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகின்றது என்பது இன்னும் விவாதமாக்கப்படவில்லை.

ஒரு காலக்கட்டத்தில் அமெரிக்கா இதுபோன்ற மனித உரிமை மீறல்களைத் தட்டிக்கேட்பதாக இருந்தது. ஆனால் இப்போது அமெரிக்காவிலேயே இதுபோன்ற (Prison Camps) சிறை முகாம்கள் என்ற சித்திரவதைக் கூடங்கள் நிரம்பவே இருக்கின்றன. அதன் தெற்கு எல்லையில் இதுபோன்ற சிறை முகாம்களில் வந்தேறிகள் என்ற பெயரில் முஸ்லிம்கள் அடைக்கப்பட்டு வருகின்றார்கள்.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் இனிவரும் காலங்களில் மனித உரிமைகள் என்ற கூப்பாடு மண்மூடிப்போகும்.

- டாக்டர் ராஃபியா சக்காரிய in the
Deccan Chronicle, Dec-27,2019

- தமிழில் **MGM**

# மலேசிய அதிபரின் அறிக்கை

**மலேசிய பிரதமர் மகாதீர் முஹம்மத் இந்தியாவின் இத்திட்டத்தை கடுமையாக எதிர்த்து எச்சரிக்கிறார். இந்தியாவின் நடவடிக்கை முஸ்லிம்களுக்கு எதிராக அமைகிறது. முஸ்லிம்களை மட்டும் வெளியேற்றுவோம் என்று இந்திய அரசு சட்டம் இயற்றியிருக்கிறது. அதே போல் மலேசியாவிலும் ஒரு சட்டத்தை கொண்டு வந்தால் என்ன நடக்கும்?.. மிக கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று கூறியிருக்கிறார்.**

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்



**வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.**

*நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.*

*ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.*

*இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்பவர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.*

*அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.*

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப் பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹூத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து “எழுந்திரு, ஸலாஹூத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட் டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது” என்று சொன்னதிலிருந்து ஸலாஹூத் தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

## முஜிருத்தீனின் மரணம்

டமாஸ்கஸ் நூருத்தீன் ஸங்கி அவர்களின் கைவசம் வந்ததும் காட்சிகள் மாறின. நீதி நிலைக்க தொடங்கியது. முஸ்லிம்கள் மகிழ்ச்சி யாக வாழ ஆரம்பித்தனர். இதற்கு மாற்றமாக சிலுவைப்படையினர் நம்பிக்கை இழந்தனர். தாங்கள் பலவீனப்பட்டதை உணர்ந்தனர்.

நூருத்தீன் ஸங்கி அவர்கள் டமாஸ்கஸை தன் வசப்படுத்த நினைத்தற்கு முக்கிய காரணம் அதன் அரசனாக மாற வேண்டும் என்ற ஆசையால் அல்ல. மாறாக டமாஸ்கஸ் முஜ்ருதீன் வசம் இருந்த போது முஸ்லிம்கள் குறிப்பாக நூருத்தீன் ஸங்கி அவர்கள் சிலுவைப்படை-யினரை எதிர் கொள்வது கடினமாக இருந்தது. காரணம் டமாஸ்கஸை தாண்டி சென்று தான் அவர்களை எதிர் கொள்ள வேண்டும் என்ற நிலை.

மேலும் முஜ்ருதீன் பலஹீனமானவர். அவர் சிலுவைப்படையினரை எதிர் கொள்ள இயலா மல் அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார். ஃபிரான்குகளுடன் அவர் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைகள் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு பல சங்கடங்களை உருவாக்கிக் கொண்டிருந்தது. அது மட்டுமன்றி எந்த நேரம் வேண்டுமானாலும் முஜ்ருதீன் ஃபிரான்குகளுடன் கூட்டு சேர்ந்து கொள்ளலாம் என்று நூருத்தீன் கருதினார். ஃபிரான்குகளின் கை ஓங்குமானால் இது நடக்கும் என்று நூருத்தீன் கணித்தார்.

எனவே, அவர் முஜ்ருதீனை ஆட்சியை விட்டு அகற்றி டமாஸ்கஸை கைப்பற்றினார். இதில் இருந்த ஒற்றை நோக்கம் சிலுவைப்படை-யினருக்கு எதிராக ஒன்றுபட்ட இஸ்லாமிய படையை நிறுத்துவது. அதற்கு குறுக்கில் யாரும் இருக்கக் கூடாது என்பதே.

ஆனால் முஜ்ருதீன் அவர்களுக்கு இதனை ஒப்புக்கொள்ள மனம் இடம் தரவில்லை. தான் வஞ்சிக்கப்பட்டதாக நினைத்தார். வஞ்சனையை வஞ்சனையால் தான் வெல்ல இயலும் என்று நினைத்தார். அதற்காக அவர் ஹிம்சில் இருந்த படியே டமாஸ்கசில் இருந்த தனக்கு வேண்டிய சில ஆட்களைக் கொண்டு நூருத்தீனுக்கு எதிராக செயல்பட தூண்டினார்.

ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் இதனையும் கணித்தே இருந்தார். எனவே, முஜ்ருதீனை உளவெடுக்க ஆட்களை நியமித்திருந்தார். அவர்கள் நூருத்தீனுக்கு நடந்து கொண்டிருக்கும் விஷயங்களை இன்னென்னவென்று தகவல் அளித்துவிட்டனர். கண்ணுக்கு முன்னால் இருந்த சிலுவைப்படையினரை எப்படி வெல்வது என்று சிந்தித்து அந்த பாதையில் பயணித்து கொண்டிருக்கும் போது இது போன்ற இடையூறுகள் அவரை எரிச்சலடைய செய்தன.



எனவே, அவர் முஜ்ருதீனிடமிருந்து ஹிம்சையும் பறித்து விட்டார். இருப்பினும் அவரை கொல்லவில்லை. இதன் பின்னர் முஜ்ருதீன் ஹிம்சை விட்டும் லெவான்தை விட்டும் சென்று பாக்தாத்தில் ஒரு வீட்டை கட்டி அங்கேயே தங்கி அங்கேயே இறந்தும் போனார்.

நூருத்தீன் ஸங்கியின் இந்த இராஜதந்திர நடவடிக்கைகளை கவனித்து வந்த ஃபிரான்குகள் அவரை நினைத்து எந்த நேரமும் கலக்கத்திலேயே இருந்தனர். அவர் எந்த நேரம் வேண்டுமானாலும் அவர்களை நோக்கி படையை நகர்த்தலாம். அவர்களை கொன்றுவிடலாம் என்பதை உணர்ந்த அவர்கள் நூருத்தீன் ஸங்கியிடம் நட்புக்கரம் நீட்டி அவரை நண்பராக்கி கொள்ளதே சிறந்தது என்று முடிவெடுத்தனர்.

இந்த காலக்கட்டத்தில் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் நூருத்தீனின் நெருங்கிய நபர்களின் ஒருவராக மாறத் தொடங்கினார். அவர் நூருத்தீனுடன் தொடர்ச்சியாக பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க தொடங்கினார். அவர் போலோ விளையாட்டில் சிறந்து விளங்கினார். அந்த விளையாட்டு நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு மிகவும் பிடித்தது. அதை அவர் ஒரு போர் பயிற்சியாகவே விளையாடி வந்தார்.

கி.பி. 1156ம் ஆண்டிலும் கி.பி.1157ம் ஆண்டிலும் பல்வேறு நிலநடுங்கங்கள் லெவான்த், அலெப்போ, ஹமா போன்ற இடங்களை தாக்கியது. இதில் பலத்த சேதம் ஏற்பட்டது. ஏராளமான மக்கள் இறந்தனர். இவர்களுக்கு பல்வேறு உதவிகளை நூருத்தீன் ஸங்கி அவர்கள் செய்ய வேண்டி இருந்தது. இதற்கிடையே கி.பி.1157ம் ஆண்டில் பஃலாபக் கோட்டையை நோக்கி தன் படையை நகர்த்தி சென்றார். அங்கு நிலைமை எப்படி உள்ளது என்பதை கண்காணிப்பதற்காகவே அவர் அங்கு சென்றார்.

ஆனால் அவர் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே ஹிம்சும் ஹமாவும் அதனை சுற்றியுள்ள இடங்களும் ஃபிரான்குகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்ற செய்திகள் அவரை வந்தடைந்தன. சிலுவைப்படையினர் அங்கே பெருத்த அக்கிரமங்களை செய்து கொண்டிருந்தார்கள். இதே நேரத்தில் ராஆஸ் அல் மா என்ற இடத்திலிருந்து ஒரு செய்தி அவரை வந்தடைந்தது. பனியா கோட்டையை மீண்டும் கைப்பற்று

வதற்காக சிலுவைப்படையினரின் பெரிய படை ஒன்று அந்த கோட்டையை நோக்கி சென்று கொண்டிருப்பதாக அந்த தகவல் கிடைத்தது.

## ஹூலா ஏரி போர்

ஜெருசலத்தின் பால்ட்வின் 3 (King Baldwin III of Jerusalem ) என்ற மன்னன் ஒரு பெரும் படையை தயார் செய்து கொண்டு பனியா கோட்டையை கைப்பற்றுவதற்காக சென்று கொண்டிருந்தான். கி.பி.1157ஆம் ஆண்டு அது. பொதுவாக ஃபிரான்குகள் நூருத்தீன் ஸங்கி அவர்களை கண்டு நடுங்கிக் கொண்டிருந்த நேரம் அது. ஆனால் பால்ட்வின் 3 என்ற அந்த மன்னன் அந்த மாபெரும் தவறை செய்யத் துணிந்தான். அவன் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு எதிராக படையை திரட்டி வந்தான்.

இந்த செயலை செய்யக்கூடிய துணிச்சலை அவனுக்கு தந்தது இரண்டு விஷயங்கள். ஒன்று 1156ம் ஆண்டில் மட்டும் நூருத்தீன் ஸங்கி அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பல இடங்களில் நிகழ்ந்த நில நடுக்கங்கள். கிட்டத்தட்ட 40க்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள். லெவான்த் மற்றும் அலெப்போவை அழித்து போட்டு விட்டன. ஹமாவும் கடுமையாக பாதிக்கப்பட்டது. அது மட்டுமன்றி டமாஸ்கசும் அவ்வப்போது பாதிப்பை சந்தித்து வந்தது. இது நூருத்தீன் ஸங்கி அவர்களின் பொருளாதாரத்தை பெரிய அளவில் பாதித்து இருந்தது.

இரண்டாவது கிறித்தவ சிலுவைப்படை-யினரை தூண்டி விட்டுக்கொண்டிருந்த நைட் ஹாஸ்பிடலர்கள் (Knight Hospitaller) மற்றும் நைட் டெம்ப்ளர்ஸ்கள் (Knight Templar). இந்த நைட் டெம்ப்ளர்ஸ் மற்றும் நைட் ஹாஸ்பிடலர்கள் பற்றி இன்ஷா அல்லாஹ் வேறு சந்தர்ப்பத்தில் காண்போம்.

இவர்கள் இரண்டு குழுவினரும் கிறித்தவ தேவாலயங்களை சேர்ந்த இரண்டு வகையான தீவிரவாதிகள். நைட் ஹாஸ்பிடலர்கள் மிதமான தீவிரவாதிகள். இவர்கள் புனித நிலத்திற்கு (ஜெருசலத்திற்கு) பயணம் செய்து வரும் யாத்ரீகர்களுக்கு காயம்பட்டால், நோய்வாய்பட்டால் சேவை செய்வதற்காக உருவாக்கப்பட்டவர்கள் என்று கூறிக் கொண்டாலும் இவர்கள் புனித நிலத்தை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட தங்களை அர்ப்பணித்துக் கொண்ட படை வீரர்கள் என்பதே உண்மை.



நைட் டெம்ப்ளர்ஸ்கள் மிகத்தீவிரமான தீவிரவாதிகள். இவர்களும் கிறித்தவத்திற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இவர்களுக்கு இடையே உள்ள வித்தியாசத்தை விளக்குவதென்றால் கிறித்தவத்தை நிலை நாட்டுவதற்காக தாங்கள் செல்லும் வழியில் நைட் ஹாஸ்பிடலர்கள் தங்களுக்கு தேவையான உணவு கிடைத்ததென்றால் அதை உண்டு கொள்வார்கள். சற்று தேவைக்கு அதிகமாக கிடைத்ததென்றால் சேமித்து வைத்துக் கொள்வார்கள்.

கிடைக்காத போது அதை அனுசரித்து கொள் வார்கள். அவர்களின் ஒரே இலக்கு கிறித்த வத்தை தவிர உலகில் வேறு எந்த கொள்கையும் இருக்கக்கூடாது.

ஆனால் நைட் டெம்ப்ளர்கள் தேவையான உணவு கிடைத்தாலும் அதில் குறைவான அளவையே உட்கொள்வார்கள். தங்களுக் கிடையே கடுமையான கட்டுப்பாட்டை உருவாக்கி வைத்திருந்தார்கள். இவர்கள் சாலமன் கோயிலின் கிறித்துவின் ஏழை சகவீரர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மிகக்கடுமையான போர் பயிற்சி பெற்றவர்கள். திறமையானவர்கள்.

சிலுவைப்படையினரை பொருத்தவரை அதில் போர் பயிற்சி பெற்றவர்கள் பெறாத வர்கள் என அனைவரும் இருந்தனர். ஏற்கனவே கூறியிருந்ததன் படி ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொரு கிறித்தவன் வர வேண்டும் என்ற போப்-இன் உத்தரவின்படி அவர்கள் சிலுவைப்படையில் பங்கு கொண்டிருந்தனர்.

இந்த நைட் டெம்ப்ளர்களில் ஒருவன் தான் சமீபத்தில் நியூசிலாந்தில் மசூதிக்குள் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் முஸ்லிம்களை சுட்டு கொன்று குவித்தது. இதிலிருந்தே இந்த நைட் டெம்ப்ளர்களின் கொள்கை என்ன என்பதை எளிதில் புரிந்து கொள்ள இயலும்.

இந்த இரண்டு குழுவினரின் தூண்டுதலின் பேரில் தான் ஜெருசலத்தின் பால்ட்வின் 3 மன்னன் பனியா கோட்டையை நோக்கி படை யெடுத்தான். நூருத்தீன் ஸங்கி அவர்கள் இந்த செய்தியை தன் சகோதரர் நசீருத்துன் அமீர் அமீரான் என்பவருக்கு அனுப்பி இதனை கவனித்துக் கொள்ளும்படி கட்டளையிட்டார். இந்த கட்டளையின்படி நசீருத்தீன் அவர்கள் ஜெருசலத்தின் பால்ட்வின் 3 மன்னன் வருவதற்கு முன்பாக அவர்களை எதிர்நோக்கி சென்றார். பனியா கோட்டையை முற்றுகையிட்டார்.

பால்ட்வின் மற்றும் நைட் டெம்ப்ளர்களும், நைட் ஹாஸ்பிடலர்களும் லேக் ஹூலா என்ற இடத்தில் முகாமிட்டிருந்தனர். நுசுரத்தீன் அவர்களை எதிர்கொண்டு சென்று அவர்களை வெற்றி கொண்டார். பால்ட்வின் மற்றும் நைட் டெம்ப்ளர்கள், நைட் ஹாஸ்பிடலர்களின் வருகையை அறிந்த பனியா கோட்டையில் இருந்த ஃபிரான்குகளும் முன்னேறி வந்தனர். ஆனால் நுசுரத்தீன் மிக தீரமாக அவர்களுடன் போரிட்டார். அதே நேரத்தில் துருக்கிய படைவீரர்களும் ஃபிரான்குகளை துவம்சம் செய்ய தயாராக இருந்தனர். ஆனால் அதற்கு அவசியமேற்படவில்லை.

இந்தப் போரில் சிலுவைப்படையினருக்கு மிகப்பெரிய தோல்வி. இறைவன் முஸ்லிம் களுக்கு மிகப்பெரிய வெற்றியை பரிசளித்தான். கிறித்தவர்களில் பெரும்பகுதியினர் கொல்லப் பட்டுவிட்டனர். சிலர் படுகாயமடைந்தனர். சிலர் சிறை பிடிக்கப்பட்டார்கள். அவர்களு டைய அதிக எண்ணிக்கையிலான குதிரைகள், போர் தளவாடங்கள், செல்வங்கள் முஸ்லிம் களால் கைப்பற்றப்பட்டது.

பிடிபட்ட சிலுவைப்படையினரையும் அவர் களிடமிருந்தும் இறந்த சிலுவைப் படையின ரிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட போர் தளவாடங் களையும் டமாஸ்கசில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இந்த ஊர்வலத்தைக் காண டமாஸ்கசின் மக்கள் அணி அணியாக திரண்டு வந்திருந்தனர். அந்த நாள் முஸ்லிம்களுக்கு மறக்கமுடியாத நாளாக மாறிப்போனது. நூருத்தீன் ஸங்கி அவர்கள் பிடிபட்ட சில சிலுவைப்படையினரை பஃலாபக் பகுதிக்கு அனுப்பி அங்கே வைத்து அவர்களுடைய தலைகளை துண்டிக்க கட்டளையிட்டார்.

இந்த வெற்றி கிட்டியதற்கு வெகுவிரைவில் மற்றொரு நற்செய்தியை அசதுத்தீன் அவர்கள் நூருத்துன் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். மிகப் பெரிய எண்ணிக்கையிலான துணிச்சலான துருக்கிய வீரர்கள் அவருடைய படையில் இணைந்துள்ளதாகவும் இதன் காரணமாக வட திசையில் இருந்து வந்த பல தெய்வ வழிபாடு கொண்ட மிகப்பெரிய படையை எதிர் கொள்ள இயன்றதாகவும் கூறி இருந்தார். இந்த சண்டையில் அந்த மிகப்பெரிய படை வெற்றி கொள்ளப்பட்டு அவர்களில் பலர் சிறை பிடிக்கப்பட்டனர்.

இப்போது அசதுதுன் தன்னுடன் இணைந்து கொண்ட அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு



உயிரை விடத் தயாராக இருந்த மிகப்பெரிய துருக்கிய படை வீரர்களோடு பஃலாபக்-ஐ வந்தடைந்தார். அங்கே அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களை சந்தித்தார்கள். நூருத்தீன் ஸங்கி அவர்களின் ஆணைக்கிணங்க பல தெய்வ வழிபாடு கொண்ட கூட்டத்தினர் இருந்த பகுதிக்கு அவர்களை பணிய வைக்க சென்றனர். இந்த நேரத்தில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் டமாஸ்கசுக்கு சென்று தன் படையினருக்கு தேவையான ஆயுதங்களை தயார் செய்து கொண்டார். இதற்காக அவர் அங்கு சில நாட்கள் இருந்தார். அங்கு அவர் தம் மக்களை விட்டு இறை வழியில் போர் புரிவதற்கான ஜிஹாதிற்கான அழைப்பை விடுத்தார். இந்த அழைப்பிற்கு பலர் செவி சாய்த்தனர். ரபியுல் அவ்வல் மாதத்தில் அவர் டமாஸ்கசை விட்டு ஜிஹாதிய படையுடன் கிளம்பினார்.

ரபிஅல் ஆகிர் மாதத்தில் நூருத்தீன் பனியா கோட்டையை வந்தடைந்தார். இந்த நேரத்தில் அசதுத்தீனிடமிருந்த ஒரு செய்தி வந்தது. அப்போது அசதுத்துன் தன் படை வீரர்களுடன் ஹூனின் என்ற இடத்தில் இருந்தார். முஸ்லிம்கள் குறைந்த அளவில் இருப்பதாக தவறான உளவுத் தகவலை பெற்றுக் கொண்டு அவர்களை தாக்குவதற்காக நூறு திறமையான டெம்பிளர் நைட் வீரர்களை திறமையான தலைமையோடு சிலுவைப்படையினர் அனுப்பி வைத்தனர்.

இந்தப் படையினர் தேவையின்றி தானாக வந்து அசதுத்தீனிடம் மாட்டிக்கொண்டனர். அசதுத்தீன் அவர்களில் பலரை கொன்று விட்டார். சிலர் சிறைபட்டார்கள். சிறைபட்ட நைட் டெம்ப்ளர்களை இறந்த சிலுவைப்படை-யினரின் தலைகளோடும் அவர்களுடைய ஆயுதங்களோடும் டமாஸ்கசில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டனர். இந்த செய்தி நூருத்தீன் அவர்களுக்கு கொண்டு செல்லப் பட்டது.

இந்த நேரத்தில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் பனியா கோட்டையை முற்றுகையிட்டிருந்தார். சிலுவைப்படையினர் பனியா கோட்டையை காப்பாற்றுவதற்காக பல்வேறு முயற்சிகளை செய்தனர். அந்த முயற்சிகள் வெற்றி பெற்றதா? இதன் பின்னர் நூருத்தீன் ஸங்கி அவர்கள் கடும் நோய்வாய் பட்டார். அதிலிருந்து அவர் பிழைத்தெழுந்தாரா?

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.



# பன்றிக்காய்ச்சலா பதற வேண்டாம்

பன்றிக்காய்ச்சலை எவ்வாறு கட்டுப் படுத்துவது, அதனை தடுக்க என்ன செய்யலாம், பன்றி காய்ச்சலால் பாதிக்கப் பட்ட நபருக்கு சிகிச்சை அளிப்பது எப்படி என்பது குறித்து அறிந்து கொள்ளலாம்.

மீண்டும் டெங்கு, பன்றிக்காய்ச்சல்... ஆகிய வார்த்தைகள் மக்களுக்கு அச்சத்தை உருவாக்கி வருகின்றன. பன்றிக்காய்ச்சல் எப்படி பரவுகிறது, அதன் அறிகுறிகள் என்னென்ன, அதற் கான சிகிச்சைகள் குறித்து மதுரை பெரிய மருத்துவமனை டீன் மருத்துவர் மருது பாண்டியன் நம்மிடம் விளக்கம் அளித்தார். அதுபற்றிய தகவல்களை இனி விரிவாக காணலாம்.

'ஸ்வைன் ப்ளூ' என பன்றி காய்ச்சலை ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இது 'ப்ளூ வைரஸ்' எனப்படும் 'இன்ப்ளூயென்சா வைரஸ்' என்ற கிருமியால் பன்றிகளுக்கு வரக்கூடிய நோய். இந்த வைரஸ், எப்படி மனிதர்களுக்கு சளி- காய்ச்சலை வர வழைக்கிறதோ, அதேபோன்று பன்றிகளுக்கும் பாதிப்பை வரவழைக்கும். தொடக்கத்தில் பன்றிகளிடம் இருந்துதான் இந்த நோய் மனிதர்களுக்கு பரவியது.

ஆனால், இப்போது ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு வேகமாக காற்றின் மூலம் பரவி வருகிறது. தும்மல் மற்றும் இருமல் ஆகிய இரு முக்கிய காரணங்கள் மூலம் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவுகிறது. சில சமயங்களில் ப்ளூ வைரஸ்கள் தொற்றியுள்ள பொருட்களை தொட்டுவிட்டு, பிறகு மூக்கு அல்லது வாய் பகுதிகளை தொட்டாலும் இந்நோய் தாக்கக்கூடும்.

பன்றிக்காய்ச்சல் தொற்றினால் மனிதனுக்கு பொதுவாக வரக்கூடிய காய்ச்சலுக்குரிய அறிகுறிகள்தான் இருக்கும். குறிப்பாக சளி, காய்ச்சல், தொண்டைவலி, சோர்வு, உடல் வலி, குளிர் போன்றவையும் வரும். சிலருக்கு வாந்தி மற்றும் வயிற்று போக்கும் ஏற்படக்கூடும்.

பன்றிக் காய்ச்சலை பரப்பும் வைரசுக்கு ஒரு வினோத சக்தியும் இருக்கிறது. அது என்ன வென்றால் இது இன்னொரு வைரசுடன் சேர்ந்து மூன்றாவதாக புதிய வைரசாகவும் உருமாறி-விடக்கூடும். எனவே அலட்சியம் காட்டினால், நோய் தீவிரம் அடைந்து உடல் உறுப்புகள், செயல் இழந்து உயிரிழப்பும் வரலாம்.

பன்றிக் காய்ச்சலை எவ்வாறு கட்டுப் படுத்துவது, அதனை தடுக்க என்ன செய்யலாம்,

பன்றிக் காய்ச்சல் பாதிக்கப்பட்ட நபருக்கு சிகிச்சை அளிப்பது எப்படி என்பது குறித்து மதுரை பெரிய மருத்துவமனை இளநிலை, முதுநிலை மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் அடிக்கடி நடத்தப்பட்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு டீன் மருத்துவர் மருதுபாண்டியன் கூறினார்.

தினமும் உணவு உண்ணும் முன்பும், பின்பும் சோப்பு போட்டு முறையாக கையை கழுவ வேண்டும். சளி இருமல் இருப்பவர்கள் இருமும் போது கைக்குட்டை கொண்டு வாயை மூடிக் கொள்ள வேண்டும். வைரஸ் தொற்று பரவும் காலங்களில் கை குலுக்குவது, கட்டி அணைப்பது போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. சளி, இருமல் இருக்கும் குழந்தைகளை வீட்டிலேயே தனியாக வைத்து பராமரிக்கலாம். பள்ளிக்கு அனுப்பினால் மேலும் பலருக்கு பரவும்.




வீட்டையும் வீட்டை சுற்றியுள்ள இடங்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். காய்ச்சல் வந்தால் சுய மருத்துவம் செய்யாமல் அருகில் உள்ள டாக்டரை அணுக வேண்டும். இதுபோன்ற வழிகளை பின்பற்றி பன்றிக் காய்ச்சலை எளிதில் பரவாமல் தடுக்கலாம்.

## தடுக்க முடியுமா?

பன்றிக்காய்ச்சலை தடுக்க முடியுமா? என்பது குறித்து மதுரை பெரிய மருத்துவமனையின் மருந்தியல் துறை பேராசிரியர் மருத்துவர் பாலாஜிநாதன் கூறியதாவது:-

பன்றிக்காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு இருந்தால் அதனை 80 சதவீதம் தடுத்து விடலாம். பன்றி காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்ட ஒருவரை குணப்படுத்த முடியும். ஆனால், அந்த வைரஸ் பாதிக்கப்பட்ட நபருக்கு வேறு ஏதேனும் பாதிப்பு இருந்தால் அவரை குணப் படுத்துவது சற்று கடினமானதாகிவிடும்.


எடுத்துக்காட்டாக பன்றிக்காய்ச் சலால் பாதிக்கப்பட்டவருக்கு சர்க்கரை நோய், நுரையீரல் பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினை இருந்தால் அவருக்கு தகுந்த சிகிச்சை மிக அவசியமானது. பொதுவாக குழந்தைகளையும், பெரியவர்களையும் இந்த வைரஸ் எளிதாக தாக்குகிறது.

பன்றிக் காய்ச்சலுக்கு முறையான சிகிச்சை தங்கள் அருகில் இருக்கும் அரசு மருத்துவமனை களில் கிடைக்கிறது. அதற்கான தடுப்பூசிகள் மதுரை பெரிய மருத்துவமனையில் இருக்கிறது. அதுபோல் பன்றி காய்ச்சலை கண்டறிவதற்காக பிரத்யோக ஆய்வகமும் மதுரை பெரிய மருத்துவ மனையில் உள்ளது. தென் மாவட்டங்களில் இதுவே அங்கீகாரம் பெற்ற மிகப்பெரிய ஆய்வகமாகும்.

பன்றிக் காய்ச்சலுக்கு மருந்து உண்டா என்று கேட்டால், 'உண்டு' என்பதுதான் பதில். பன்றிக்காய்ச்சல் வைரஸ் கிருமியை அழிக்கும் 'ஒசல்டாமிவிர்' என்ற மாத்திரை இருக்கிறது.

ஆகவே அதற்கான அறிகுறிகள் தென் பட்டால் மருத்துவரிடம் சென்று பார்க்க வேண்டும். மேலும், இந்த வைரசுக்கு எதிரான தடுப்பூசியும் போடப்படும். இந்த வைரஸ் ஒவ்வொரு வருடத்திற்கும் மாறி மாறி உருவெடுப்பதால், ஆண்டுதோறும் புது தடுப்பூசி போட வேண்டும் என்றார்.

**- நன்றி விடுதலை**



# தன் இறுதி மூச்சு வரை ஜாதீய அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடியவர் தந்தை பெரியார்

*தந்தை பெரியார் அவர்கள் 18-3-1947 -இல் Sir என்ற South Indian Railways - சவுத் இந்தியன் ரெயில்வே ஊழியர்களிடையே ஆற்றியஉரை...*

*அந்த உரைகள் "இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து என்ற தலைப்பில் வெளிவந்தது. அதன் இருபகுதிகளை வைகறை வெளிச்சம் முந்தைய இரு இதழ்களில் தந்திருக்கிறோம். அதன் தொடர்ச்சியை இங்கே தருகின்றோம்...*

## இஸ்லாம்

இஸ்லாம் என்றால் முகமது நபிகள் மதம் என்றோ, இங்கு லுங்கி கட்டிக்கொண்டு, அளந்து தாடி வைத்துக்கொண்டு இருக்கும் சாயபு, ராவுத்தர், மரைக்காயர், மாப்பிள்ளை என்கின்றவர்கள் மதம் என்றோ கருதி விடாதீர்கள். திராவிடர்கள் மதம் முகம்மது நபிக்கு முன்பு கிருஸ்து நாதருக்கு முன்பு, புத்த மகானுக்கு முன்பு ஆரியர்களுக்கு "கிருஷ்ணன்", "ராமன்", "சிவன்", "விஷ்ணு"க் களுக்கு முன்பு திராவிடர்களுக்கு இருந்த மதமாகும். இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி என்ற பொருள்படும் அரபுச் சொல். இஸ்லாம் என்பது சகோதரத்தன்மை என்பது இவ்வளவுதான்!

100, 200 வருஷத்துக்கு முற்பட்ட அகராதிகளைப் பாருங்கள். அரபு வார்த்தையில் சொல்லாமல் தமிழில் ஒரு கடவுள். பரஸ்பர பணிவு,

பக்தி, உடன்பிறப்பு என்ற தன்மைகள் கொண்ட மதம் என்றால் போதும். கடவுள் என்பது திராவிட மொழி, காட் (GOD) என்பது ஆங்கில மொழி, அல்லாஹ் என்பது அரபு மொழி என்பதல்லாமல், திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுள் அல்ல. கொள்கை அல்ல என்பேன்.

மதங்களை விபூதிப்பூச்சு, நாமம், உச்சிக் குடுமிகளைக் கொண்டு நிர்ணயிப்பதுபோல் இஸ்லாத்தை தலை மொட்டை, தாடி, லுங்கி முதலியவைகளைக் கொண்டு நிர்ணயிக்கா தீர்கள். இஸ்லாத்துக்கு எஜமானர் இந்த நாட்டு முஸ்லிம்கள் அல்ல. இவர்கள் இஸ்லாத்தின் ஒரு பகுதியினர். மலையாள மாப்பிள்ளைமார் மற்றொரு பகுதியினர், ஈஜீப்பட்டார் மற்றொரு பகுதியினர். ஜப்பான், ஜெர்மன் இஸ்லாமியர்கள் மற்றொரு பகுதியினர். ஆப்ரிக்கர், நீக்ரோவர், அபிசீனியர் ஆகிய இஸ்லாமியர் மற்றொரு பகுதியினர், இவர்கள் இத்தனை பேருக்கும் ஒரு கடவுள் - அதுவும் உருவம், பெண்டு, பிள்ளை, சோறு சாறு வேண்டாததும், அற்றதுமாகும்.

உடன்பிறப்பு, சம உரிமை, கட்டுப்பாடு இவைதான் பொது மற்றவைகள் எல்லாம் கால, தேச வர்த்தமானங்களைப் பொறுத்தது. இவை ஒன்றாய் இருப்பதால்தான் 60 கோடி மக்கள் உலகில் எந்தப் பாகத்தில் இருந்தாலும் உடன்பிறப்பாய் இருக்கிறார்கள். இவர்களுக்கு உலகம் நடுங்குகிறது. நீங்கள் இந்து என்றால் உங்கள் 15 கோடி மக்களுக்கு எது பொது? எங்கே மானம்? எங்கே உடன் பிறப்பு? எங்கே ஒற்றுமை? எங்கே மனிதத் தன்மை, கட்டுப்பாடு? கோபித்து ஆத்திரப்பட்டு என்ன செய்வது?

டாக்டர் அம்பேத்கர் இப்போதைக்கு வெற்றி பெற்றாலும் இந்த ஆவேசம் அடங்கிய வுடன் அவர் இந்து என்று சொல்லிக் கொள்வாரே யானால் மறுபடியும் அவர் பஞ்சப்பட்டியலில் சேர்க்கப்பட்டுவிடுவார்.

நாம் இந்த நாட்டை இந்து நாடாக இந்துஸ் தானமாக ஆக்குவதைவிட திராவிடஸ்தானாக அல்லது இந்தப் பெயரைப் பார்ப்பனர் சகிக்க வில்லையானால் திராவிட நாடு கொள்கையே கொண்ட பாகிஸ்தான் என்ற வேறு பெயராக மாற்றிக்கொள்வதில் தப்பு என்ன?

## மதம் என்பது

"மதம்" இல்லாமல் மக்கள் வாழ முடியாது. அதாவது நான் சொல்லும் மதம் கடவுளுக்கும் மக்களுக்கு சம்பந்தமும் மோட்சமும், விதியும், மன்னிப்பும், சன்மானமும் மேலோகத்தில் அளிப் பது என்கின்ற மதம் அல்ல. மற்றெதுவென்றால் மனிதனுக்கு மனிதன் மரியாதையாய் (பணிவாய்) அன்பாய், பக்தியாய், சாந்தியாய், சகோதரத் தன்மையாய், ஒற்றுமையாய், ஒழுக்கமாய், உதவியாய் வாழும் கொள்கை. உங்களுக்குப் புரிவதற்காக மதம் என்ற பழக்க வார்த்தையில் சொல்லுகிறேன். இதைச் சமுதாயக் கொள்கை என்று சொல்ல எனக்கு இஷ்டம் இதை நீங்கள் மதம் என்று சொல்ல வேண்டும் என்றாலும், ஆட்சேபிக்கவில்லை. இப்படிப்பட்ட "மதம்" இல்லாமல் மனிதன் சமுதாயத்தில் வாழுவது சங்கடப்படும்.

ஆகையால், இந்த நாட்டில் இந்தக் கொள்கையின் பேரால் ஏற்கனவே ஒன்றுபட்டு வாழும் 10 கோடி மக்களுடன் நாம் திராவிடர்கள் 4 கோடிப் பேர்களில் குறைந்தது தமிழர் 2 கோடிப் பேர் ஒரு கொள்கையினராய் வாழ்ந்து, மானம் பெற்று, ஈனம் ஒழித்து, மனிதத் தன்மை உரிமையுடன் வாழ்ந்தால் யாருக்கு என்ன நஷ்டம்? என்ன இழிவு? என்று கேட்கிறேன் அல்லது இந்தப் பார்ப்பன அட்டூழி யத்துக்கு யாராவது வேறு மருந்து சொல்லட்டும் நான் கேட்கிறேன். திராவிட நாட்டில் நாம் இஸ்லாம்

ஆனால், நம் இஷ்டப்படிதான் இஸ்லாம் இருக்குமே தவிர, யாரோ, சாயபோ, முல்லாவோ சொல்லுகிறபடி இஸ்லாம் இருக்காது. எனக்கு 10 நாட்டு முஸ்லிம்கள் அனுசரிக்கும் இஸ்லா மும் தெரியும். நாட்டு இஷ்டம் மெஜாரிட்டி இஷ்டம்தானே தவிர, இந்து மதம்போல் (3 1/8) மூன்றே அரைக்கால் பார்ப்பனர் 93 பேர்களை எட்டி நில், நீ படிக்க முடியாது, நீ சூத்திரன், வேசி மகன், உனக்குச் சரிசமத்துவம் இல்லை என்பதுஅல்ல இஸ்லாம். அதாவது, பணிவையும், சாந்தியையும், உண்மை சகோதரத் துவத்தையும் கொள்கையாகக் கொண்ட மார்க்கம். மற்றது எது எப்படி இருந்தாலும் ஒற்றுமை, கட்டுப்பாடு கொண்ட மார்க்கம். இதை யாரும் மறுக்க முடியாது.

நான் இஸ்லாத்துக்கு வக்காலத்துப் பேசவில்லை. பிரச்சாரம் செய்யவில்லை. இது உண்மை! உண்மை! முஸ்லிம்களிடம் எனக்கு உங்களை எல்லாம்விட அளவு கடந்த அன்போ, நேசமோ, நம்பிக்கையோ, கூட்டுறவுவோ கிடையாது. ஆனால், பார்ப்பனீயம், இந்து என்னும் பொல்லாத கடுமையான கோரமான பாம்பைக் கொல்லுவதற்கு அல்லது அதன் விஷத்தன்மை பாதகத்திலிருந்து விலகுவதற்கு இதுதான் மருந்து. இஸ்லாத்தைச் சரியாய் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் இங்கிலாந்து ஈஜிப்ட், துருக்கி சென்று வாருங்கள்.




வரப்போகும் சுயராஜ்யம் நமக்கு மகாமகா கேடாக இருக்கும். திராவிடர்கள் 100-க்கு 75 பேர்கள் அனுமார்களாக, விபீஷணர்களாக வாழுவதுடன், தோழரு அவனாசிலிங்கம் போன்ற மற்றும் பல திராவிடர்கள், பண்டிதர்கள், சர்கள், தங்கள் பின்னால் மணிக்கட்டின வால் ஒட்ட வைத்துக்கொண்டு, ராம பஜனை (ஆரியர் பஜனை) செய்து, ஆரியன் பின் திரிந்து, நம்மை நசுக்கப்போகிறார்கள்.

இது என்ன மானக்கேடு! என்னுடைய நாட்டில், என் வரிப்பணத்தில், எனக்காக நடக்கிற ஆட்சியில் எனக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. எனக்கு விகித உத்தியோகமில்லை என்றால், எனக்கு மனிதத் தன்மை இல்லை என்றால், இதற்காக ஆரியனுக்கு நான் விண்ணப்பம் போடுவதும், விழுந்து கும்பிடுவதும், கெஞ்சிக் கூத்தாடுவதும் மானமுள்ள தன்மையா என்று கேட்கிறேன். யாரோ சில துரோகிகள் சுயநல வஞ்சகர்கள் மானம், ஈனம் இல்லாமல் தங்களைப் பார்ப்பன அடிமை (இந்து) என்று சொல்லிக்கொண்டால் நாமும் இந்து(அடியேன், தாசன், நாய்க்குட்டி, அடிமை) என்று சொல்லிக் கொள்ளுவதா என்று கேட்கிறேன்.

இழிவு நீங்க இஸ்லாம் என்கிற மந்திரம்தான் நம்மை மனிராக்க முடியும். இதை நான் இன்று சொல்லவில்லை. நேற்று சொல்லவில்லை. **1919-1920** முதல் இன்றுவரை 28 வருடங்களாகச் சொல்லி வருகிறேன். எனக்கு ஒன்றும் செல்வாக்குக் குறைந்து போகவில்லை. இதற்கு முக்கியக் காரணம் என்னவென்றால் இழிவு நீங்க வேறு மருந்து இல்லை. இந்த வியாதியை நீக்கும் முயற்சியில் இதுவரை எந்தப் பெரிய வைத்தியனுடைய எந்த மருந்தும் தோல்வியையே அடைந்துவிட்டது.

## உன் கதி என்னவாகும்?

சாயபுகளும் பதவி விகிதாச்சாரம் பெற்று. ஷெடியூல்டு வகுப்பாகும் பதவி உத்தியோகமும் கல்வி விகிதாச்சாரமும் பெற்று மீதி உள்ளதில் பார்ப்பனர் ஏகபோகமாய் உட்கார்ந்து கொண்டால். திராவிடனே அல்லது தமிழனே அதாவது பார்ப்பான் அல்லாத முஸ்லிம் அல்லாத கிறிஸ்துவன் அல்லாத ஆதிதிராவிடன் (ஷெடியூல்டு வகுப்பார்) அல்லாத திராவிடனே “சூத்திரனே” உன் கதி, உன் எதிர்காலம் என்ன ஆகும்? சிந்தித்துப்பார். அரசியல் நிர்ணய சபையில் உனக்குப் பிரதிநிதி எங்கே?செடியூல்டு வகுப்புக்கு, பார்ப்பனனுக்கு கொள்ளையடிக்கும் வியாபாரிக்கு, கொடுமை முறை சங்ராச்சாரிக்கு பிரதிநிதிகள் இருக்கிறார்கள். “நான் ஏன் சூத்திரன்” என்று பதறுகிற திராவிடனுக்குப் பிரதிநிதி எங்கே? நினைத்துப் பார். மானத்தோடு சிந்தித்துப்பார். உத்தியோகம் மாத்திரமல்ல, நமது லட்சியம். நம் இழிவு போக வேண்டும். நாம் விபீஷணன் இல்லாத சமுதாயத்தினராக இருக்க வேண்டும்.

என் அன்புள்ள அருமைத் திராவிடச் சகோதரனே! இதற்கு இஸ்லாத்தைத் தவிர ஒரு மருந்து சொல். இப்போதே சொல்லாதே. வீடு போய் தமிழ்ப் பெரியார்கள், சர் பெரியார்கள்,

பண்டிதப் பெரியார்கள், ஆங்கிலம் கற்று பதவி வகிக்கும் வக்கீல், உத்தியோகப் பெரியார்கள் முதலானவர்களுடன் கலந்து கட்டி அழுது முடிவு கண்டு நாளைக்குச் சொல்.

இதுவரை கல்லு போடாமல், கலகம் செய்யாமல் பேச இடங்கொடுத்துப் பொறுமை யோடு கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு 100 இஸ்லாம்.

(பெரியார் பேச்சு முடிவுற்றதும் பெருத்த நீண்ட கைதட்டல்)

## ஏன் இஸ்லாத்தில் சேர வேண்டும்?

"இழிவு நீங்க இஸ்லாம்" என்ற தலைப்புக்குக் காரணமான பெரியாரின் திருச்சிப் பேச்சுக்கு வந்த பல அதிருப்தி குறிப்புகளுக்கு பெரியாரின் பதில் :

தோழர்களே!

எனது 18-3-47 -ந் தேதி திருச்சி சொற் பொழிவையும்தலையங்கத்தையும்"குடி அரசில்" படித்த தோழருகள் பலரில் சுமார் 10,15 தோழர்கள் வரை கடிந்தும், கலகத்தும், தயங்கியும், தாட்சண்யப்பட்டும், மிரட்டியும், பயந்தும், கண்டிப்பாயும், வழவழ என்றும் பல விதமாய் ஆசிரியருக்கும், எனக்கும் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள்.

நேரிலும் சிலர் வந்து நீண்ட சொற்போர் நடத்தினார்கள். ஆதலால், அவைகளுக்குச் சமா தானம் சொல்லும் முறையிலும், நேரில் பேசிய தோழர்களுக்குச் சமாதானம் சொன்னதைத் தெரிவிக்கும் முறையிலும் இதை எழுதுகிறேன். கோபப்படாமல், ஆத்திரப்படாமல், மத மயக்கமில்லாமல் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு மதத்தின் மீது நமக்குள்ள மத வெறுப்புக் காரணமாகவே அந்த மக்கள் மீதும் வெறுப்படைகிறோம்.

இன்று முஸ்லிம்கள் மீது இந்துக்களுக்குள்ள வெறுப்புக் காரணம் இஸ்லாம் மத வெறுப்பேயாகும்.

இஸ்லாம் மதமானது ஆரிய மதத்திற்கு (இந்து மதத்திற்கு) எதிரானதாக இருப்பதாகவே இஸ்லாத்தை இந்துக்கள் (ஆரியர்கள்) வெறுக்கிறார்கள்.

ஏன் எதிராய் இருக்கிறதென்றா, இஸ்லாம் இந்து மதத்தின் அடிப்படையையே தகர்த்து விடுகிறது.

இந்து மதம் என்னும் ஆரிய மதத்திற்குப் பல கடவுள்கள், உருவக் கடவுள் உண்டு. உருவங்களும் பல மாதிரியான உருவங்களாகும்.

மக்களுக்குள் பல ஜாதி பேதங்களுண்டு. பிறவிலேயே ஜாதி வகுக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் பிராமணன், சூத்திரன், பஞ்சமன் (பறையன்) என்ற உயர்வு தாழ்வு கொண்ட ஜாதியினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இந்த கொள்கைக்கு நாம் ஆளாகி அவற்றுள் கீழ் ஜாதியாய் இருக்கிறோம்.

இஸ்லாம் மதத்தில் ஒரு கடவுள்தான் உண்டு. அதுவும் உருவமற்ற கடவுள்தான்.

இஸ்லாத்தின் ஜாதிகள், பேதங்கள், உயர்வு தாழ்வுகள் கிடையாது. பிறவியின் காரணமாய் ஜாதி பாகுபாடும், மேன்மை - இழிவும் கிடை யாது. அதாவது, இஸ்லாத்தில் பிராமணன் (மேல்-ஜாதி), சூத்திரன் (கீழ்ஜாதி), பறையன் (கடைஜாதி), பஞ்சமன் என்பவர்கள் கிடையாது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இஸ்லாம் ஒரு கடவுள், ஒரு ஜாதி. அதாவது, ஒன்றே குலம், ஒருவனே தேவன் அடிப்படை யைக் கொண்டது. இந்த அடிப்படை திராவிட னுடையது ; திராவிடனுக்கு வேண்டியது என்றும் சொல்லலாம்.

இந்து (ஆரிய) மதம் என்பது, பல கடவுள்கள், பல ஜாதிகள் - அதிலும் கடவுள்களால் சிருஷ் டிக்கப்பட்ட ஜாதிகள் என்கின்ற அடிப்படை யைக் கொண்டது.

இந்தப் பல கடவுள்கள், பல ஜாதி என்கின்ற தன்மைகளால் ஆரியர்கள் (பிராமணர்கள்) நல்ல வசதியும் பயனும் அடைகிறார்கள். திரா விடர்கள் கேடும். கீழ்மையும், மனித உரிமைத் தடையும் அடைகிறார்கள். ஆதலாலேயே இஸ்லாத்தின் கொள்கை பிராமணர்களுக்கு மிகக் கேடானதாக இருந்து வருகிறது. திராவிடர்

களுக்கு இஸ்லாத்தினால் நலம் ஏற்பட்ட இழிவு நீங்க வசதியாகிறது.

ஆகவேதான் பார்ப்பணர்கள் (பிராமணர்கள் - ஆரியர்கள்) இஸ்லாத்தை வெறுக்கச் செய்ய வேண்டியவர்களாகிறார்கள்.

இஸ்லாம் மதத்தை எல்லா மக்களும் அனுசரித்தால் பிராமணர் என்கின்ற ஜாதியே, சமுதாயமே இரா. பல கடவுள்களும், விக்கிரக (உருவ)க் கடவுளும் இருக்கமாட்டா. இந்த விக்கிரகக் கடவுள்களுக்குப் படைக்கும் பொருள் வருவாயும் நின்று போகும்.

இதனாலேயே இஸ்லாம் ஆரியரால் வெறுக் கப்படுகிறது. வெகுகாலமாய் வெறுக்கப்பட்டு இஸ்லாமியர்கள் மீது பல பழிகள் சுமத்தி மக்களுக்கு வெறுப்புணர்ச்சி ஊட்டப்பட்டும் வருகிறது. ஆகவே இந்தப்படி இஸ்லாம் மதம் வெறுக்கப்படுவதினால் இஸ்லாமியரும் ஆரியரால் வெறுக்கப்பட்டும், ஆரிய மத அடிமைகளான சூத்திரர் (திராவிடர்)களாலும் வெறுக்கப்படுமாறும் செய்யப்பட்டுவிட்டது. ஆகவேதான் இஸ்லாத்தின் மீது உள்ள வெறுப் பாலேயே திராவிட இந்துக்கள் என்பவர்களும் இஸ்லாமியர்களான முஸ்லிம்களை வெறுத்துப் பழகிவிட்டார்கள் என்கிறேன்.

இஸ்லாத்தைப் போல் கிருஸ்தவமதம், சீக்கிய மதம், ஆரிய சமாஜம், பிரம சமாஜம், பௌத்த சமாஜம் முதலியவை இந்துக்களால் வெறுக்கப்படுவதில்லை.

ஏன் என்றால் கிருஸ்து, சீக்கிய முதலிய மதங்களும் இஸ்லாத்துக்கு ஒரு அளவுக்கு விரோதமானவைகளாதலால் இவை இஸ்லாத்தின் பொது விரோதிகள் என்கின்ற முறையில் இந்து, கிருஸ்துவர், சீக்கியர் ஆகிய மூவருக்குள் விரோதமில்லாமல் கூடியவரை ஒற்றுமையாகவும் இருக்கிறார்கள். அநேக பார்ப்பனர்கள் கூட கிருஸ்துவ மதத்தை தழுவி இருக்கிறார்கள். பல பார்ப்பனர்கள், கிருஸ்துவ மத ஸ்தாபனங்களில் சிப்பந்திகளாகவும் இருக் கிறார்கள். கிருஸ்துவ மதத்தை தழுவும் இந்து எவனும் இங்கு இந்து ஜாதிக் கொள்கையைத் தழுவ அனுமதிக்கப்படுகிறான். சீக்கியனும் அநேகமாய் இந்து மதக் கொள்கைப் படித்தான் கடவுளை வணங்குகிறான்.

ஆனால், உருவக் கடவுளுக்குப் பதிலாகப் புஸ்தகத்தைக் கடவுள் உருவமாய் வைத்து இந்து பிரார்த்தனை முறையில் வணங்குகிறான். சீக்கியனும் இந்துக்கள் போலவே (அவ்வளவு இல்லாவிட்டாலும்) ஒரு அளவுக்கு ஜாதிப் பாகுபாடு அனுசரிக்கிறான். சீக்கியரின் தீண்டப்படாத, கீழ்ஜாதி மக்கள் என்று ஒரு கூட்டம் இருக்கச் செய்யப்பட்டு இருந்து வருகிறது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை கூட அதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. தனித்தொகுதி போராட்டமும், சீக்கிய வகுப்புகள் இருந்து வருகிறது. ஆனால் ஆரியப் பத்திரிகைகள் இதை வெளியில் தெரியாமல் மறைத்து விடுகின்றன. நான் பஞ்சாப்புக்குச் சென்றபோது நேரில் அறிந்த செய்தி இது.

கிருஸ்தவரிலும் நம் நாட்டில் தீண்டப்படாத கிருஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சிலர் படிப்பிக்கப்பட்டு உபாத்தியாயர் வேலை கொடுக்கப்பட்டிருப்பதோடு சரி என்பது அல்லாமல் மற்றபடி அவர்களுக்குக் கிருஸ்தவரி லாகட்டும் இஸ்லாமியர்களுக்கு அளிப்பது போன்ற உரிமைகூட அளிக்கப்பட்டிருக்க வில்லை. ஆதலால் ஆரியர்கள் கிருஸ்துவம், சீக்கியம் ஆன மதங்களுடன் நேசமாக இருக் கிறார்கள். பௌத்தம், சமணம் முதலியவையும் நடப்பில்இஸ்லாத்தை வெறுப்பதால் இந்து வுடன் வேஷத்தில் உறவாடுவதால் அவைகளி டம் ஆரியருக்கு அவ்வளவு வெறுப்பு இல்லை.

எனவே, இஸ்லாம் மதம் பார்ப்பனர்களால் சுயலாபம், வகுப்பு நலம் காரணமாக வெறுக் கப்பட்டதாக இருப்பதால் இஸ்லாமியர்கள் (முஸ்லிம்கள்) பார்ப்பனஆரிய அடிமைகளாலும் மூட நம்பிக்கையால் வெறுக்கப்பட்டு வருகிறார்கள். எனவே இன்றும் இந்துமதத் தலைவர்களுக்கு முஸ்லிம்களை வெறுக்கச் செய்வதல்லாமல் இந்து மதப் பிரச்சாரத்தின் முக்கிய தத்துவம், கொள்கை, பணி என்ன என்று யாராவது சொல்ல முடியுமா?

இஸ்லாம் யாரால் ஏற்பட்டது? புத்தர், கிருஸ்து போன்ற மற்றொரு சீர்திருத்தவாதியால் ஏற்பட்டதே அல்லாமல் வேறு என்ன?



இஸ்லாம் ஏற்பட்டது எதற்கு என்றால் பல கடவுள் கொள்கை, மக்கள் பிறவி பேதக் கொள்கை ஆகியவைகளை ஒழித்து ஒரு கடவுள், ஒரு சமூகம் (ஜாதி) ஆக்குவதற்கும், மூட நம்பிக்கை, விக்கிரக வணக்கத்தை ஒழித்து பகுத்தறிவுக்கு இணங்கவும் ஏற்பட்டதேயாகும்.

இதை அரபியர் மதம், துருக்கியர் மதம் என்பது போல் இதைத் திராவிடர் மதம், அல்லது திராவிட மதம் என்று வேண்டுமானாலும் சொல்லிக் கொள்வதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. எப்படியாவது மக்கள் ஜாதி பேதம் பிறவி உயர்வு தாழ்வு, பல கடவுள், உருவ வழிபாடு ஆகியவற்றில் இருந்து விலகவேண்டும். பார்ப்பனனுக்கு அடிமையாய் இருந்து இழிவு பட்டு, தலையெடுக்க முடியாமல் இருக்கும் கேட்டிலிருந்து மீள வேண்டும் என்பதைத் தவிர, வேறு கருத்து ஒன்றையும் கொண்டு நாம் இப்படிச் சொல்லவில்லை என்பதைத் திராவிடர்கள் உணர வேண்டும்.

## வெட்கக் கேடு

பார்ப்பானிடம் அன்பு, பார்ப்பானிடம் நேசம் வைத்து பார்ப்பான் போல வேஷம் போட்டு நடித்துக் கொண்டு சூத்திரனாக இருக்கச் சம்மதிக்கும் ஒருவன் அதுவும் திராவிடனாக இருப்பவன் இஸ்லாமியரிடம் அன்பு, நேசம், வேஷம், நடிப்பு நடித்து சூத்திரனல்லாதவனாக திராவிடனாகவே இருப்பதில் என்ன வெட்கக் கேடு என்பது நமக்கு விளங்கவில்லை.

மொத்தத்தில் 100-க்கு 10 பேர்களான மக்களிடம் நேசம் பூண்டு, கலந்து சுதந்திரத் தோடு, மானத்தோடு வாழ வெட்கமோ, வெறுப்போ பட்டுக்கொண்டு, 100-க்கு 3 பேராய் இருக்கும் நம்மிலும் வேறுபட்ட, நம்மை இழிவுபடுத்தும் மக்களுடன் சேர்ந்தவர்களாகச் சொல்லிக்கொண்டு,

மானம், சுதந்திரம் இல்லாமல் இழிவாழ்வு வாழ்வதற்கு மனம் சகிக்கக் காரணம் என்ன வென்றால், பார்ப்பான் நம்மை இஸ்லாத்துக்கு எதிரிகளாக ஆக்கி, அதை “பேய், பிசாசு, பூச்சாண்டியாக”ப் போதித்து இருப்பதைத் தவிர வேறு காரணம் என்ன சொல்ல முடியும்? நம்மிடத்தில் இல்லாத கெட்டப் பழக்கம் இஸ்லாத்தில் என்ன இருக்கிறது? இஸ்லாத்தில்

இல்லாத நல்ல பழக்கம் நம்மிடத்தில் என்ன இருக்கிறது? நாம் எந்த நல்ல காரியத்தை சீர்த் திருத்தத்தைச் செய்வதை இஸ்லாம் தடுக்கிறது?

"கையை வெட்டினால் ஒழிய பிழைக்க மாட்டாய்" என்று டாக்டர் சொன்னால் வெட்டிவிடச் சம்மதிக்கிறோம். மலஜலம் கழிக்க வேறு ஓட்டைப்போட வேண்டுமென்றால் போட்டுக்கொண்டு அதில் மலஜலம் கழிக்கிறோம். எடுத்துவிட வேண்டும் என்றால் கர்ப்பப் பையை எடுத்துவிடச் சம்மதிக்கிறோம். இன்னும் முக்கிய உறுப்புகளை முக்கிய பண்டங் களை இழந்தாவது உயிர் வாழச் சம்மதிக்கிறோம்.

அப்படி இருக்க ஒரு அயோக்கியக் கூட்டம் நம்மை ஜெயித்து, அடிமையாக்கி, தங்களுக்கு அடிமை என்கின்ற தத்துவம் கொண்ட ஒரு கொள்கையை நம்மீது பலாத்காரத்திலும், தந்தி ரத்திலும் புகுத்தி இழிவுபடுத்தி வைத்திருப்பதை ஒழிக்க வேண்டுமென்றால் இதற்கு இவ்வளவு யோசனை, எதிர்ப்பு, தயக்கம், வெட்கம் என்றால் இந்த இழிவு எப்பொழுதுதான் எந்த வகையில்தான் மறைவது என்று கேட்கிறேன். என்மீது கோபிப்பவர்கள் இதற்குப்பரிகாரம் சொல்லாமல் கோபித்தால் அவர்களை வெறும் வெறியர்கள் என்றுதானே அறிவாளிகள் சொல்வார்கள்.

கோபிக்கும் தோழர்களே! வேத சாஸ்திரங் களை, புராண இதிகாசங்களை நெருப்பிலிட்டுக் கொளுத்துவதால் சூத்திரப்பட்டம் ஒழியப் போவதில்லை. கோவில்களை இடிப்பதாலோ விக்கிரகங்ளை உடைத்து தூளாக்குவதாலோ சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை. மறுபடியும் தோசைத் திருப்புவதுபோல் பழையபடித் திருப்பிவிடப் பார்ப்பனருக்குத் தெரியும். முடியும், திராவிடன் என்று சொல்லிக் கொள்வதால் மாத்திரம் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை.

இன்றைய நிலைமையில் நான் இந்துவல்ல என்று சொல்லிக் கொண்டாலும், சூத்திரப் பட்டம் ஒழியப்போவதில்லை. இந்து மதம் இலேசில் ஒழியாது. அது பச்சோந்திபோல் சுலபத்தில் சாகும் மதமல்ல. அதைச் சாகடிப் பதற்கு நம் ஆயுளும், நம் பேரன்மார் ஆயுளும் கூடப்போதாது.

ஆகவே நாம் அதை (இந்து மதத்தை) விட்டு விலகுவதுதான் நம் ஆயுளில் முடியக் கூடிய காரியமாகும். அப்படி நாம் விலகினோமே யானால் நாம் யார் என்று சொல்லிக்கொள்ள இன்றைய நிலைக்கு ஒரு பெயர் வேண்டும். அதைப் புதிதாக உண்டாக்க வேண்டும். பரப்ப வேண்டும். அதை இன்றைய காந்தி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அதற்குச் சட்டம், சம்பிரதாயம், செலாவணி ஏற்பட வேண்டும்.

அதற்கு உண்டான பிரதிநிதித்துவம் உரிமை நிர்ணயித்து ஒப்புக்கொள்ளச் செய்ய வேண் டும். இவ்வளவும் செய்வதென்றால் பார்ப்பன எதிர்ப்புக்கும் சூழ்ச்சிக்கும் பனியாக்கள் ஆதர வுக்கும் முன்னால் சுலபத்தில் ஆகக்கூடியதா? நம் நெல்லிக்காய் மூட்டை சமுதாயத்தால் நினைக்கக்கூடியதா? என்பதையும் சிந்தியுங்கள். பிறகு இப்படி எல்லாம் இல்லாமல் இந்தக் கஷ்டங்களுக்கும், முடியாமைக்கும் ஆளாகாமல் ஏற்கனவே ஏற்பட்டு உலகம் பூராவும் செல்வாக்கும், செலாவணியும் பெற்று எவரும் சிந்தித்து சிந்தித்து ஒப்புக்கொண்டு அமுலில் இருந்துவருவதும், நமது உண்மையானதுமான நான் தழுவிக்கொண்டேன் என்று சொல்வதில் என்ன தப்பு என்ன கஷ்டம் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

## வேறு வழி சொல்லுங்கள்

இஸ்லாம் என்றால் என்ன உங்களுக்கு கசப்பும் கோபமும் ஏற்படக் காரணமென்ன? இந்து என்றால் உங்களுக்கு ஒரு இனிப்பும், திருப்தியும் ஏற்படக் காரணமென்ன என்பதை முதலில் விளங்கிக் கொள்ளுங்கள். அல்லது இதற்கு (உங்கள் சூத்திரப் பட்டம் இழிவு நீங்க, உங்கள் காலத்தில் நீங்க) ஏதாவது ஒரு வழிச் சொல்லுங்கள். என் அபிப்ராயத்தை நான் சொன்னேன். உங்கள் அபிப்ராயம் நீங்கள் சொல்லுங்கள். வாதம் பிரதிவாதம் செய்து கொண்டு வம்பளந்து கொண்டே இருந்து வரும்காலம் கடத்தி நாம் சூத்திரனாக நம் பின் சந்ததிகளையும் சூத்திரனாக இருக்கும்படி விட்டுவிடச் சாவதா? இப்படியே செத்தால் பார்ப்பானுக்குத்தான் இலாபம். நம் பின் சந்ததிகளால் அவனுக்குத் தெவசமும்

தெய்வாராதனையும் கொடுக்கப்படும்.

ஆதலால் அவன் இதற்குச் சீக்கிரம் ஒரு முடிவேற்படவிட மாட்டான். நமக்குள் அடிதடி வரையில் கொண்டுவந்து விட்டுவிடுவான். எனவே யோசியுங்கள். ஆரிய மத அபிமானம் எனும் வெறியை விட்டுவிட்டு மான அபிமானம் வைத்து யோசியுங்கள். கோபியாதீர்கள்.

சிந்தித்து ஒரு முடிவுக்கு வராமல் இஸ்லாம் மார்க்கமும், இந்து மார்க்கமும் இரு மார்க்க மக்களும் முட்டிக் கொண்டால் நட்டம், அடி, உதை, சாவு திராவிடனுக்குத்தான். பார்ப்பானுக்கு எவ்வித நட்டமும் இல்லை என்பது மாத்திரமல்லாமல் அவருக்கு வரும்படி உண்டு. இகலோக கோர்ட்டில் பீசு, லஞ்சம், பரலோக கோர்ட்டில் திதி, திவசம் முதலிய வைதீகச் சடங்கு இவைகளால்தானே ஆரியர்கள் இன்று மேல் நிலையில் வாழ்ந்து கொண்டு நம்மை தனது அடியாக, வைப்பாட்டி மகன் என்பதாகச் சட்டம், சாஸ்திரம் வகுத்து இழிவு படுத்தினான் என்பதால்

## சூத்திரனாயிருக்க வெட்கப்படுகிறேன்

பெரியார் திருச்சி, கும்பகோணம் ஆகிய இடங்களில் 'இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து' என்று ஆற்றிய சொற்பொழிவு குறித்துப் பெரியாருக்கு வந்த ஒரு வசவு கடிதத்திற்குப் பெரியார் பதில்

நண்பரே!

உங்கள் 26-3-47 -ந் தேதி கடிதம் பார்த்தேன். இதில் உங்கள் ஊர், பேர் போடாததற்கு மன்னியுங்கள். உங்கள் வசை மொழிகளை நான் லட்சியம் செய்து வருந்தவில்லை.

பார்ப்பனீயத்திற்கு நான் பயப்படவில்லை. பார்ப்பனீயம் என்னைப் பிணைத்துக் கொண்டு, தனது கொள்கைக்கு அடிமையாக்கிக் கொண்டிருப்பதுமல்லாமல் என்னையும் இந்தக் காலத்திலும் சூத்திரனாக்கி வைத்திருக்கிறதே என்று நான் வெட்கப்படுகிறேன். நீங்களும் சூத்திரப் பட்டத்தைச்சுமக்க இஷ்டப்படாதவர்களானால் வெட்கப்படுங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன்.

நவகாளியில் செத்தவர்களும், வங்காளத்தில் செத்தவர்களும், பஞ்சாபியில் மற்றும் வட நாட்டில் செத்தவர்களும் நமக்கு ஒன்றுதான்.

அங்குள்ள இஸ்லாமல்லாதார் பெரிதும் சூத்திரப்பட்டத்திற்கு வெட்கப்படாதவர்கள். கவலைப்பட்டு நாமென்ன செய்ய முடியும்? சூத்திரனாகச் சந்ததி விருத்திச் செய்துகொண்டு வாழ்வதை விட சூத்திரப்பட்டத்தை ஒழிப்பதற்காகச் சாவது அவ்வளவு கேடானதல்ல. இனி சூத்திரப்பட்டத்திற்கு இடமில்லாத மாதிரியில் சாவுக்கு இரையாவதும் பெரிய நட்டமல்ல.

நான் இஸ்லாத்தில் சேரும்படி யாரைச் சொல்லுகிறேன்? சூத்திரப்பட்டதை வெறுக்கிறவர்களையும் சூத்திரப்பட்டத்தால் இழிநிலையில் பிற்பட்ட தன்மையில் இருக்கிறவர்களையும், திராவிட சமுதாயத்திற்குமான உணர்ச்சி, மனிதத் தன்மை உணர்ச்சி வேண்டும் என்பவர்களையும்தான் இந்து மதத்தைவிட்டு, நம் விருப்பத்திற்கு ஏற்ற இஸ்லாத்தை அல்லது அதுபோன்ற மார்க்கத்தைத் தழுவச் சொல்லுகிறேன். ஆதலால், மற்றவர்கள் பதற வேண்டியதில்லை. வேறு வழி இருந்தால் செய்யுங்கள், காட்டுங்கள். ஏதோ தங்களுக்குச் சரி என்று பட்ட துறையில் வேலை செய்கிறவர்களை திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டு பழிக்காதீர்கள், தடுக்காதீர்கள், தொல்லைக் கொடுக்காதீர்கள்.

## இஸ்லாமானால் வெட்கக்கேடு என்ன?

இஸ்லாமானால் நீங்கள் யாருக்கு அடிமை யாவீர்கள்? இஸ்லாமானால் உங்கள் எவன் இழிவுபடுத்த முடியும்? இந்தியாவில் உள்ள 12 கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்களில் 10 கோடி முஸ்லிம்கள் யார்? திராவிட நாட்டில் (சென்னை மாகாணத்தில்) உள்ள சுமார் 50, 60 லட்சம் முஸ்லிம்களில் சுமார் 40 அல்லது 50 லட்ச முஸ்லிம்கள் யார்? இந்துக்களும், திராவிடர்களுமாய் இருந்தவர்கள் அல்லவா? இப்படிப்பட்ட முஸ்லிம்கள் இப்போது யாருக்கடிமையாய் இருக்கிறார்கள்? அவர்கள் எதற்காக எங்கே வெட்கப்படுகிறார்கள்? சொல்லுங்கள்! காட்டுங்கள்? அவர்கள் சர்க்கார் கோருகிறபடிப் படித்தாலும் படிக்காவிட்டாலும் விகிதாச்சாரத்துக்கு மேலும் உத்தியோகம், ஜெயிலுக்குப் போனாலும்

போகாவிட்டாலும் "சுய ராஜ்யத்தில்" விகிதாச்சாரத்துக்கு மேல்பட்ட சுதந்திரம், தனித்தொகுதி மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவம், ஹைகோர்ட் ஜட்ஜிலும் சட்டசபைப் பதவியிலும் எவ்வளவு சிறிய கமிட்டிகளிலும் விகிதாச்சாரம் சரிபங்கு பெற்றுச் சரிவாழ்வு வாழ்கிறார்கள்.

திராவிடர்களே! (ஆதிதிராவிடர்களே!) உங்கள் கதி என்ன? உங்களுடைய இந்த ஈன நிலைக்கு நீங்கள் இந்துக்கள் என்பதை தவிர வேறு என்ன குறை இருக்கிறது? எனவே, இந்துவாய் இருப்பதற்கு வெட்கப்படாமல், வேதனைப்படாமல் இந்த இழிவை ஒழிக்க உங்கள் உயிரை பயன்படுத்துவது என்று சிந்திக்காமல், "உனக்கு வெட்கமில்லையா?" என்று என்னைக் கேட்கிறீர்களே! இது நியாயமா? இதனால் (இஸ்லாமாகும்படிச் சொல்வதால்) இளைஞர் மனம் என்மீது வெறுப்புக் கொண்டுவிட்டது என்று மிரட்டி எனக்குக் கடிதம் எழுதுகிறீர்கள். இந்தக் காலத்து இளைஞர்கள் மனம் என்மீது (வெறுப்புக் கொள்ளாது) வெறுப்புக் கொண்டு விடுமானாலும்கூட நான் அதற்கு அஞ்சவில்லை.

இனி வருங்கால இளைஞர் பாராட்டுவார்கள். பாராட்டாவிட்டாலும் இன்று நான் சொன்னதைப் பின்பற்றி வீரத்தோடு மானவாழ்வு வாழும் வழியில் இருப்பார்கள். சரியாகவோ, தப்பாகவோ நான் அதில் உறுதிகொண்டு இருப்பதால் எனக்கு எக்கேடு வருவதானாலும், சாவு வருவதானாலும் மனக்குறையின்றி நிறை மனதுடன் அனுபவிப்பேன் - சாவேன் என்பதை உண்மையாக வெளியிடுகிறேன்.

முதல் முதலில் இஸ்லாத்தைப் போதித்த முகமது நபி மீதும் அக்கால மக்கள் வெறுப்புக் கொண்டார்கள். புத்தர், கிருஸ்து மீதும்தான் வெறுப்புக் கொண்டார்கள். அப்படி இருக்க ஒரு சாதாரண, வெகு சாதாரண மனிதனாகிய நான் அதையே சொல்லும்போது என் மீது வெறுப்புக் கொள்ளுவது என்பது இயற்கைதான்.

ஆனால், இப்போது "எவராலும்" வெறுப்படையாதவர்களும், மாபெரும் விளம்பரத்தால் இந்திய மகாத்துமா எனப்படுபவரான காந்தியாரும், சட்டத்தாலும் காங்கிரஸ் மகா ஜனங்களாலும் இந்திய ஆட்சிக்குத் தலைமைப் பதவிக்கு வந்த மகாவீரதீர புருஷர் என்று எங்கும் முழக்கும்படி செய்யப்பட்டவரான பண்டித ஜனவர்லால் நேருவும், உண்மையிலேயே பல நலன்களை விட்டுவிட்டு சதா மனவேதனை அடைந்துகொண்டு பொதுவாழ்வில் உழலும் அறிவாளியான ராஜகோபலாச்சாரியாரும் மக்களால் போற்றப்பட்டாலும் நாளைக்கு (அல்லது இன்னும் பல்லாண்டு கழித்து) செத்துப்போனால் அவர்களால் செய்யப்பட்ட வேலை என்ன என்று குறிப்பிட (அவர்களால் எழுதப்பட்ட சுயசரித்திரத்தைவிட உங்களுக்காக செய்யப்பட்டது என்று குறிப்பிட) என்ன காரியம் இருக்கிறது? இவ்வளவு பெருமை, இவ்வளவு ஆதரவு, இவ்வளவு வசதி அவர்களுக்கு இருந்தும் உங்கள் பிறவி இழி நிலைக்கு அவர்களால் ஆன பரிகாரம் என்ன? உயிருள்ள வரையில் பழமையைக் காப்பாற்றினார்கள். (எதாபிரியன்மார்) என்பதல்லாமல் மாறுதல் என்ன? வெறும் விளம்பரம்தானே! அதுவும் அவர்கள் கூடவே மயானத்தில் தானாக வெந்துப்போகக் கூடியதுதானே?

ராஜா சர் அண்ணாமலையாருக்கு 10 கோடி, பிர்லாவுக்கு 40 கோடி, ஹைதராபாத் ராஜாவுக்கு 400 கோடி, காந்தியாருக்கும் உலகமெல்லாம் விளம்பரம், ஆச்சாரியாருக்கு இந்தியாவெல்லாம் அறிவாளி என்கின்ற பெயர் என்பவையான இந்தப் பிரக்யாதி அல்லாமல் தனி மரியாதை என்ன? இதுபோலவே உங்கள் இந்து மதத்தையும் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். வெள்ளையன் போவதால் உங்களுக்கு என்ன மாறிவிட்டது? உண்மையான இழிவும் இடரும் நீங்கிற்றா? இஸ்லாமியரைப் பாருங்கள். வெள்ளையன் போனவுடன் பாகிஸ்தான்? உங்களுக்கோ சூத்திரஸ்தான்!

எனவே நான் சொல்லுவதை நீங்கள் கேட்டால் உங்களுக்கு எவ்வளவு லாபம்? உங்கள் பின் சந்ததிக்கு எவ்வளவு மேன்மை? எனக்கும் எவ்வளவு திருப்தி?

"பலாத்காரமாகப் பல இந்துக்கள் இஸ்லாமாக்கப்பட்டார்கள்" என்று சதா இந்துக்கள் முஸ்லிம்கள் மீது பழிசுமத்தி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

நான் பலாத்காரம் செய்கிறேனா? மதம் மாறுகிறவர்களைப் பலாத்காரத்தால் ஆரியர்களும் அவர் கூலிகளும் தடுக்கிறார்கள் என்பதல்லாமல் இதன் பொருள் என்ன? இதில் என்னிடம் என்ன பலாத்காரமிருக்கிறது? "சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்! என் முடிவு இது" என்று உங்களைக் கெஞ்சுகிறேன். பலாத்காரம் எதுவும் இல்லை. பலாத்காரம் செய்ய என்னிடம் ஒரு சக்தியும் இல்லை.

இதுவரை இந்தியாவில் உள்ள 10 கோடி இஸ்லாமானவர்களிடமிருந்து அல்லது ஒரு கோடி இஸ்லாமானவர்களிடமிருந்து ஒரு சிறு கட்டுப்பாடு, கூக்குரல் - அதாவது என்னை இஸ்லாமாக்கி கெடுத்து விட்டார்களே என்ற முறையீடு வந்ததா? அல்லது எந்த இஸ்லாமான வராவது, காந்தியார் மகன் (அப்துல்லா காந்தி) அல்லாமல் வேறு யாராவது தானாக இஸ்லாத்தில் இருந்து இந்துவானாரா? காந்திய மகன் கூட படியும் இந்து ஆனார். என்று அப்போதே சொல்லப்பட்டது.

"சுயராஜ்ய சர்க்காரில் இன்று உங்களுக்கு திராவிடருக்கு நாதி இல்லை. அரசியல் நிர்ணய சபையில் உங்களுக்கு (சூத்திரப்பட்டம் வேண்டாம் என்கின்ற திராவிடனுக்கு) கேள்வி கேட்டபாடில்லை. ஆரிய உறவு மாநாட்டில் நீங்கள் ஒரு கூட்டம் இருப்பதாகக் கூடத் தெரியாது. இந்த நிலையில் உள்ள உங்களுக்கு இஸ்லாம் என்றால் சிகப்புத்துணி பறப்பதைக் கண்ட மாடுபோல் நடுக்கமேன்? பதட்டமேன்? ஆத்திரமேன்? அவதியேன்?

தோழர் காந்தியார் குரானும், கீதையும் ஒன்று என்கிறார். "ராமனுக்குத்தான் ரஹீம் - அல்லாஹ் என்கின்ற பெயர் என்கிறார்.'இந்துக் கடவுள் இஸ்லாம் கடவுள் ஒன்றே' என்கிறார். 'நான் சதா ராம் ரஹீம் என்று பூஜித்துக் கொண்டே இருக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு தங்கள் மாநாட்டில் தீர்மானங்கள் செய்து சுமார் மொத்தத்தில் இங்கு 2000, 3000 பேரும் மலையாளத்தில் சுமார் 600, 700 பேர்களும் இஸ்லாத்தைத் தழுவியதுடன் அவர்கள் இழிவுகள் சிறிது சிறிதாக நீக்கப் பட்டு அவர்களது உரிமைகள் இன்று வழங்கப் பட்டுத் தீர வேண்டிய அளவுக்கு வெற்றி ஏற்பட்டுவிட்டது. திருவனந்தபுர ஆலயப் பிரவேசம், கொச்சி (எண்ணிக்கைக்கு ஏற்ற) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எதனால்? இஸ்லாத்தாலா? இந்து தர்மத்தாலா?

நேற்று சென்னை சட்டசபையில் ஆலயப் பிரவேச மசோதாவைப் பிரேரேபித்த பார்ப்பன ராகிய டாக்டர் ராஜன் என்ன சொல்லிப் பிரேரேபித்தார்?

"இந்து சமுதாயம் நாளுக்கு நாள் குறைந்து பலவீனமடைந்து போகாமல் இருப்பதற்கு (இந்து மதத்தைக் காப்பதற்கு) ஆக இந்த ஆலயப் பிரவேச மசோதாவைப் பிரேரேபிக்கிறேன்."

- என்று சொன்னாரே ஒழிய, மக்களுக்குக் கடவுள் தரிசனம், கடவுள் பிரார்த்தனை, கடவுள் பிரசாதம் கிடைத்துச் சீக்கிரம் மோட்சம் கிடைக்க வேண்டுமென்றோ, மக்கள் பக்தியால் பாவம் மன்னிக்கப்பட்டு மோட்சத்துக்குப் போக வேண்டுமென்பதற்காகவோ பிரேபிக் கிறேன் என்று சொல்லவில்லையே! இதன் அர்த்தம் என்ன? திராவிடர்களை நிரந்தரமாய்ச் சூத்திரர்களாக வைத்து இருக்கச் செய்யும் சூழ்ச்சிதானே இது? கோபிக்கும் - ஆத்திரப்படும் மொக்கைகளுக்கு இது தெரிய வேண்டாமா? என்று கேட்கிறேன்.

சூத்திரன் என்கின்ற பட்டம் இழிவு என்று கருதுகிறவர்களுக்குத்தான் நான் இந்த யோசனையை சொல்லுகிறேனே ஒழிய, சூத்திரப் பட்டத்தைப் பற்றிக்கவலை இல்லை என்பவர்களுக்கு இதைச் சொல்லவில்லை.

சூத்திரப் பட்டத்தைப் பற்றிக் கவலைப் படுகிறவர்களையும் கூட சூத்திரப் பட்டம் ஒழிய வேறு வழி இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டுவிட்டுத்தான் நான் இதைச் சொல்லுகிறேனே தவிர மற்றபடி அவசரப்பட்டு ஆணவத்தால் இதைச் சொல்லவில்லை.

ஆகவே, ஆத்திரப்பட்டு, வைது கடிதம் எழுதின தோழர்களையும், கடிதம் எழுதாமல் என்னைச் சிறு கூட்டத்தில் வைத்துக்கொண்டு விஷமப் பிரச்சாரம் செய்யும் தோழர்களையும் சிந்தித்துப்பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.

இஸ்லாமோ போபியா - என்ற இஸ்லாத்தின் மீது வெறுப்பு. அதனால் முஸ்லிம்கள் மீது வெறுப்பு. அதைத் தொடர்ந்து கூட்டுப் படுகொலைகள், இவையெல்லாம் எப்படி வளர்க் கப்படுகின்றன என்பதை இந்தத் தொடரில் "ஜான் ஃபெப்பர்" குறிப்பிடுகின்றார். நாமும், அதை மன்றத்தில் வைத்து வருகின்றோம்...

அண்மையில் அதாவது டிசம்பர்-9,2019 அன்று இந்தியாவை அப்பிப் பிடித்துக் கொண்டிருக்கும் மோடி-அமித்ஷா தலைமை-யிலான பாசிச அரசு சட்டம் ஒன்றை நாட்டில் கொண்டு வந்தது.

அந்தச் சட்டம்தான் Citizenship Amendment Bill - இப்போது Citizenship Amendment Act. குடியுரிமை திருத்தச் சட்டம்

இது குடியரசு தலைவரின் ஒப்புதலை 13-12-2019 அன்று பெற்று சட்டமானது.

இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் தாக்கச் செய்யப்பட்ட முதல் நாளே, அதாவது 9-12-2019 அன்றே அந்தச் சட்டத்தை எதிர்த்து 1000 ஆயிரம் விஞ்ஞானிகள் கையெழுத்திட்டு ஒரு மனுவை, நாட்டின் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோருக்கு அனுப்பி வைத்தார்கள். (The Hindu, Deccan Cronicle - Dec-10,2019)

அவர்களின் மனுவின் பிரதான பகுதியாக அமைந்தது. "இஸ்லாமோ போபியாதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான பிரதான காரணம்" என்பது. அதாவது இப்படியொரு சட்டத்தை இயற்றுவதற்கான காரணம். இஸ்லாமோ போபியாதான் எனக் கூறிவிட்டார்கள்.

ஆங்கில பத்திரிகை துறையில் அரசுக்கு எதிராகப் போர் நடத்திவரும் டெக்கான் கிரானிக்கிள் பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதுகின்றார். பிரபல ஆங்கில எழுத்தாளர் கோவிந்த கிருஷ்ணன்.

அவர் எழுதுகின்றார்

"Several prominent scients who where signatories to a recent statement demanding the withdrawl of the citizenship amendment bill has called the bill islamophobic"

(Extracted from "Scientific View? Islamophobic" Birthed Cab. DC. Dec-12,2019)

இப்படிக் கருத்துச் சொன்னவர்கள், ஒன்றிரண்டு விஞ்ஞானிகள் அல்ல, ஓராயிரம் விஞ்ஞானிகள்.

அவர்களில் ஒருவர் Suvrat Raju சுவ்ராத்ராஜ் என்பவரும் ஒருவர். இவர், இன்டர்நேஷனல் சென்டர் ஃபார் தியரட்டிக்கல் பிசிஸ்ட் - என்ற சர்வதேச பௌதீக வல்லுநர் International Centre for Theoretical Sciences. ICTS



இந்த குடியுரிமை திருத்த சட்டமும் தேசிய மக்கள் பதிவேடும் ஒன்றாய்ச் சேர்த்தால், மதம் மட்டுமே நம் நாட்டில் குடியுரிமையை தீர்மானிக்கும். இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர்களைத் தவிர, முஸ்லிம்கள் நாங்கள் இந்த நாட்டின் குடிமகன் என நிருபித்தால்தான் இந்த நாட்டின் பிரஜைகள்.

CAB, (இப்போது CAA) Citizenship Amend ment Act. குடியுரிமை திருத்த சட்ட மசோதாவும், NRC என்ற National Register of Citizens - தேசிய குடிமக்கள் பதிவேடு இவை இரண்டுமே இஸ்லாமோ போபியா என்ற இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பின் வெளிப்பாடு - விளைவு.

ஒரு குறிப்பிட்டச் சமுதாயத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்த மத்திய அரசு பல சட்டங்களை இயற்றியுள்ளது. அனைத்தும் இஸ்லாமோ போபியாவை மையமாகக் கொண்டவை. (DC : 12-Dec 2019)

ஆக, இந்த இஸ்லாமோ போபியா - இஸ்லாத்தின் மேலுள்ள வெறுப்புதான் இவர்களை வழி நடத்தி செல்கின்றது. இதற்காக இங்கே பல அமைப்புகள் தோன்றிவிட்டன. கோடிக்கணக்கான பணம் இதற்காக உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் வசூலிக்கப்பட்டு, செலவுச் செய்யப் படுகின்றது.

சில கணக்குகளின்படி நான்கு லட்சம் முழுநேர ஊழியர்கள் இதற்காக நாடெங்கும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை எதிர்கொள்வதும், இஸ்லாத்தையும் - இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளையும், மக்களிடையே பிரச்சாரம் செய்வதே நமது தலையாயப் பணி!

முஸ்லிம்கள் தங்கள் முழு முயற்சியையும் இந்த இஸ்லாமோ போபியாவை - இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் ஏற்படுத்தி வரும் வெறுப்பை அகற்றி, இஸ்லாத்தின் சீரிய பண்புகளை இவர்கள் மன்றத்தில் விளக்கம் வைப்பதே சிறந்த வழி.

**இப்போது நாம் ஜான் ஃபெப்பர் சொல்வதைக் கேட்போம்...**

யூதர்கள் வரலாறு முழுவதும் தாங்கள் எதிரிகள் என எண்ணியவர்களைக் கொலை செய்தார்கள். அதேபோல் அவர்களும் கொலை செய்யப்பட்டார்கள். கொடுமைக்கு உள்ளாக் கப்பட்டார்கள். முதல் சிலுவைப் போர் வீரர்கள், ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் வாழ்ந்த யூதர்களைக் கொலை செய்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் ஆட்சியாளர்கள் அசாதாரணமான பெருந்தன்மையுடன், யூதர்களிடம் நடந்து கொண்டார்கள்.

தொடக்கக் காலந்தொட்டே முஸ்லிம்கள் யூதர்களை அவர்களின் இறை வணக்கங்களில் ஈடுபட தாராளமாக அனுமதித்தார்கள். அவர்கள் அமைதியாக வாழ்ந்திட எல்லா உதவிகளையும் செய்தார்கள்.

முதல் சிலுவைப்போரின் தொடக்கக் காலக்கட்டத்தில் முஸ்லிம்கள் ஜெரூசலத்தை, கிருஸ்தவர்களிடம் பறிகொடுத்தார்கள். (1099-இல்) சலாஹூத்தின் அய்யூபி அவர்கள் அதனை மீட்டார்கள். (1187-இல்) அந்நிலையில் அவர்கள் யூதர்களை மீண்டும் ஜெருசலத்திற்கு அழைத்தார்கள். இந்த அழைப்பை ஏற்று உலகெங்கிலுமுள்ள யூதர்கள் மீண்டும் ஜெருசலத்திற்கு வந்தார்கள். ஒரு விதத்தில் யூதர்கள் ஜியோனிசம் என்ற கோட்பாட்டை வளர்த்திட இது பெரிதும் உதவியது.

(பார்க்க அடிக்குறிப்பு - 1)

முஸ்லிம் தலைவர்களும், தளபதிளும் போரின் தொடக்கக் காலத்திலும், சில நேரங்களில் நடுப்போரின் முடிவிலும் அவர்கள் பங்கிற்கு சில கபளீகரங்களைச் செய்தார்கள். ஆனால், அவர்கள். இதர ஏகத்துவத்தினர் யூதர்கள் - கிறிஸ்துவர்கள் இனப்படுகொலைகளின் சாயலில் கூட செயல்பட்டதில்லை :

(பார்க்க அடிக்குறிப்பு - 2)

ஆனால், நாம் மேலை நாடுகளில் சிலுவைப் போரின் முதல் கட்டத்தில் முஸ்லிம்கள், அநியாயங்களைச் செய்தார்கள் எனப் பிரச்சாரம் செய்கின்றோம், செய்து வருகின்றோம். அது அந்தக் காலக் கட்டத்தில் நடந்தவை. அவை போரின்போது முஸ்லிம்கள் மீது நடந்தவற்றிற்கு எதிரான நடவடிக்கைகள்தாம்.

(பார்க்க அடிக்குறிப்பு - 3)

13-ஆம் நூற்றாண்டில் மம்லுக் முஸ்லிம்கள் (கிலாபத்-ஐ) முஸ்லிம்களின் தலைமையை

ஏற்றார்கள். 1291-இல் இவர்கள் "அக்ரிக்" என்ற நகரை கைப்பற்றினார்கள். அங்கிருந்தவர்கள் அனைவரையும் கொன்றார்கள். இந்தச் செயலை அவர்கள், 250 ஆண்டுகளுக்கு முன் ஜெரூசலத்தில் ஒருவர் விடாமல் குழந்தைகள் உட்பட அனைவரும் கொலை செய்யப்பட்டதற்கு பழி தீர்த்தது என்றார்கள்.

## கரன் ஆம்ஸ்ட்ராங் சொல்லுகின்றார்...

பழி தீர்ப்பதை அனுமதிக்கின்றது. ஆனால், மன்னிப்பதே சிறந்த மாண்பு என்கின்றது எனக்கூறி திருக்குர்ஆன் வசனத்தையும் மேற்கோள் காட்டுகின்றார். 'மம்லூக்' - முஸ்லிம் ஆட்சியாளர்கள் பழிவாங்குவதைத் தங்கள் நிருவாக வழிமுறைகளுள் ஒன்றாக ஆக்கிக் கொண்டார்கள்.

இங்கே நோக்கம், முஸ்லிம் போர் செய்தார்கள் என்பதை மறுப்பதோ! அல்லது யூதாயுசம் (யூதர்கள்) வன்முறையில் ஈடுபட்டார்கள் என்பதை மறுப்பதோ கிறிஸ்தவர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்பதையோ மறுப்பதல்ல.

இந்த மூன்று மதங்களும் போர்களில் ஈடுபட்டன. அந்த வகையில் இவற்றிற்கு வன்முறையின் வரலாறு உண்டு. ஆனால் சிலுவைப் போர் தளகர்த்தர்கள், முஸ்லிம்கள் வன்முறையை வழிமுறையாகக் கொண்டவர்கள். எப்போதுமே சகிப்புத் தன்மை அற்றவர்களாகவே இருந்தார்கள் எனத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

இந்தப் பிரச்சாரத்தின் பின்னணியில் அவர்கள், முஸ்லிம்களைப் பழிதீர்த்துக் கொண்டிருக்கின்றார்கள், அத்தோடு நில்லாமல், முஸ்லிம்கள் மீதான வெறுப்புப் பிரச்சாரத்தை தொடர்ந்து மிகை மிஞ்சிய அளவில் செய்து கொண்டே இருக்கின்றார்கள். - இதை நவீன சிலுவைப்போர் வீரர்கள் (Modernday Crusaders)

தொடர்ந்து செய்து வருகின்றார்கள். இது மக்கள் மனங்களின் மேல் நடக்கும் மிகப்பெரிய ஆக்கிரமிப்பாகும். இந்தப் பொய்ப்பிரச்சாரத்தின் முக்கிய பகுதியாக முஸ்லிம்கள் இயல்பாகவே வன்முறையாளர்கள் எனக்கூறி வருகின்றோம். அதன்வழி அவர்கள், இயல்பாகவே நாகரீகமற்றவர்கள் எனக்கூறி வருகின்றோம்.



முதல் சிலுவைப் போரை நடத்தியவர்கள், தாங்கள் நாகரீகமற்ற ஒரு கொள்கையோடு (இஸ்லாம்) நாகரீகமடைந்த கொள்கையைக் கொண்டு (கிருஸ்தவம்) அறுதிப்போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றே கருதினார்கள். ஆனால், உண்மையில் மிகவும் நாகரீக மடைந்த ஒரு கொள்கையோடு (இஸ்லாத்தோடு) மோதிக் கொண்டிருந்தார்கள். (பார்க்க அடிக்குறிப்பு - 4)

இஸ்லாம், அதனைப் பின்பற்றிய முஸ்லிம்கள், அறிவியல் (விஞ்ஞானம்), மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம், தத்துவஇயல் இவற்றிற்கெல்லாம் மிகவும் முன்னேறியவர்களாக இருந்தார்கள். இவற்றிற்கெல்லாம் முன்னேறி இருந்தவர்களைத்தான், நாகரீகமடையாதவர்கள், காட்டு மிராண்டிடிள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்து போருக்கு நின்றார்கள். (முதல்) சிலுவைப் போர் வீரர்கள்.

அரசு விவசாயிகள், பருத்தி, பட்டு உற்பத்தி இவற்றில் ஐரோப்பியர்களை வெட்கத்தில் தலைகுனிய வைத்திடும் அளவில் வெற்றி முகத்தில் நின்றார்கள்.

அன்றைய நாள்களில், இஸ்லாம் உண்மையிலேயே ஓர் உலகம் தழுவிய நாகரீகம். இதில் சீன நாட்டை மிஞ்சிய நின்றார்கள். மார்க்கோ போலோவுக்கு முன்னரே அவர்கள் சீனாவிற்கு வந்தார்கள். சீனாவின் கண்டுபிடிப்புகளால் பலனடைந்திருந்தார்கள்.

ஒன்பதாம் நூற்றாண்டில் ஹாருன் ரஷீத்-இன் பாக்தாத்-இல் ஒரு சாக்கடை முறை இருந்தது ; இலவச மருத்துவமனை இருந்தது, தபால் முறை இருந்தது, வங்கி முறை (வட்டி இல்லாத) இருந்தது. வங்கிகளின் கிளைகள் சைனா வரை பரவி இருந்தன. (பார்க்க அடிக்குறிப்பு -5)

- MGM

# சிலுவைப்போர்கள் 2.0 அடிக்குறிப்பு

## அடிக்குறிப்பு - 1

வரலாறு முழுவதும் யூதர்கள் வெள்ளைக் கிருஸ்தவ ஐரோப்பியர்கள் கொடுமைப் படுத்தியே வந்தார்கள். இந்தியாவில் இன்று நடமாடும் தீண்டாமையைவிட கொடுமையான தீண்டாமை யூதர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது.

Ghehos, சேரிகள் என்ற சொல் ஆங்கில அகராதியில் யூதர்கள் வாழுமிடங்களைக் குறிப்பதற்காகவே இணைக்கப்பட்டது. யூத பெண்மணிகளுக்கு 'Yellow Cards' என்ற மஞ்சள் அட்டைகள் வழங்கப்பட்டன.

அதன்பொருள் அவர்களை எப்போது வேண்டுமானாலும் பாலியல் வன்கொடுமை களுக்கு உட்படுத்தலாம் என்பதே. இப்படியெல்லாம் அலைக்கழிக்கப்பட்ட யூதர்கள், சிலுவைப்போரின் போது கூட்டாக நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டார்கள்.இதனை இந்தத் தொடரில் ஜான் ஃபெப்பர் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

நாமும் பல்வேறு கட்டுரைகளில் விரிவாகவே குறிப்பிட்டுள்ளோம். இந்த யூதர்கள் நிம்மதியாக வாழ்ந்த காலக்கட்டம் ஒன்று உண்டென்றால், அது முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ்தான். இதனை இங்கே ஜான் ஃபெப்பர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

உலக அரங்கில் யூதர்களின் வரலாற்றை எழுதிய புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்கள் லாரி காலிவ்ஸ் & டொமினிக் லெப்பேரி ஆகியோர் இதனை இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்...

With few exceptions, the jewish peoples have lived in had dwelt in relatives securirty among the arabs over the centuries. The golden age of the diaspora had come in the spain of the caliphs ottaman turks, welcomed the jewish when the door of much of europe were closed to them. the ghastly chain of crimes peapetrated on the jewish people culminating in the crementoriums of germany had been inflicted on them by the christian nations of the rurope and not those of the Islamic east.

ஒரிரு விதிவிலக்குகளை விட்டுவிட்டால், யூத மக்கள், பாதுகாப்பாக வாழ்ந்தது, பல நூற்றாண்டுகளாக அரபுக்களிடையேதான் பாதுகாப்பாக வாழ்ந்தார்கள்.

ஸ்பெயினில் (இஸ்லாமிய ஆட்சித்தலைலர்) கலிபாவின் காலத்தின் போதுதான், நாடற்று அலைந்துக்கொண்டிருந்த யூதர்களின் பொற்காலம் இருந்தது. அதேபோல் உதுமானிய துருக்கியர்களின் தாம் நாடற்று அலைந்து திரிந்த யூதர்களை வரவேற்றார்கள். அப்போது ஐரோப்பிய நாடுகளின் கதவுகள் அவர்களுக்கு அடைக்கப்பட்டிருந்தன. ஜெர்மன் உட்பட அவர்கள்மீது நடந்த மிகவும் குரூரமான கொலைகள் நிகழ்த்தியது கிருஸ்தவ ஐரோப்பிய நாடுகள்தாம்.அல்லாமல், கீழ்த்திரை இஸ்லாமிய நாடுகள்அல்ல.

- O! Jerusalem - Page 10/11)

## அடிக்குறிப்பு - 2

இதர ஏகத்துவத்தினர் என இங்கே குறிப்பிடப்படுபவர்கள், யூதர்களும், கிருஸ்துவர்களும்தான். வரலாற்றில் மூன்று மதங்களை "Revealed Religion" இறைவனால் அருளப்பட்ட மார்க்கம் என்பார்கள். அவை, 'யூதாயா' என்ற யூதர்களின் மதம், கிருஸ்தவர்களின் மதம் இஸ்லாம் என்பனவாகும். இவர்கள் அனைவரும் பின்பற்றிட வேண்டிய மார்க்கம் இஸ்லாம்தான். இறைவன் அருளிய இறுதி வேதம் குர்ஆன். இஸ்லாமல்லாத மார்க்கங்களைக் கொண்டு வருபவர்களிடமிருந்து அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. *(அல்குர்ஆன் - 3:190)*

## அடிக்குறிப்பு - 3

ஜான் ஃபெப்பர், முஸ்லிம்கள் தொடக்க காலத்தில் சில கபளீகரங்கள் செய்தார்கள். போரின்போது சில அநியாயங்களைச் செய்தார்கள் எனக் குறிப்பிடுகின்றார். முதல் சிலுவைப் போரின் முதல் தாக்குதலின் காலக்கட்டத்தில் கி.பி. 1095-1100 வரை. இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களிலிருந்து மிகவும் மாறுபட்டும், வேறுபட்டும் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களால் தங்களைச் சூழ்ந்திருந்த பகைகளையும், சூழ்ச்சிகளையும் கூட இனங்கண்டிட இயலவில்லை. ஆனால் இமானுதீன் செங்கியின் காலத்தில் அவருடைய தலைமையின் கீழ் அணிதிரண்ட முஸ்லிம்கள் போர்களின் போது முஸ்லிம்கள் கடைபிடிக்க வேண்டிய அனைத்து ஒழுக்கங்களையும் கடைபிடித்தார்கள். அதன்பின் சிலுவைப்போரின் அறுதிகாலம் வரை அவர்கள் நெறிபிறழவில்லை. ஆனால் மேலை நாடுகளில் “இஸ்லாமோ ஃபோபியாவை” வளர்க்க முஸ்லிம்கள் மேல் இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக் கட்டிக்கொண்டே இருந்தார்கள். அதில் புனைந்துரைக்கப்பட்டப் பொய்களிலிருந்து இன்னும் ஜான் ஃபெப்பர் போன்றவர்கள் மீளவில்லை என்பதையே காட்டுகின்றது.

இதை Karen Armstrong - கரன் ஆம்ஸ்ட்ராங் போன்ற எழுத்தாளர்கள் உறுதி செய்கிறார்கள்.

கரன் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் Holy Wars - புனிதப் போர்கள் என்ற நூல், இதைப்போன்ற தகவல்களை நிரம்பத் தருகின்றது. இந்த நூலின் பல பகுதிகள் இந்தக் கட்டுரைத் தொடரில் சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

இங்கே நாம் இன்னொற்றையும் கவனிக்க வேண்டும். சிலுவைப் போரின் தொடக்கக் காலத்தில் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் வழிகாட்டுதலை விட்டுவிட்டு வேறு திசைகளில் தடுமாறிப்போனதால்தான் தோல்வியைத் தழுவினார்கள். பிற்றை நாள்களில் அவர்கள் இஸ்லாத்தின் வழிகாட்டுதலின் கீழ்வந்து விட்டதால் அவர்கள் வெற்றிகளை ஈட்டினார்கள். பைத்துல் முகத்திஸ் என்ற ஜெரூசலத்தை மீட்டார்கள். இது வரலாற்றாசிரியர்களின் பார்வை.

முதல் சிலுவைப் போரில் முக்கியப் பங்காற்றிய நூருதீன் ஜெங்கி (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இதே இதழில் இடம் பெறுகின்றது. அது வாசகர்களின் வரவேற்பைப் பெருவாரியாகப் பெற்று வருகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

## அடிக்குறிப்பு - 4

இஸ்லாம் எந்த அளவுக்கு நாகரீகத்தில் முன்னேறி இருந்தது என்பதை அறிந்திட, இஸ்லாமிய நாகரீகம் - என்ற நூலைப் படிக்கவும். வெளியீடு, வேர்கள் பதிப்பகம்.

இஸ்லாத்தின் அருமை, பெருமைகளை - பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் Glimpses of World History என்ற நூலிலும் படிக்கலாம். பண்டித நேரு அவர்கள் இஸ்லாம் நாகரீகத்தின் உச்சத்தில் நின்றபோது ஐரோப்பா இருண்ட காலத்தில் மூழ்கிக் கிடந்தது என்பார்கள். (Glimpses of World History by Jawaharlal Nehru. Page - 148, 12th Edition)

பிரிதோர் இடத்தில் இதே நூலில், பண்டித நேரு அவர்கள் இப்படிக் குறிப்பிடுவார்கள்.

**அடிக்குறிப்பு - 5**

The story of the arabs and of how they spread rapidly over asia, europe and africa and of the ghih culture and civilzation which they developed is one of the wonders of history.

*அரபுக்களின் வரலாறும், அவர்கள் எவ்வளவு வேகமாக ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும், பரவினார்கள் என்பதும், எத்தகைய மகோன்னதமான நாகரீகம், கலாச்சாரம் ஆகியவற்றை வளர்த்தார்கள் என்றும், மனித வரலாற்றின் அற்புதங்கள்.* (Glimpses of world history, Page-149)

மார்க்கோ போலோ என்பவர் பற்றி ஏற்கெனவே இதே தொடரில் அடிக்குறிப்பு 5-இல் தந்துள்ளோம். *- இன்ஷா அல்லாஹ் தொடரும்.*






# உலகம் முழுக்க போராட்டங்கள்

இந்தியாவிற்குள் மட்டுமல்ல தற்போது உலகம் முழுக்க உள்ள இந்திய தூதரங்களுக்கு வெளியே கருப்பு கொடிகளையும், பதாகைகளையும் ஏந்தி சிகிகி சட்டத்திற்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகிறது.

சர்வதேச ஊடகங்கள் இந்தியா தனது ஜனநாயக தன்மையை முழுமையாக இழந்து விட்டது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி சர்வதேச அளவில் இந்தியாவின் மானத்தை கப்பலேற்றுகிறார் மோடி.

# ஒருநாள் தாஃவா கலந்துரையாடல் நிகழ்வு








05.01.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காரைக்கால் நிரவியில் டாக்டர். செய்யது அஹ்மத் அவர்களின் தலைமையில் அன்பகம் தாஃவா குழுவினர் முன்னிலையில் காரைக்கால் மற்றும் நிரவி மாவட்ட சமூக நல அமைப்பின் நிர்வாகிகள், முன்னாள் தலைமையாசிரியர் ஜெயபாலன், சமூக ஆர்வலர்கள், தமிழ்நாடு தவ்ஹித் ஜமாஅத் இளைஞரணியினர் கலந்துக் கொண்டார்கள்.

கலந்துரையாடலில் இஸ்லாமிய அழைப்பு பணியை எப்படி செய்வது?, கடந்த கால அழைப்பு பணிகளின்போது ஏற்பட்ட சோதனைகள், பெரியார் மற்றும் அம்பேத்கர் அவர்களின் கருத்துக்கள், தாஃவா செய்யும்போது நிகழ்கால சூழ்நிலையில் ஏற்படும் பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்வது போன்ற கருத்து பரிமாற்றங்கள் நடைபெற்றது. முஸ்லிம் அல்லாத மக்களுக்கு புத்தகங்கள் இலவசமாக கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துக் கொண்டவர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வின் இறுதியாக மாதம் இரு முறை இதுப்போன்ற கூட்டங்களை நடத்தி தாஃவா செய்வது சம்மந்தமாக விவாதிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இதில் அன்பகம் தாஃவா குழு சார்பாக முஹம்மது ஆரிஃப், ஹைதர் அலி, யாசர் அரஃபாத் மற்றும் சகோதர அமைப்பை சார்ந்தவர்கள் சுமார் 10க்கும் மேற்பட்ட காரைக்கால் மற்றும் நிரவி மாவட்ட நிர்வாகிகள் கலந்துக் கொண்டார்கள். - யாசர் அரஃபாத். S

# நான் முஸ்லிமே அல்லாமல் வேறல்ல!

## 19-11-1930-ல் முதல் வட்ட மேஜை மாநாடு லண்டனில் நடைபெற்ற போது மௌலானா ஜௌஹர் கலந்துகொண்டு ஆற்றிய வீரமுழக்கம்



ஜனாப். ஹாஜி. பீ.எம். அப்துல்கரீம்,
குளச்சல்

தலைவர் அவர்களே! நோயாளிக்குரிய சலுகையில் நான் அமர்ந்து பேச என்னை நீங்கள் அனுமதிப்பீர்களா? டாக்டர் மூஞ்சே தாம் ஓர் தேசத்துரோகி ஆக்கப்பட்ட நிகழ்வைச் சொன்னார். இங்கு மீண்டும் நாங்கள் இருவரும் ஒன்று சேர்க்கப்பட்டதாக கருதுகிறேன். "வைசிராய் ஆப் இந்தியா" கப்பலில் சிரமங்களோடு பிரயாணம் மேற்கொண்டு வந்துள்ளோம். என் இப்பிரயாணத்தை டெய்லி ஹெறால்ட் பத்திரிகை, என் படத்தைப் போட்டு கொள்கை மாறியவன் என வர்ணித்திருக்கிறது.

இங்கிலாந்திலுள்ள அனேகர் கேட்கிறார்கள் ஏன் இந்து முஸ்லீம் பிரச்சினை அரசியலில் தலை காட்டுகிறது என? எனது கருத்துப்படி மதமென்பது வாழ்க்கை நெறியாகும். அவரவர் மத ஆசாரங்களை பின்பற்றி ஒருசேர வாழ்வதுதான் நியதி.

இறைக்கட்டளை எனும்போது நான் முதலிலும் ஓர் முஸ்லிம், இரண்டாவதும் ஓர் முஸ்லீம் கடைசியிலும் ஓர் முஸ்லீம். முஸ்லீமைத் தவிர வேறல்ல. என்னை சிருஷ்டித்தவனுக்கே எனது முதல் கடமை. 1920-ல் "கிலாபத்" தூதுக் குழுவுக்கு தலைமையேற்று செல்லும்போது இரு வட்டங்களில் ஒன்று இந்தியா, ஒன்று கிலாபத் என வாசகம் பொறித்த வட்டங்களை அடையாளமாக சட்டை சேப்பில் வைத்திருந் தோம். டாக்டர் மூஞ்சேயும் ஓர் இந்து, நான் ஓர் முஸ்லிம், இந்திய சம்பந்தப்பட்ட வரை அதன் நலன் சம்பந்தப்பட்ட வரை நான் முஸ்லீம் அவரொரு இந்து என்று பாகுபடுத்த முடியாது.

**இந்தியாவை ஆண்மையற்ற நாடாக்கிய தோடு இந்தியா பற்றி கிரேட் பிரிட்டன் இந்திய சரித்திரத்தை மாற்றி மெக்காலே போன்றோர் எழுதிய நிகழ்வுகள் எங்கள் பள்ளிகளில் போதிக்கும் வரலாறுகளின் திரிபுகள் குரோ தத்தை இந்து, முஸ்லீம்களிடை ஏற்படுத்தியதை இந்நேரம் குறிப்பிட விரும்புகிறேன்.**

இந்தியாவில் நீங்கள் வந்து புதுவகை ஆட்சியை நிர்வ வேண்டியதுள்ளது. இராம பிரான் காலம். பழைய பாண்டவர், கௌரவர், கஜினி, கோரி முகலாய மன்னர்களும் பெரும் பான்மையினர் ஆட்சியை இந்தியாவிற்கு தர வில்லை ஏன்? ஆங்கிலேய கிளைவ். வாரங்

கேஸ்டிங்ஸ் ஆட்சியும் பெரும்பான்மையோர் ஆட்சியல்ல.இனி நாம் இந்தியாவில் பெரும் பான்மை ஆட்சியை புகுத்த விரும்புகிறோம்.

நான் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கேட்டு இங்கு வரவில்லை. குடியேற்ற நாடு அந்தஸ்தில் எனக்கும் நம்பிக்கை இல்லை. நான் என்னை பூரண சுதந்திரவாதியாக அர்ப்பணித்துள்ளேன். 1927-ல் நாங்கள் சென்னையில் சுதந்திரத்தை லட்சியமாக கொண்டு தீர்மானம் நிறைவேற்றி னோம்.

சுதந்திரத்தின் சாரத்துடனே நான் எனது நாட்டிற்கு திரும்ப விரும்புகிறேன். அவ்வா றில்லையெனில் நான் ஓர் அடிமை நாட்டிற்கு செல்லமாட்டேன். அன்னிய நாடு சுதந்திர நாடாக இருப்பதால் இங்கேயே நான் மரணிக்க விரும்புகிறேன். இந்தியாவில் நீங்கள் எங்களுக்கு விடுதலை தராவிட்டால் இங்கு எனக்கொரு புதை குழி தாருங்கள் என முழக்கமிட்டு வீரகேசரி அமர்ந்தார்.

**மௌலானா ஜௌஹர் அன்றே உடல் சுகவீன முற்று காலமாகி அவர் விருப்பப்படி அன்றைய பலஸ்தீனில் அல்அக்ஸா புனித பூமியில் அவர் உடல் நல்லடக்கம் செய்யப் பட்டது.**

உடல் பொருளால் தன் வாழ்வை நாட்டிற் காக துறந்த உண்மையான தியாகியாக வாழ்ந் தவர். செல்வ குடும்பத்தில் பிறந்தவர். சொத்து சுகங்களை நாட்டிற்காக இளந்து தன் இறுதி காலத்தில் காடிகானாவில் குதிரை கட்டும் வண்டி புரையில் வாழ்ந்து உடல் பலவீனமுற்ற நிலையில் பிரயாணம் செய்து நாட்டிற்காக தன் உயிரை ஈந்த எண்ணற்ற தியாகிகளின் செங்குருதியால் தான் இந்தியா சுதந்திரம் பெற்றதே தவிர, வெறுமனே வெள்ளையன் நாட்டை விட்டுப் போகவில்லை. இந்து, முஸ்லீம், சீக்கியர்கள் போன்ற பன்முகத் தன்மை கொண்ட மக்களின் கூட்டு முயற்சியும் தியாகமுமே இந்தியா சுதந்திரம் பெற முக்கியம் காரணம். காந்திஜியை அவர் கொள்கையை வெறுப்போர் கையில் இப்போதைய ஆட்சியுள்ளது. காந்தி ஜியை சுட்டுக்கொன்ற நாதுராம் கோட்சேயின் சாம்பலை ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் வைத்து நாடோறும் மரியாதை செய்வோர் கையில் நாடு சிக்கியுள்ளது. இவர்களிடம் மத சார்பின்மை யையும், மனித நேயத்தையும் எதிர்ப்பார்ப்பது வீண்.

நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் ஒருதாய் பிள்ளைகளாக பெற்ற சுதந்திரத்தை பேணி வாழ்வோம்! மாற்றார் சூழ்ச்சியை மதியால் வெல்வோம்.

இவர்கள் ஆளுமையில் நாடு பூறா மாட்டி றைச்சி பேரால் கொலை வழமையாக நடை பெறுகிறது. மாட்டிறைச்சி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது யாரென்றால் பி.ஜே.பி. பெரும் புள்ளிகளென அறிகிறோம். மனு தர்மத் தில் ஸ்ரார்த்தம் என்ன இறைச்சியில் செய்ய வேண்டுமென்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்ன இன்ன மாமிசத்தால் சிரார்த்தம் செய்தால் பிதுர்க்கள் எவ்வளவு காலம் திருப்தி அடைவார்களென்ற விபரம் ஒரு சில நீரில் பட முங்கி குடிக்கும் கிழ வெள்ளாடு, கடா மாமிசத்தால் பன்னிரண்டு ஆண்டுகள் பிதுர்கள் திருப்தி அடைவார். இது ஒவ்வொரு மிருக இனத்தை பொறுத்து பல என மனுசாஸ்த்திரம் வறையறை செய்துள்ளது. மிருக இனங்களின் தரம் பொறுத்து பலன் மனுசாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிடப்பட்டது பார்வைக்கே.

நான் குடியேற்ற நாடு அந்தஸ்த்து கேட்டு இங்கே வரவில்லை. குடியேற்ற நாட்டு அந்தஸ்த் தில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் என்னை பூரணமாக சுதந்திரத்திற்காக அர்ப்பணிக்கிறேன்.

1927-இல் சென்னையில் இதனை இலட்சிய மாகக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றினோம். ஜவஹர்லால் நேரு விசயத்தில் நான் கூறுவேன். நீ ஒரு பூனையாக இரு, உன் தகப்பனுக்கு பிள்ளையாக இராதே என்பது. ஏனெனில் காங்கிரஸ் காரனாக இருந்த அன்னார் தந்தை அப்பாவி ஜவஹர்லாலை 1928-ல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் வாயடைக்க வைத்தார். நான் எழுந்து குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தை எதிர்த்தேன்.

இறை கட்டளை எனும்போது நான் முதலிலும் ஒரு முஸ்லீம் இரண்டாவதும், ஓர் முஸ்லீம், கடைசியிலும் ஓர் முஸ்லீமைத் தவிர வேறல்ல. எனது முதல் கடமை இறைவனுக்கே

டாக்டர். மூஞ்சே விசயத்திலும் அவரும் அப்படிதான். அந்தக் கடமைப்பட்டவரை முதலாவது ஓர் இந்துவாக இருக்க வேண்டும். நான் ஓர் முஸ்லீமாக இருக்க வேண்டும். ஆனால் இந்திய சம்மந்தப்பட்டவரை நான் முதலாவதும் இந்தியன், இரண்டாவதும் ஓர் இந்தியன், கடைசியிலும் ஓர் இந்தியன். இந்தியனைத் தவிர வேறில்லை.

முதலாவது வட்ட மேஜை மாநாட்டில் மௌலானா சுதந்திரமானவனாக நான் நாடு திரும்ப விரும்புகிறேன். நான் ஒரு அடிமை நாட்டிற்கு செல்லமாட்டேன். அந்நிய நாடு ஓர் சுதந்திர நாடா இருப்பின், இங்கே மரணிக்க ஆசைப்படுகிறேன். இந்தியாவில் நீங்கள் எங்களுக்கு விடுதலை அளிக்காவிடின் இங்கே எனக்கொரு புதைகுழி கொளுகளென முழங்கி உடல் சுகவீனமுற்று காலமானார்கள். மௌ லானா முகம்மதலி ஜௌஹரின் விருப்பப்படி பைதுமுகத்தஸ் என்னும் புனித பூமியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

மௌலானா ஜௌஹர் நல்லதொரு குடும் பத்திலே பிறந்து, இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டில் படித்து பரோடா ஸமஸ்தானத்தின் கலால் பிரிவு அதிகாரியாக இருந்த பதவியை துறந்து நாட்டிற்காக வீடு வாசல் சொத்து சுகம் இளந்து தன் இறுதி வாழ்க்கையை டெல்கியின் காடிகானா என்னும் குதிரை கட்டும் பகுதியை வாடகைப்பிடித்து வாழ்ந்து தன் இன்னுயிரை முதல் வட்ட மேஜை மாநாட்டிற்கு லண்டன் சென்றபோது துறந்தார். இவ்வாறான எண்ணற்ற தியாகிகளின் தியாகத்தால் கிடைத்ததே நம் சுதந்திரம். மௌலானா தாம் ஓர் போராளியாக வாழ்ந்து அன்றும் இன்றும் என்றும் போராளி களின் இருப்பிடத்தில் பலஸ்தீனில் அன்னார் உடல் அடக்கம் செய்யப்பட்டது கூட இறை ஏற்பாடாகும்.

இக்கட்டுரை மௌலானா முகம்மதலி ஜௌஹரின் நினைவு மலரிலிருந்து ஆய்வு செய்து எழுதியது.

இந்தி தினத்தை முன்னிட்டு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் அறிவிப்பு...

ஒரே நாடு, ஒரே கல்வி, ஒரே நாடு, ஒரே வரி, ஒரே நாடு ஒரே ரேசன், ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே நாடு ஒரே சட்டம், ஒரே நாடு ஒரே தேர்வு, இப்போது ஒரே நாடு ஒரே மொழி இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஓர் அறிவிப்பு செய்துள்ளார். இதற்கு நாட்டின் அனைத்து கட்சியினரும் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அகில இந்திய மஜ்லிஸ் கட்சி தலைவர் ஓவைசி டிவிட்டரில் ஒவ்வொரு இந்தியருக்கும் இந்தி தாய்மொழியல்ல. இந்நாட்டிலுள்ள பல மொழிகளிலுள்ள பன்முகத்தன்மையை அழகைப் போற்ற வேண்டும். அரசியலமைப்பு சட்டத்தின் 29-வது சட்டப்பிரிவு ஒவ்வொரு இந்தியனுக்கும் மொழிபற்று பண்பாட்டு உரிமையை வழங்கியுள்ளது. இந்து, இந்துத் துவாவை விட இந்தியா பெரியது எனக் குறிப் பிட்டுள்ளார். இவ்வாறு இரு கம்யூனிட் கட்சி தி.மு.க. முஸ்லீம் லீக், தமிழக இதர கட்சிகளும் அமித்ஷா அறிவிப்பை கண்டித்துள்ளன.

**ஆளும் பாரதீய ஜனதா கட்சியினரின் ஆளுமை நாட்டிலே வந்ததிலிருந்து காந்திஜி சிலை, அம்பேத்கர் சிலை உடைப்பும் அவமதிப்பு செயல்பாடுகளும் நாடோறும் பத்திரிகையில் காண முடிகிறது. இது வருத்தமளிப்பதாகவும் உள்ளது.**

## CAA சட்டத்திற்கு எதிராக சர்வதேச நாடுகள் கண்டனம்

பாஜக தலைமையிலான அரசு குடியுரிமை திருத்த சட்டம் என்ற பெயரில் முஸ்லிம்களை தனிமைப்படுத்தும் சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. இதற்கெதிராக நாடு முழுக்க போராட்டம் நடைபெற்று வருகிறது. இதில் தற்போது வரை 11 வயது சிறுவன் உட்பட 30க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுக்க இருந்து பாஜகவின் இத்திட்டத்திற்கு எதிராக பல்வேறு நாடுகள் குரல் எழுப்பியிருக்கின்றன. இதில் முஸ்லிம் நாடுகள் தங்கள் ஒருங்கிணைப்பை இணைத்து எதிராக கண்டன தீர்மானங்களும் இயற்றியிருக்கிறார்கள்.

# ஷஹீத் முஹம்மத் அலீ ஜின்னாவின் மகள் மரணம் ...

நாள் : 9-12-2019

ஜாதிக் கொடுமைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள இஸ்லாத்தை ஏற்றப்பெருந்தகை கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதோடு நில்லாமல், தன் குடும்பத்தையும் இஸ்லாத்தை ஏற்றிடச் செய்தார்.

அந்தக் குடும்பத்தை மட்டுமல்ல, இன்னும் பலநூறுபேர் இஸ்லாத்தை ஏற்றிட காரணமாக அமைந்தவர். உணவின்றி, உறக்கமின்றி, உழைப்பைக்கொட்டி தாழ்த்தப்பட்ட மக்களை இஸ்லாத்தில் இணைத்து இன இழிவிலிருந்து நிரந்தரமாக விடுவித்தவர். அதற்காக சிறைப்பிடிக்கப்பட்டார்.சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். முடிவில் இந்துத்துவ தீவிரவாதிகளால் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டார்.

காவல்துறையில் அவர் பணியாற்றியக் காலந்தொட்டு, அவர் பட்ட அனைத்து இன்னல்களிலும் உடன் இருந்தவர் அவருடைய தலைமகள் டாக்டர். மர்ஹூம் நசீரா பர்வீன்.

இறுதியில் கூரியூர் ஜின்னா ஷஹீத் அவர்களின்கடைசிகாலத்தில், வெட்டப்பட்டு மரணத்தின் விளிம்பில் இந்தத் தலைமகளின் மடியிலே வைத்துத்தான் உயிர் பிரிந்தது.

உயிர் பிரியும் தருணத்தில், மகளின் மடியில் தலை வைத்திருந்த கூரியூர் ஜின்னா சாஹேப் அவர்கள், சற்றே சிரித்தார்கள். இதுகண்டு இந்த மகள் ஆச்சர்யப்பட்டாள். பின்னர்தான் அவருக்குத் தெரிகின்றது ஷஹீத்களுக்கான சுபசெய்தி அவருக்குச் சொல்லப்பட்டது என்பது. அதனால்தான் அவர் முகம் மலர்ந்தார் என்பது பின்னர் தெரிந்து கொண்டார். (அல்லாஹ்வே அனைத்தையும் அறிந்தவன்)

ஆனால், தலைமகள் டாக்டர் நசீரா பர்வீன் அவர்கள், தந்தை சொர்க்கத்தில் நுழைவதை உறுதி செய்தார்.

ஆமாம், அவர் கீழக்கரையைச் சேர்ந்த தனவந்தர். பி.எஸ். அப்துல் ரஹ்மான் அவர்களிடம் ரூபாய். 50,000, கடன் வாங்கி இருந்தார்கள். அதனை விரைந்து சென்று அடைத்தார். ஏனெனின் ஒரு ஷஹீதுடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும், கடனைத் தவிர.

இதில் ஹாஜி பி.எஸ். அப்துல் ரஹ்மான் அவர்கள் காட்டிய பெருந்தன்மையை

- ஷஹீத் ஜின்னா அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கலாம்...

இப்படித் தந்தையின் எல்லா துயரங்களிலும் தொடக்க நாள் தொட்டே பங்கெடுத்தத் தலைமகள் தன் தந்தைக்கு தான் செய்ய வேண்டிய பணிகளை அவர் மட்டுமல்ல, மரணத்திற்குப் பின்னும் வைகயாகச் செய்து முடித்தார்.

**தாஃவா பணிகளில் டாக்டர் நசீரா பர்வீன்**

தந்தை விட்டுச் சென்ற பணிகளை - அதாவது, ஜாதிக் கொடுமைகள். இன இழிவை - ஒழிக்க இஸ்லாம் ஒன்றே நன்மருந்து - என்ற பிரச்சாரத்தை டாக்டர் நசீரா பர்வீன் அவர்கள் தன் இறுதி மூச்சுவரைத் தொடர்ந்தார்கள். அதேபோல் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள்.

இவருக்கு இரண்டு பிள்ளைகள், ஒரு மகனும் மகளும் உள்ளனர். மகன் விபத்து ஒன்றில் இறந்துவிட்டார். மகள் டாக்டர். அவர் கீழக்கரையில் அன்பு கிளினிக் என்றொன்றை நடத்தி வருகின்றார். ●

நான் இந்த புத்தகத்தில் இந்தியாவில் தீவிரவாதத்தின் முறையற்ற பயணம் குறித்து விளக்க முயற்சி செய்துள்ளேன். குறிப்பாக 2002ம் ஆண்டிலிருந்து இதனை பட்டியலிட முயற்சித்துள்ளேன். அவர்கள் இதனை “முஸ்லிம் தீவிரவாதம்“ என்ற பெயரில் தான் ஆரம்பித்தார் கள். அதன் பின்னர் எத்தனையோ திடுக்கிடும் திருப்பங்கள், சந்தேக முள் அவர்கள் மீது தைப் பதும் எடுப்பதுமாக. ஆனால் குண்டுவெடிப்பு வழக்குகளின் தீர்ப்புகளை படிப்பதனூடாகவும் குண்டுவெடிப்புகள் நடந்த காலத்தில் வெளிவந்த செய்தித்தாள்களின் அறிக்கைகளை படிப்பதனூ டாகவும் குற்றவாளிகள் பிராமணிஸ்டுகள் தான் என்று என்னுடைய சுட்டு விரல்கள் எந்த வித தயக்கமும் இன்றி பிராமணிஸ்டுகளை நோக்கி சுட்டிக்காட்டும்.

பிராமணர்கள் இந்து மதத்தில் உள்ள சாதிய அடுக்குமுறை தெய்வீகமானது என்று நம்புகி றார்கள். அந்த சாதிய அடுக்குமுறையின்படி பிராமணர்கள் உயர்ந்தவர்கள், மற்ற சாதியினர் அவர்களுக்கு சேவகம் செய்ய படைக்கப் பட்டவர்கள். எல்லா பிராமணர்களும் இந்தக் கருத்தை உடையவர்கள் அல்லர். அதேப்போல் பிராமணர்கள் மட்டுமே இந்த சாதிய அடக்கு முறையை நம்புகிறவர்கள் அல்லர்.

இந்த சித்தாந்தத்தை தீண்டத்தகாதவர்களை தவிர மற்ற ஜாதியை சேர்ந்த பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். இந்த சாதிய கட்டமைப்பு ஹிந்து வேதங்களிலேயே கூறப்பட்டிருப்பதால் இதற்கு தெய்வீக அனுமதி உண்டு என்று அவர்கள் நம்புகிறார்கள். தெய்வத்தின் கோபத் திற்கு பயந்து கொண்டு பெரும்பாலானோர் பிராமணிஸ்டுகளின் பாதையை பின்பற்று கிறார்கள்.

இதன் காரணமாக மற்ற மதங்களின் மூலமாகவோ, சமூக பொருளாதார அரசியல் ஒழுங்கு முறையின் காரணமாகவோ பிராமணீ யத்திற்கு வரக்கூடிய ஆபத்துக்களை இந்து மதத் திற்கே ஏற்படக்கூடிய ஆபத்து என அவர்கள் தவறாக கருதி பிராமணீயத்தை பாதுகாக்க எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் அவர்கள் செல்லுகிறார்கள்.

மேற்சொன்ன இந்த காரணங்களே நாட்டில் சமீப காலத்தில் நடந்த குண்டு வெடிப்புகள் மற்றும் தீவிரவாத செயல்களில் நீதி கிடைக்கா மல் நெறிபிறழ்ந்து போவதற்கு காரணமாயிற்று.


21 ஆம் நூற்றாண்டின் இந்திய தீவிர வாதத்தின் வரலாற்றை இரண்டு காலமாக பிரித்தால் சரியானதாக இருக்கும்.

## ஹேமந்த் கர்கரேவுக்கு முன்பு, ஹேமந்த் கர்கரேவுக்கு பின்பு.

மகாராஷ்டிராவின் தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவர் ஹேமந்த் கர்கரே திரைக்கு வருவதற்கு முன் எல்லா தீவிரவாத செயல்களும்



"முஸ்லிம் தீவிரவாதம்" என்ற பெயரிலேயே அடையாளப்படுத் தப்பட்டு வந்தன.



மகாராஷ்டிராவில் 2006ஆம் ஆண்டு சுயமாக வெளிப்பட்டு விட்ட "நந்தேத்" குண்டுவெடிப்பை தவிர. (இங்கு பயங்கரவாதிகள் வெடிகுண்டுதயாரித்துக்கொண்டி ருந்த போதுதானாக வெடித்து விட்டது) இதில் ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கத்தை (ஆர்.எஸ்.எஸ்) சேர்ந்தவர்களும் பரங்தள் பயங்கர வாத அமைப்பைச் சேர்ந்த தீவிர வாதிகளும் மாட்டிக்கொண்டனர். ஆனால் இது ஏதோ எங்கோ நடந்த ஒன்று என்பது போல் காட்டப்பட்டு உடனடியாக புறந்தள்ளப்பட்டு முக்கியத்துவம் தரப்படாமல் மறக்கடிக் கப்பட்டது.

ஹேமந்த் கர்கரேவுக்கு முன்பு குண்டு வெடிப்புகள் நடந்த முறையும் அதை விசாரணை செய்த முறையும் ஒரு மாதிரியாக தீர்மானிக்கப்பட்டிருந்தன. பிராமணிய இயக்கங் களான அபிநவ் பாரத், ஆர்.எஸ்.எஸ், பஜ்ரங்தள், ஜெய்வந்தே மாதரம் போன்ற இயக்கங்கள் நாடு முழுவதும் உள்ள முக்கியமான நகரங்களில் குண்டுவெடிப்புகளை நிகழ்த்தும்.

அதன் பின்னர் ஐ.பி என்கிற மத்திய உளவுத்துறை, தொடர்ந்து புகாருக்கு உள்ளாகும் ஊடகங்களின் துணையோடு இந்த குற்றங்களை முஸ்லிம்களின் மீது போடும். முஸ்லிம்களை சாடும். ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் கட்டளைகளுக்கு அப்படியே அடிபணியும் மாநில தீவிரவாத தடுப்பு படையினரும் அப்பாவி முஸ்லிம் சிறுவர்களை இந்த வழக்குகளில் சிக்க வைப்பார்கள்.

ஊடகங்களில் உள்ள பிராமணிஸ்டுகள் மத்திய உளவுத்துறையின் இந்த புனையப்பட்ட கதைகளுக்கு உயிர் கொடுத்து அதனை பிரபலப் படுத்துவார்கள் இதன் மூலம் நாட்டில் நடந்த அனைத்து குண்டுவெடிப்புகளும் முஸ்லிம்களா லேயே நடத்தப்பட்டது என்ற பிம்பத்தை ஏற்படுத்துவார்கள்.

பிராமணிஸ்டுகள் இதில் பெற்ற அதிகப்படி யான வெற்றி என்னவென்றால், பொதுவான மக்களை இந்த குண்டுவெடிப்புகள் பாபர் மசூதி இடிப்பிற்காகவும், 2002இல் நடந்த குஜராத் இனப்படுகொலைகளுக்காவும் பதிலடியாக நடத்தப்படுகிறது என நம்ப வைத்துவிட்டது தான்.

இன்னும் சில முஸ்லிம்களும் மதச்சார் பற்றவர்களும் கூட இந்த குண்டு வெடிப்புகள் தீவிரவாத வயப்பட்ட முஸ்லிம் இளைஞர்களின் கைவண்ணம் தான் என்று நம்பத் துவங்கி விட்டார்கள்.

இந்த முறைமை, இந்தத் திட்டங்கள் 2008 வரை தொடர்ந்தன. அந்த வருடத்தின் செப்டம்பர் மாதத்தில் மஹாராஷ்ட்ராவில் மாலேகான் என்ற இடத்தில் ஒரு குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. அப்போது தீவிரவாத தடுப்பு படையின் தலைவராக அங்கு வந்த ஹேமந்த் கர்கரே அந்த வழக்கை விசாரித்தார். வழக்கு விசாரணையில் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையின் கட்டளைகளுக்கு அடிபணிய மறுத்தார். விசாரணையை அவர் சுயமாகவும், சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் நடத்தினார். அதில் பிராமணிஸ்டுகளின் தேசம் தழுவிய தேசவிரோத சதித்திட்டத்தை வெளிப்படுத்தினார்.

**-எஸ்.எம்.முஷ்ரிப்**

- அடுத்த இதழில் தொடரும்



# மகளிர் மன்றம்

செப்டம்பர் 11, 2001 அன்று நியூயார்க்கின் உலக வர்த்தக மையத்தின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பிறகு இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது உலக மக்களின் பார்வை திரும்பியது.

முஸ்லிம்கள் "தீவிரவாதிகள்" என்ற மீடியாக்களின் சித்தரிப்பை மீறி முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை அறியும் ஆர்வம் ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக உலக ரவுடி அமெரிக்கா, ஆஃப்கான் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு ஆஃப்கானுக்கு விடுதலை வாங்கித் தந்ததாகப் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

அந்த நேரத்திலும் ஆஃப்கானிஸ்தான் பெண்கள் தங்களது பாரம்பரிய உடையத் தரித்து பர்தாவைக் கடைபிடித்தது உலகுக்கு அதிர்ச்சியூட்டியது.

பர்தா குறித்து உண்மையிலேயே முஸ்லிம் பெண்மணிகள் என்ன நினைக்கிறார்கள் என்ற ஓர் ஆய்வை Savvy என்ற ஆங்கில இதழ் பிப்ரவரி, 2002-இல் நடத்தியது. அதன் தமிழாக்கமே இது.

பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் அதிலும் குறிப்பாக படித்த இளம் பெண்கள், வேலை பார்க்கும் பெண்கள், குடும்பத் தலைவிகள் இவர்கள் எல்லாம் பர்தா அணிவதை ஒரு கண்ணியமான - மறியாதைக்குரிய செயலாகத்தான் கருதுகிறார்கள்.

**இர்யம் அன்சாரி (40)**

மும்பை பந்தாரா புறநகர் பகுதியிலிருக்கும் புகழ் பெற்ற உருது பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார். இவர் கடந்த 18 ஆண்டுகளாக பர்தா அணிகிறார்.

"என் வீட்டில் யாருக்கும் பர்தா அணியும் பழக்கம் இல்லை. நானும் பர்தா அணிவேன் என்று நினைத்துக் கூட பார்த்ததில்லை. ஒரு நாள் தோழி ஒருத்தி என் வீட்டுக்கு வந்தாள். அவள் பர்தா அணிந்திருந்தாள். அவள் தான் எனக்கு பர்தா பற்றி சொன்னாள்.

இது சம்பந்தமான திருக்குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் (நபிகளாரின் போதனைகள்) விரிவாக எடுத்துரைத்தாள். அந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்தன. அன்றிலிருந்து நானும் பர்தா அணிய ஆரம்பித்தேன்."

-தனக்கு புர்கா அறிவூட்டிய தோழியை நன்றியோடு நினைவு கூர்கிறார் இர்யம்.

**ஸமீரா ஹஸன் (25)**

கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் துறையைச் சேர்ந்தவர் இவர். புர்கா அணிவதில்லை. ஆனால் அணிபவர்கள் மீது ஒரு தனி மறியாதை வைத்திருக்கிறார். அவருடைய கருத்து இது:

பர்தா அணிவது அவரவர் விருப்பத்தைப் பொருத்த விஷயம். (ஆனால் இஸ்லாம் பெண்கள் பர்தா அணிவதை கடமையாக்கி இருக்கின்றது.) அவர்களாகவே விரும்பி அணிந்தால் அதன்

பெருமையும், புனிதத் தன்மையும், அதை அணிவதால் பெண்ணுக்குக் கிடைக்கும் மரியாதையையும் புரிந்து கொள்ள முடியும். திணிப்பு சுமையாகிவிடும். அதே நேரத்தில் எனக்கு ஒரு விஷயம் மட்டும் விளங்கவில்லை.

முஸ்லிம் பெண்கள் பர்தாவை விரும்பி ஏற்பதை மக்கள் ஏன் ஒப்புக்கொள்வதில்லை? என்பது தான் அது.

ஆனால் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதை மிகவும் வசதியானதாகவும், மகிழ்ச்சியானதாக வுமே கருதுகிறார்கள்.

என்கிறார் அவர் தொடர்ந்து,

இன்று எல்லோருக்கும் பர்தா (இஸ்லாமிய ஆடை) மேல் ஏற்பட்டு இருக்கும் வெறுப்புக்குக் காரணம் மீடியாதான் என்பதை நான் உணர்கிறேன். அண்மையில் நமது மீடியா ஆஃப்கானிஸ்தானில் பெண்கள் பர்தாவை (இஸ்லாமிய ஆடைகளைத்) தூக்கி வீசி விட்டார்கள் என்றொரு செய்தியைப் பரப்பின.

ஏனெனில் இப்போது (வெளிப்படையாகச் சொன்னால் தாலிபானின் ஆட்சிக்குப்பின்னால்) பர்தா அணிவது கட்டாயக் கடமை இல்லையே என்று காரணமும் சொல்லி இருக்கிறது.

இது ஆஃப்கானிஸ்தானில் கட்டாயப்படுத் தப்பட்டதால் தான் பெண்கள் இஸ்லாமிய ஆடையை அணிகின்றார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. இது உண்மையல்ல.

(முஸ்லிம் பெண்கள் தாங்களாக விரும்பித்தான் இஸ்லாமிய ஆடைகளை அணிகின்றார்கள் என்கிறார் ஸ்மீரா விரிவாக.)

**சீமா அனீஸ் அக்தர் (25)**

இந்தப் பெண்மணி டாக்டர் பாபா சாஹிப் அம்பேத்கர் மாநகர மத்திய இரயில்வே மருத்துவமனையில் பயின்று வருகின்றார். காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில், முதுநிலைப் பட்டப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னாள் சீமா தன்னுடைய சக மாணவிகளுக்கு ஓர் அதிர்ச்சியைத் தந்தாள். அது அவள் இஸ்லாமிய ஆடையை அணிந்து மருத்துவமனைப் பயிற்சியைத் தொடங்கியது தான்.

மருத்துவத்திற்கு படிக்கும் ஒரு மாணவிக்கு அவள் மருத்துவமனைக்குள் புகுந்து மருத்து வத்தில் நேரடிப் பயிற்சி எடுப்பது வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்குவது தான்.

நான் என் வாழ்க்கையின் இந்தப் புதிய அத்தியாத்தை இஸ்லாமிய ஆடையை அணிந்து தொடங்கினேன். இன்று சமுதாயச் சூழலில் இது மிகவும் கடினமான ஒரு முடிவாகத்தான் தெரிந்தது. எனினும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவது என்று முடிவு எடுத்திருந்தேன்.

நான் என் பள்ளி நாட்களிலிருந்தே இப்படி யொரு எண்ணத்தை வளர்த்து வந்தேன். என் குடும்பத்தைச் சார்ந்த எல்லாப் பெண்களும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிகின்றார் கள். அவர்களை யாரும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணியச் சொல்லி கட்டாயப்படுத்திய தில்லை. நாங்கள் எங்கள் விருப்பப்படி முடிவு செய்து கொள்ளலாம் என விட்டு விட்டார்கள். என்கிறார் சீமா.

இஸ்லாமிய ஆடைகளை அணிவதற்கு முன்னால் சீமா தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார்.

இஸ்லாமிய ஆடை அணிவது என்பது, எடுத்தேன் கவிழ்த்தேன் எனத் திடீரென எடுத்துக் கொள்வது. பின்னர் விட்டு விடுவது என்ற அடிப்படையில் உள்ள விவகாரமல்ல. அது அணியத் தொடங்கினால் வாழும் நாள் முழுவதும் அணிந்திட வேண்டிய ஒன்று. எப்போதும் கைவிட்டிட இயலாது.

இன்று நான் நம்பிக்கையோடு இருக்கிறேன். நான் எடுத்த முடிவைப் பற்றி நான் எள்ளளவும் கவலைப் படவில்லை. உண்மையைச் சொல்வ தானால் நான் அணிந்தருக்கும் ஆடையால் நான் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கி றேன். குறிப்பாக இரவு நேரங்களில் அது என்னுள் அலாதியான பாதுகாப்புணர்வை ஊட்டுகின்றது.

இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிந்திருக் கும் பெண்களை யாரும் கண்டு கொள்வதில்லை. இது எனக்கு மிகவும் வசதியாகப் போய் விட்டது என்கிறார் தெளிவாக.

பர்தா அணிந்திருக்கும் பெண்களைப் பற்றி ஏற்படுத்தி இருக்கும் தவறான எண்ணங்களைப் பொருத்தவரை சீமா இப்படிக் குறிப்பிடுகின்றார்:

மிகவும் குறைவாக ஆடை அணிந்திருக்கும் பெண்களை மலிவானவர்கள், இழிவானவர்கள் என்று முத்திரை குத்தி விடுவது அநியாயமானது. அதேப்போல பர்தா அணிந்த பெண்களைப் பரிதாபத்திற்குறியவர்கள் என எண்ணுவதும் தவறு. ஒரு புத்தகத்தை அதன் அட்டையை மட்டுமே கொண்டு மதிப்பிடுவது முட்டாள் தனமானது.

சீமாவைப் பொருத்தவரை ஒருவர் அணிந் திடும் ஆடை என்பது அவருடைய விருப்பத்தைப் பொருத்தது. அது பொது மக்களின் விவாதத்திற் குரிய ஒன்றல்ல.

பல பெண்களுக்கு இஸ்லாமிய ஆடை அணிவது என்பது மதத்திற்கு அப்பாற்பட்ட விஷயம்.(இது ஷினீஸ்ஸ்ஹ்) பத்திரிக்கையில் தனிப்பட்டக் கருத்து).ருத்தார் அக்பர்(29)

இந்த பெண்மணி இஸ்லாமிய முறைப்படி ஆடைகளை அணிவதில் மகிழ்ச்சி அடை கின்றாள். காரணம் அது அவருடைய கணவனை மகிழ்ச்சியடையச் செய்கின்றது.

நான் என் கணவனை மகிழ்விக்க புர்கா அணிந்தால் அது ஏன் அவ்வளவு பெரிய விவாத மாக மாற வேண்டும்? சாதாரணமாக பெண்கள் தங்கள் கணவர்கள் விரும்புவது போல் தங்கள் வனப்பை வடிவமைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அது யாரையும் தொந்தரவு செய்ய வில்லை! என்கிறார் ருத்தார்.

**ராபியா ஷேக் (32)**

இவர் பர்தா அணிவது குறித்து முற்றிலும் மாறுபட்டதொரு காரணத்தைச் சொல்கின்றார்:

நான் நீண்ட கோட் வடிவிலான மேற்கத்திய பர்தா உடையால மிகவும் கவரப்பட்டேன். என்னுடைய வகுப்பில் படித்த தோழிகள் அதை அணிந்து வரும்போதெல்லாம் நான் அதை அணியத் தொடங்கினேன். நான் இதில் மிகுவும் புதுமையாக ஈரானிய பர்தாவைத் தேர்ந்தெடுத் துக் கொண்டேன். என்னுடைய நண்பர்கள் எல்லோரும் நான் அந்த பர்தாவில் அழகாக இருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய பெற்றோர்களும் அதனை விரும்பினார்கள். என்னுடைய மார்க்கம் சொன்னதையும் செய்த திருப்தி எனக்கு.

குழந்தை வளர்ப்பும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவதில் மிகவும் அழகியதோர் பங்காற்றுகின்றது. குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவதைப் பார்த்து வளர்கின்றார்கள். அவர்கள் ஆளாகும் போது, அவர்கள் அதைத் தவிர வேறு வகையான ஆடைகளை விரும்புவ தில்லை.

இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் பர்தா என்பது பெண்கள் மீது திணிக்கப்படுகின்ற ஒன்றல்ல. மாறாக அது பெண்களின் விருப்பம். அவர்களின் சிறப்பம்சம். ●

## BIG FIGHT IN NDTV

NDTV - என்ற தொலைக்காட்சியில் இரவு 7 மணி முதல் நடந்த விவாதம் ஒன்றில் இந்துத்துவா சார்பில் பேசியவர்கள் சைனாவில் நடப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் சைனாவன் பெயர் உலக அரங்கில் கெட்டுப்போகவில்லை. அப்படி இருக்க இந்தியாவின், பெயர் ஏன் உலக அளவில் கெட்டுப்போக வேண்டும்? என வாதிட்டார்கள். உலக அளவில் மோடிக்கு எதிராக எழுதுபவர்கள் பணம் வாங்கிக்கொண்டு எழுதுகின்றார்கள் - என்றார் ஒருவர்.

இதற்கு முன்னால் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் TIMES என்ற பத்திரிகை மோடியை The Great Divider என எழுதியபோது, மோடி அந்தக் கட்டுரையை எழுதியவர் பாகிஸ்தானைச் சார்ந்தவர் என்றார். ஆனால், அவர் அமெரிக்காவைச் சார்ந்தவர். இப்படித்தான் பாசிஸ்ட்டுகள் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்.

இப்படியெல்லாம் பொய்யைச் சொல்லித் தப்பித்துக் கொண்டிருந்த மோடிக்கு இப்போது இன்னொரு ஓர் அடி. அகில இந்திய அளவில், அது நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிகையிலிருந்து வந்தது. அண்மையில் 27-12-2019-இல் நியூயார்க் டைம்ஸ்

Modi Makes His Bigotary More Clearer என தலைப்பிட்டது. அதாவது மோடி தன் மதவெறியை இன்னும் தெளிவாக்கி விட்டார் எனத் தலைப்பிட்டு எழுதியிருக்கிறது. **- MGM**

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?




பைபிளை முழுமையாக வாசித்த எந்த ஒரு கிருஸ்தவருக்கும் ஒரு சந்தேகம் நிச்சயமாக இருக்கும். அது, “பைபிளின் பழைய ஏற்பாடு முழுக்க ஒரே தேவன், ஒரே பிதா என்று ஓரிறைக் கொள்கையை போதித்து விட்டு, திடீரென எப்படி புதிய ஏற்பாட்டில் மட்டும் இயேசு கிருஸ்து கடவுள் என்றும் கடவுளின் பிள்ளை என்றும் ஆக்கப்பட்டார்?” என்று.

இந்த சந்தேகத்திற்கான விடையை கிருஸ்தவ பாதிரிமார்களிடம் சென்று கேட்டால் “தேவனின் கற்பனைகளில் சந்தேகம் கொள்ளாதே. பரலோக ராஜ்ஜியத்தை இழந்து விடுவாய்” என்று ஏதோ பெரிய பாவம் செய்து விட்டது போல் சித்தரித்து கேள்வி கேட்பவரக்ளையே பாவியாக மாற்றி அடக்கி விடுவார்கள்.

ஆனால் யதார்த்தம் என்னவென்றால் பைபிளை வாசித்த அனைத்து கிருஸ்தவர்களுக் கும் இந்த சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது. அந்த சந்தேகத்திற்கான விடை தெரியாமலேயே நிறைய கிருஸ்தவர்கள் ஒரு விதமான குழப்ப மான மனநிலயில் தான் கிர்ஸ்தவ மார்க்கத்தின் இறைத்தன்மையில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

ஆனால் அப்படி மனக் குழப்பத்தில் சிக்கிக் கொண்ட பலர் அதற்கான விடையைத் தேடி அலைந்துள்ளனர். அப்போது குர்ஆனை படித்த பல கிருஸ்தவர்கள் தாங்கள் தேடிக் கொண்டி ருந்த கேள்விகளுக்கு விடையாகவும், தங்களது மனக்குழப்பத்திற்கு தீர்வாகவும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்திருந்தனர். அப்படி தமிழகத் தில் நடந்த ஒரு சம்பவம் தான் சகோதரி சூசன் (எ) ஆயிஷாவின் குடும்பமே இஸ்லாத்தை ஏற்ற நிகழ்வு. வாருங்கள் அவரது அனுபவங்களில் பயணிப்போம்.

## சூசன் (எ) ஆயிஷா

என்னுடைய பெயர் ஆயிஷா. பழைய பெயர் சூசன். சொந்த ஊர் ஊட்டி. எனக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளது. நான் கிருஸ்தவ குடும்பத்தை சார்ந்தவள். எங்கள் குடும்பம் உட்பட நானும் கிருஸ்தவ மார்க்கத்தில் மிகுந்த ஈடுபாடோடு இருந்தோம்.

ஞாயிற்று கிழைமை தோறும் தவறாமல் சர்ச்-க்கு சென்று விடுவோம். எந்த வேலையாக இருந்தாலும் அதையெல்லாம் ஒதுக்கி விட்டு சென்று விடுவோம். அதேப்போல் நான் பைபிள் படிக்கவில்லை என்றால், பிரார்த்தனைக்கு வரவில்லை என்றால் எம்மா என்னை அடிப் பார்கள். அந்த அளவுக்கு கிருஸ்தவ மார்க்கத்தில் ஈடுபாடோடு இருந்தோம். என்னுடைய சொந்தங்களில் நிறைய பேர் இன்றளவும் கிருஸ்தவ ஊழியம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

நானும் சர்ச்-க்கு போகாமல் எல்லாம் இருந்ததில்லை. மிகுந்த ஈடுபாடோடு சென்று விடுவேன். சிறு வயதில் சர்ச்-ல் நடக்கும்

போட்டிகளில் வெற்றிப் பெற்று நிறைய பரிசுகளை எல்லாம் வென்றிருக்கிறேன். என்னு டைய பள்ளி நாட்களில் எனக்கு ஒரு முஸ்லிம் தோழி இருந்தாள். நாங்கள் இருவரும் மிகவும் நெருக்கமான தோழிகளாக இருந்தோம். அவளுக்கு ஏதாவது மன கஷ்டம் இருந்தாலோ, மன வேதனை ஏற்பட்டாலோ அதை என்னிடம் சொல்லி அழுவாள். அப்போது நான் அவளிடம் இப்படி கூறுவேன்;

“நீ இயேசு கிருஸ்துவிடம் பிரார்த்தனை செய். உனக்கு எல்லாம் கிடைக்கும். உன் கவலைகள் நீங்கும்“ என்று.

அதற்கவள்,”நான் ஒரு முஸ்லிம். நான் எப்படி இயேசு கிருஸ்துவிடம் பிரார்த்தனை செய்ய முடியும்?” என்று கூறுவாள்.

ஆனால் அவள் இஸ்லாத்தை பற்றி யெல்லாம் என்னிடம் கூறியதில்லை. ஒருவேளை அப்போதே அவள் இஸ்லாத்தை பற்றி கூறியிருந்தால் அவள் மூலமாக கூட எனக்கு நேர்வழி கிடைத்திருக்கும்.

## காதல் - திருமணம்

நான் என் கணவரை காதலித்து தான் திருமணம் செய்து கொண்டேன். அவர் இந்து மதத்தை சார்ந்தவர். ஆனால் அவருக்கு இந்து மதத்தின் மீதெல்லாம் பற்றிருந்ததில்லை. அதனால் திருமணத்திற்கு பின் அவரும் எங்களோடு கிருஸ்தவத்தை பின்பற்ற ஆரம்பித்து விட்டார்.

## உண்மையான இறைவனை பற்றின தேடல்

என்னுடைய கணவருக்கு சிறு வயதிலிருந்தே உண்மையான இறைவன் யார் என்ற தேடல் இருந்துள்ளது. திருமணத்திற்கு பின் என்னிடம் அதுப்பற்றியெல்லாம் அதிகம் பேசுவார்.

இந்த பின்னணியில் அதாவது “உண்மையான இறைவன் யார்” என்ற பின்னணியில் அவர் பைபிளை வாசிக்க ஆரம்பித்தார். அப்போது அவருக்கு பைபிளின் பல்வேறு வசனங்களில் சந்தேகங்கள் ஏற்பட்டது.

பைபிளில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகள் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் உள்ள வசனங்கள் எல்லாம் ஒரே இறைவன் தான் என்று போதிக்கின்றன. ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிருஸ்து வின் வருகைக்கு பிறகு அவரை “இறைவனின் குமாரன்” என்று கூறி இருவரில் யாரை வணங்கினாலும் ஒன்றுதான் என்று மாற்றப்படுகிறது. இது எப்படி?

இயேசு கிருஸ்து பல்வேறு தருணங்களில் பிதாவினிடத்தில் பிரார்த்தனை செய்ததாக பைபிளின் புதிய ஏற்பாட்டில் பல்வேறு வசனங்கள் பேசும். அது மட்டுமில்லாமல் எனக்கும் மேல் என்னை அனுப்பிய பிதா ஒருவர் உண்டு என்றும் இயேசு கிருஸ்து கூறுவார். அவர் உண்மையில் இறைவனாக இருந்தால் ஏன் அவர் இன்னொருவரிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்?

பைபிளின் புதிய ஏற்பாட்டில் நான் பிதாவி னிடத்தில் போய் உங்களுக்காக ஒரு தேற்றவா ளனை அனுப்பி வைப்பேன். அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார். உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வார் என்று இயேசு கிருஸ்து கூறியிருப்பார். (பார்க்க அடிக்குறிப்பு 1)

ஆனால் அந்த தேற்றவாளன் வராமலேயே பைபிளின் புதிய ஏற்பாடு முடிந்து விடும். அப்படி என்றால் அந்த தேற்றவாளன் யார்?

இந்த மூன்று கேள்விகள் என் கணவருக்கு பிரதானமாக இருந்தது. இதைப்பற்றியெல்லாம் என்னிடம் பேசுவார். ஆனால் நான் அவருக்கு எதுவும் சொல்ல மாட்டேன். காரணம் நாங்கள் அப்போது தான் காதலித்து திருமணம் செய்து கொண்டிருந்தோம். இந்த நேரத்தில் நான் ஏதாவது கூறி அது குடும்பத்தில் பிரச்சனை ஆகிவிடுமோ என்ற பயம் எனக்கிருந்தது.

## திருக்குர்ஆனில் நாங்கள் தேடிய தேற்றவாளன்

இந்த நிலையில் தான் என் கணவர் இஸ்லாம் மதத்தை குறித்து ஆய்வு செய்யலாம் என முடிவெடுத்தார். அருகில் இருந்த பள்ளி வாசலுக்கு சென்று ஒரு குர்ஆனை வாங்கி வந்தார். குர்ஆனை கவனமாக படிக்க ஆரம்பித்தார்.

குர்ஆனை படிக்க படிக்கத்தான் அவருக்கு அவர் தேடிய விஷயங்களுக்கான விடைகள் கிடைக்க ஆரம்பித்தது.

உலகம் தோன்றியது முதல் இந்த பூமிக்கு அனுப்பப்பட்ட அனைத்து தீர்க்கத்தரிசிகளும் போதித்த இறைவன் அல்லாஹ் ஒருவனைத்தான். இயேசு கிருஸ்துவும் அந்த அல்லாஹ்வை வணங்குங்கள் என்று தான் போதித்துள்ளார் என்று உணர்ந்து கொண்டார். மேலும் இந்த உண்மைகளை அவர் உணர்ந்து கொண்டது மட்டுமில்லாமல் உடனேயே பள்ளிவாசலுக்கு சென்று கலிமா கூறு இஸ்லாத்திலும் இணைந்து விட்டார்.

இதையறிந்த எனக்கு முதலில் அதிர்ச்சியாக இருந்தது. என்னிடம் ஒரு வார்த்தை கூட கேட்கவில்லையே! அவராகவே முடிவெடுத்து முஸ்லிமாக மாறிவிட்டாரே என்று வருத்தமாக இருந்தது.

அதன் பின் எனக்கும் இஸ்லாத்தை பற்றி சொல்ல ஆரம்பித்தார். "அல்லாஹ்தான் வணங்க தகுதியான ஒரே இறைவன். இயேசு கிருஸ்துவால் முன்னறிவிப்பு செய்யப்பட்ட அந்த தேற்றவாளர் தான் குர்ஆன் சொல்லும் கடைசி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்." என்றெல்லாம் கூறுவார். நான் அதையெல்லாம் பெரிதாக எடுத்து கொள்ளமாட்டேன். ஆனாலும் என் கணவர் என்னிடம் தொடர்ந்து இஸ்லாத்தை பற்றி சொல்லிக் கொண்டே இருந்தார்.

அப்போதுதான் எனக்கே இப்படி தோன்றியது. "எப்போது பார்த்தாலும் இஸ்லாம், குர்ஆன், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) என்றே பேசிக் கொண்டிருக்கிறாரே! சரி அதில் என்னதான் இருக்கிறது பார்ப்போம்" என்று முடிவெடுத்து தனிமையில் இருக்கும் போது குர்ஆனை வாசிக்க ஆரம்பித்தேன்.

குர்ஆனின் நிறைய வசனங்களை வாசித்தேன். வாசிக்க வாசிக்க குர்ஆன் என்னை ஆட்கொண்டு விட்டது. அதிலும் குறிப்பாக "நீங்கள் மூன்று கடவுள்களை வணங்குவதை விட்டும் விலகி நில்லுங்கள். நான் தனித்தவன். எனக்கு சந்ததிகள் இல்லை. துணைகள் இல்லை." என்ற கருத்தை தாங்கிய வசனங்கள் எல்லாம் என்னை மிகவும் சிந்திக்க வைத்தன.

கிருஸ்தவ மார்க்கத்தில் பிதா, சுதன், பரிசுத்த ஆவி எனும் முக்கடவுள் கோட்பாடு உள்ளது. இந்த தத்துவத்திற்கு பதில் கூறும் விதமாக

## அடிக்குறிப்பு-1

பைபிளின் இடம் பெறும் "தேற்றவாளர்" எனும் சொல் இயேசு கிருஸ்துவுக்கு பின் வரக்கூடிய தீர்க்கத்தரிசியை குறிக்கும் சொல்லாகும். அதுகுறித்த பைபிளின் விரிவான வசனங்கள் இதோ;

இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும் படியாக, நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன் (யோவான் 14:29)

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிற படியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். (யோவான் 14:17)

என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றவாளனே எல்லா வற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைவூட்டுவார். (யோவான் 14:26)

இனி நான் உங்களுடனே அதிகமாய் பேசுவ தில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறார். அவருக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. (யோவான் 14:30)

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றவாளன் வரும் போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சிகொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள்.(யோவான் 15:26-27)

வெறும் பைபிளை மட்டுமே படித்த கிருஸ்த வர்களுக்கு இந்த வசனங்களெல்லாம் புரியாது. யார் அந்த தேற்றவாளர்? ஏன் அவர் பைபிளில் இல்லை? இயேசு கிருஸ்துவுக்கு பின் அவர் வந்தாரா? இல்லையா? என்ற சந்தேகங்கள் எழும்பும்.

இந்த சந்தேகங்களுக்கெல்லாம் குர்ஆனை வாசிக்கும் போது விடை கிடைக்கும். தெளிந்த நீரோடைப் போல உண்மைகளை உணர ஆரம்பிப் பீர்கள். அதுதான் இந்த சகோதரியின் வாழ்விலும் நிகழ்ந்துள்ளது.

அந்த வசனங்கள் அமைதிருந்தது.

அதேப்போல குர்ஆனில் ஈஸா (அலை) அவர்களை பற்றிய வசனங்களை எல்லாம் படித்த போது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. பைபிளில் கூறப்படுகின்ற இயேசு கிருஸ்துதான் குர்ஆனில் சொல்லப்படுகின்ற ஈஸா (அலை) அவர்கள். ஆனால் அவர் இறைவனின் மகனெல்லாம் இல்லை. அவர் இறைத்தூதர் அவ்வளவுதான் என்று புரிந்தது. மேலும் இத்தனை நாட்களாக இறைவனை வணங்குவதற்கு பதிலாக இறைவனால் அனுப்பப்பட்ட இறைத்தூதரை வணங்கியுள்ளோமே! இது எவ்வளவு பெரிய தவறு என்று புரிந்தது.

## சோதனைகள்

சரி உண்மை என்னவென்று புரிந்து விட்டது. கணவர் வந்தவுடன் அவரிடம் சொல்லி நாமும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து விட்டேன். சரியாக அந்த நேரத்தில் தான் என் தாயிடமிருந்து போன் வந்தது.

எடுத்து பேசினேன். எப்போதும் நலம் விசாரித்து அன்போடு பேசும் அம்மா, இப்போது ஆரம்பத்திலேயே இப்படி கேட்டார்;

“என்ன உன் வீட்டுக்காரன் முஸ்லிமாயிட்டான் போல?”

“ஆமாம் அம்மா! அவர் முஸ்லிமாக மாறிவிட்டார்” என்று கூறினேன்.

அதற்கு என் அம்மா “அவர் மாறினால் மாறிக் கொள்ளட்டும். நீயும் மாறி விடாதே. மீறினால் அதன் பிறகு உன்னிடம் யாரும் பேச மாட்டோம்“ என்று கூறி போனை வைத்து விட்டார்.

அதைக்கேட்ட எனக்கு வேதனையாக இருந்தது. அழுதுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். சரியாக அப்போது என் கணவர் வீட்டிற்கு வந்தார். வந்து என்னை பார்த்ததும் என்ன நடந்தது என்று விசாரித்தார். நான் அவரிடம் எல்லாவற்றையும் கூறினேன்.

சுப்ஹானல்லாஹ். அவர் எனக்கு ஆறுதல் கூறினார். “இந்த உலகத்தில் அல்லாஹ்விற்காக யாரையெல்லாம் இழக்கிறாயோ, அதற்கேற்ற கூலி மறுமையில் உனக்கு கிடைக்கும்“ என்று கூறி என்னை தைரியப்படுத்தினார்.

அதன் பின் நான் மற்றும் எனது இரண்டு குழந்தைகள் கலிமா கூறி இஸ்லாத்தில் இணைந்து விட்டோம். இப்போது நாங்கள் ஒரு அழகிய இஸ்லாமிய குடும்பமாக வாழ்ந்து வருகின்றோம். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த இஸ்லாமிய மார்க்கத்தை எங்களுக்கு கொடுத்ததற்காக அதிகதிகம் நன்றி செலுத்துகிறோம். அல்ஹம்துலில்லாஹ்.

**- அஷ்ரஃப் இஸ்லாம்**


**இப்போது பரபரப்பான**

**விற்பனையில்**




விலை ரு. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**

**சென்னை - 600 001.**

**தொடர்ப்புக்கு : 8148129887**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் - செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை - டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்–இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்–
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.